REGISTERED
28 JAN 1904
MADRAS

உ

திருமகள் துணை.

# மனமோகனக்கண்ணாடி.

இஃது,

சௌபாக்கியவதி,

புரசை, பாக்கியம் அம்மாளால்

இயற்றி,

சென்னை - சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1903.

இதன்விலை அணா - 8.

RIGISTERED COPY-RIGHT.

# முகவுரை.

கல்விச்செல்வர் நிறைந்த தமிழ்நாட்டில் பெண்பாலாகிய யான் அறிவுள்ளவர்களால் ஆக்கப்பட்ட அருமையான பல நூல்களி லிருந்தும் என் சிற்றறிவுக் கெட்டிய சில விஷயங்களைத் திரட்டி, (மனமோகனக்கண்ணாடி) எனப் பெயரமைத்து புத்தகரூபமாக அச்சிட்டு வெளிப்படுத்தினேன். பூமாதேவிகருங்கல்லையும் இரத்தினக்கல்லையும் தாரதம்மியமின்றி அங்கீகரித்துக்கொண் டிருப்பதுபோல இதைக்காணும் பெரியோர்கள் என் புல்லறிவினால் செய்த இந்தப் புத்தகத்தை அங்கீகரிப்பார்களென வேண்டுகின்றேன்.

இப்படிக்கு,
பு. பா.

---

☞ இப்புத்தகம் தேவையானவர்கள் சிறுமணவூர்-முனிசாமி முதலியார் கம்பெனி, பெரம்பூர்போஸ்ட், மதராஸ் யென்ற விலாசத்துக்கெழுதி விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

---

உ

திருமகள் துணை.

# மனமோகனக்கண்ணாடி

## முதற்பாகம்

### ஆதிபகவான்.

ஆதியந்தம் இல்லாததும் உருவருவில்லாததும் குணங்குறி இல்லாததும் தனக்குமேல் ஒருகடவுள் இல்லாததும் மனோவாக்குக் கெட்டாததும் விருப்புவெறுப்பு இல்லாததும் உயிர்க்கு உயிராக இருப்பதும் இவைமுதலான அளவிறந்த தன்மையையுடைய நிஷ்களப்பொருளாயிருக்கின்றது என்றும் அவரால் உண்டாக்கப்பட்ட உலகமே அவருக்குச் சாக்ஷியாக யிருக்கின்றதென்றும் விளங்குகின்றது. எப்படியெனின், இவ்வுலகந்தானே உண்டானதா? ஒருவரால் உண்டாக்கப்பட்டதாவென்று விசாரணைசெய்யும்போது உலகஞ் சடமாகையால் தானே உண்டாகமாட்டாது. ஆதலால் ஒருவரால் உண்டாக்கப்பட்டதென்று நிச்சயப்படும். இவ்வளவு பெரியகாரியஞ்செய்தவர் சர்வ வல்லமையும் உள்ளவராதலால் அவரே ஆதிபகவானென்று தெரிந்து ஸ்தோத்திரஞ்செய்கிறோம்.

### 2.—விநாயகர்மீது நிந்தாஸ்துதி.

வீரஞ்சொரிகின்றபிள்ளாயுனக்குப்பெண்வேண்டுமென்றால்
ஆருங்கொடாருங்களப்பன்கபாலியம்மான்திருடன்
ஊருஞ்செங்காடுநின்றன்முகம்யானையுனக்கிளையோன்
பேருங்கடம்பனுன்றாய்நீலிநிற்கும்பெருவயிறே.

வீரத்தன்மை பொழிகின்ற பிள்ளையாரே! உனக்குப்பெண் வேண்டுமானால் ஒருவருங் கொடுக்கமாட்டார்கள். (ஏனென்றால்) உங்

கள் தகப்பன் கபாலி, அம்மான் திருடன், ஊரோ செங்காடு, உன் முகம்யானைமுகம், உன் தம்பிபேரும் கடம்பன், உன் தாய் நீலி, கும் பெரியவயிறு.

கபாலி-கபாலத்தையுடைய சிவபெருமான், திருடன் - வெண்ணெய் திருடியுண்ட ஸ்ரீ கண்ணபிரான், நீலி-நீலநிறமுடைய பார்வதிதேவியார்.

---

## 3.—கிருஷ்ணலீலாவிநோதம்.

ஓர்கால் பூமிபாரந்தீரும்பொருட்டு நந்தன் திருமாளிகையில் கோபாலனாய் அவதரித்திருந்த கண்ணன் ஆயர்பாடியில் கோபிகைகளாக அவதரித்திருந்த தெய்வப்பெண்களோடு யமுனாநதிதீரத்திற்குச் சென்று அங்கே லீலாவிநோதனாய் அவர்களோடு விளையாடிக்கொண்டிருக்கும்போது அந்த நதியோரத்தில் ஓர் படகு அவர்கள் கண்களுக்குத் தோற்றச்செய்தார். அதைக்கண்ட கோபிகைகள் சந்தோஷித்து ஸ்ரீபகவானை யிட்டுக்கொண்டுபோய் படகிலேறிச் சற்றேமனக்களிப்போடுலாவிக்கொண்டிருக்கையில் ஒருபிரவாகம்வந்து நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகப்பட்டது. சப்தமேகங்களும் பொழியத்தலைப்பட்டது. அப்போது கண்ணன் வீட்டில் விளையாடிக்கொண்டிருந்த என்னைக் கொண்டுவந்து வீணாய்வெள்ளத்தில்தள்ளிவிட்டீர்களே ஐயோ அப்பாவென்று மிகப்பயந்தவர்போல் அழத்துவக்கினார். இதுகளைக்கண்டு கோபிகைகள் ஒன்றுந்தோன்றாமல் மனங்கலங்கி திகிலடைந்து நாம்போனாலும்போகிறோம். அநியாயமாய் இந்தக்கண்ணனும் போகிறானே யென்னசெய்வோம் அசோதையெப்படிவருந்துவாளோ ஆயர்பாடி யென்னபாடுபடுமோவென்று எல்லாக்கோவியரும் கண்ணனைக்கட்டிக்கொண்டழ வாரம்பித்தார்கள். அச்சமயத்தில் சூத்திரதாரியாகிய கிருஷ்ணன் அப்படகினோர்பக்கத்தில் ஓர் துளையுண்டாயதன் வழியாக ஜலம் உள்ளே பிரவேசிக்கச் செய்துவிட்டார். அதைக்கண்டு கோபிகைகள் பின்னுமனந்தடுமாறி யதைநிறுத்த ஒருபாயமுந்தோன்றாமல் ஒவ்வொருத்தியாய் ரவிக்கைகளைக் கழற்றிச் சுற்றியடைத்தார்கள் அவை ஒவ்வொன்றாய் வெள்ளந்திலடித்துக்கொண்டுபோய் விட்டது. இரந்திரமோ வரவர அகன்றுபோயிற்று, ஜலமோவிசேஷமாய்வருகிறது, பாலகனோ அதிகமாயழுகிறான், பிரவாகமும் மழையுமோ அதிக்கிரமித்தன. கோபிகைகள் என்னசெய்வார்கள். ஒவ்

வொருத்தியாய் புடவையை யவிழ்த்துச் சுருட்டி அப்படகின் பொத்தலையடைத்தார்கள். அதுவுமொவ்வொன்றாய்வெள்ளத்திற்போய்விட்டது. பின்பு கோபிகைகளெல்லோரும் நிர்வாணமா யினிப்பிழைப் பதில்லையெனத் தீர்மானித்துத் தங்கள் பிராணனைக்கிஞ்சித்தும் நினையாமல் கிருஷ்ணன் அய்யோ பிரவாகத்திற் கிரையாகிறானேயென்று பிரலாபித்து, ஒருத்தி கருநெய்தற்பூப்போல் மனோகரமுள்ளவனேயென்றுகட்டியழுபவளும், செந்தாமரைக்கண்ணாவென்று முத்தமிட்டழுபவளும், நம்மாலல்லவோ யிவனுக்குக் கேடுசம்பவித்ததென்று பதறியழுபவளுமாக எல்லோரும் மூர்ச்சையானார்கள். அப்போது கண்ணன் புன்சிரிப்போடு அவர்கள் கதறுவதையும், சோர்வடைவதையும், கண்டு, அடி கோவியரே! நானொருபாயஞ்சொல்லுகிறேன்கேளுங்கள் அதனாலொருவேளை நாம் தப்பிப்போவோம், அதாவது நீங்களெல்லோரும் என்னெதிரே வரிசையாய் நின்று கண்மூடி கைகளைத் தலைமேல்குவித்துக்கொண்டு நாராயண ஸ்மரணஞ் செய்யுங்களடியென்றார். அப்படியே யவர்கள் சமணதேவதைகள்போல் நின்று கண்மூடி நாராயணஸ்மரணைசெய்யும்போது திடீலென்று மழையும் வெள்ளமும்நின்று படகும் கரைசேர்ந்தது. அதைக்கண்டு எல்லோரும் ஆச்சரியமடைய, கோபிகைகள் கிருஷ்ணனைக் கட்டியணைத்து முத்தமிட்டெடுத்துக்கொண்டு கரையிலிறங்கி அங்கிருந்த தங்கள் புடவைகளையும் ரவிக்கைகளையு மெடுத்துடுத்திக்கொண்டு இஃது கண்ணன் கூத்தென்று மகிழ்ந்து ஆயர்பாடிபோய்ச்சேர்ந்தார்கள்.

## 4.—ஔவையாரும் முருகக்கடவுளும்.

ஒருநாள் ஔவையார் காடுகளும்மலைகளுமடர்ந்தமார்க்கமாகப் போய்க்கொண்டிருக்கும்போது சுப்பிரமணியர் ஔவையாரை யேமாற்றிப் பரிகாசஞ்செய்யவெண்ணி ஓர்மாட்டுக்காரப்பையன் வேடம்பூண்டு ஒரு நாகமரத்தின் பேரிலேறிப் பழங்களைப்பறித்துத் தின்றுகொண்டிருந்தார். அந்த மரத்தடியில் ஔவையாரும் வந்து ஆயாசத்தால் உட்கார்ந்து மரத்தின்மேலிருக்கும் மாட்டுக்காரப் பையனைப் பார்த்து அடாதம்பி யெனக்கு மிகவும் ஆயாசமாகவிருக்கிறபடியால் கொஞ்சம் நாகப்பழம் பறித்துப்போடென்று கேட்டுக்கொண்டாள். அதற்கு அந்தப்பையன் ஓ! கிழவியே யுனக்குச்சுடுகிற பழங்கள்வேண்டுமோ? சுடாதபழங்கள் வேண்டுமோ? சொல்லென்றான், இதைக்கேட்ட

வுடன் ஔவையார் ஆச்சரியப் பட்டு நாகப்பழத்தில் சுடுகிறபழமு மிருக்குமாவென் றாலோசித்து ஒன்றுந்தோன்றாமல்அப்பா! சுடுகிறப ழம் எனக்குவேண்டியதில்லை சுடாதபழமே வேண்டுமென்றாள். உட னேபையன் மரக்கிளைகளைக்கையால்பிடித்துக் குலுக்கிவிட்டான் அதி லிருந்து கனிந்த பழங்களுங் கீழேயுதிர்ந்தன. அப்போது ஔவையார் கனிந்தபழங்களில் சிலவற்றைப் பொறுக்கிப்பார்த்து அதுகளில் கீழி ருந்த மணல் ஒட்டிக்கொண்டிருந்ததால் அதை வாயினால் ஊதினாள். அதைப்பார்த்த மாட்டுக்காரப்பையன் ஓ கிழவியே! நீ சுடாதபழம் கேட்டவள் சுடுகிறபழத்தைத் தின்னப்போகிறையே வாய்வெந்து விடப்போகிறது நன்றாகவூதியாறினபின்பு சாப்பிடென்றான். ஔ யாரப்போது சுடுகிறபழம் பழுத்ததென்றுஞ் சுடாதபழங் காயென் றுந்தெரிந்துகொண்டு இக்கருத்து முன்னமே நமக்குத்தெரியாது போயிற்றேயென்று வெட்கமுற்று.

கருங்காலிக்கட்டைக்குநாணுக்கோடாலி
இருங்கதலித்தண்டுக்குநாணும்-பெருங்கானில்
காரெருமைமேய்க்கின்றகாளைக்குநான்றோற்ற
தீரிரவுந்துஞ்சாதென்கண்.

கருங்காலிமரத்துக் கட்டைகளைக் காணாமல் துண்டு துண்டாக வெட்டவல்ல கோடாலியானது கையாலோடிக்கத் தக்க பெருமை பொருந்திய வாழைத்தண்டுகளை வெட்ட அதன்முனை மழுங்கி நாணு மல்லவா! அதுபோலச்சிறந்த வித்துவான்களும் அஞ்சும்படியான நான் இப்பெருங்காட்டில் கறுப்பெருமை மேய்க்கின்ற சிறுபையலுக்குத் தோற்றபடியால் இனி இரண்டிராத்திரிக்கென் கண் நித்திரை செய் யமாட்டாது என்னும் பொருளையுடைய மேற்குறித்த வெண்பாவைச் சொன்னாள். இப்படிச சொல்லியும் மனதாறாமல் உலகத்தாரையும் நோக்கிப்புலவரே! கற்கப்பட்டது கைமண்ணளவேயாகும், கற்கப்ப டாதது உலகினளவேயாகும் என்று பொருந்திய கலைமாதும் சொல் லுகிறாள்; (ஆதலால்) மிகவும் வெறும்பந்தயம் கூறவேண்டாம், எறும்பும் தன்கையால்எட்டுசாணளவுள்ளதேயாகும்—சிறந்தகுருவிக் கூண்டும், வன்மையாகிய அரக்கும், பழமையாகிய சிதலும், தேனும், சிலம்பிப்பூச்சியின்கூடும் எவர்க்கும் செய்வதற்கு அருமையாகும் (ஆதலால்) நாம் மிகவும் வல்லமையுடையோமென்று வல்லமைபேச வேண்டாம்; யாவருக்கும் ஒவ்வொருகாரியஞ்செய்வதற்கு எளிதாகும் என்னுங்கருத்துகொண்டங்கிய பின்னிரண்டு பாடலைபுஞ் சொன்னாள்.

கற்றதுகைம்மண்ணளவுகல்லாதுலகளவென்
றுற்றகலைமடந்தையோதுகிருள்-மெத்த
வெறும்பந்தயங்கூறவேண்டாம்புலவீர்
எறும்புந்தன்கையாலெண்சாண்.

வான்குருவியின்கூடுவல்லரக்குத்தொல்கறையான்
தேன்சிலம்பியாவர்க்குஞ்செய்யரிதால்-யாம்பெரிதும்
வல்லோரேயென்றுவலிமைசொலவேண்டாங்காண்
எல்லோர்க்குமொவ்வொன்றெளிது.

இதுகளைக்கேட்டவுடனே மாட்டுக்கார பையனுக இருந்த சுப்பிரமணிய சுவாமிகளுக்கு ஔவையார் பேரில் கிருபை வந்து தம்முடைய நிஜரூபத்துடனே மரத்தைவிட்டிரங்கி ஔவையார் கரங்களைப் பிடித்துக்கொண்டு நாம் உம்முடன் விளையாட வந்ததேயன்றி உலகத்திலுமக்குச் சமானமானவர்கள் யாரிருக்கிருர்கள் ஆகையால் சந்தோஷமாக இருமென்றுசொல்லி உம்முடைய வாக்கால் லோகோபகாரமாக முக்கியநீதிகளை வெளிப்படுத்த வேணுமென்று எனக்குள் வெகுநாளாக இஷ்டமிருப்பதால் அவைகளைச் சொல்லவேண்டுமென்ன அப்போது ஔவையார் அஃதென்னென்றுவினவ, சுப்பிரமணியர் உலகத்தில் கொடியது-இனியது-பெரியது-அரியது-இன்னின்ன தென்றுரைக்க வேண்டுமென்ன அவ்வண்ணமேயாகட்டுமென்று ஔவையாரருளிச்செய்த ஆகவல்கள்.

## கொடியது.

கொடியதுகேட்கில்நெடியவெவ்வேலோய்
கொடிதுகொடிதுவறுமைகொடிது
அதனினுங்கொடிதுஇளமையில்வறுமை
அதனினுங்கொடிதுஆற்ருெணுக்கொடுநோய்
அதனினுங்கொடிதுஅன்பிலாப்பெண்டிர்
அதனினுங்கொடிதுகொடிது
இன்புறவவர்கையிலுண்பதுதானே

கொடியதைக்கேட்குமிடத்து நெடுமையாகிய வேலாயுதத்தையுடையவனே! தரித்திரங் கொடியது கொடியது கொடியது, இளமையில்நேரிட்டதரித்திரம் அதினும் கொடியது, சகிக்கக்கூடாத கொடிய வியாதிஅதினும் கொடியது, அன்பில்லாத பெண்டிரையுடைத்தாயிருத்தல்அதினும் கொடியது, இன்பமுண்டாக அவர்கையில் அன்னம்புசிப்பது அதினும் கொடியது.

## இனியது.

இனியதுகேட்கில்தனிநெடுவேலோய்
இனிதுஇனிதுஏகாந்தமினிது
அதனினும்இனிதுஆதியைத்தொழுதல்
அதனினும்இனிதுஅறிவினர்ச்சேர்தல்
அதனினும்இனிதுஅறிவுள்ளோரைக்
கனவிலும்நனவிலும்காண்பதுதானே

இனியதைக் கேட்பையாயின் ஒப்பற்ற நெடிய வேலாயுதத்தை யுடையவனே! தனித்திருத்தல் இனியது இனியது இனியது, ஆதி பகவானைத்தொழுதல் அதினும் இனியது, அறிவுள்ளவரைக்கூடுதல் அதினும் இனியது, அறிவுள்ளவரை கனவினும் நனவிலும் தரிசிப்பது அதினும் இனியது.

## பெரியது.

பெரியதுகேட்கில்எரிதவழ்வேலோய்
பெரிதுபெரிதுபுவனம்பெரிது
புவனமோநான்முகன்படைப்பு
நான்முகனோகரியமாலுந்திவந்தோன்
கரியமாலோஅலைகடல்துயின்றோன்
அலைகடலோகுறுமுனிகையிலடக்கம்
குறுமுனியோகலசத்திற்பிறந்தோன்
கலசமோபுவியிற்சிறுமண்
புவியோஅரவினுக்கொருதலைப்பாரம்
அரவோஉமையவள்சிறுவிரல்மோதிரம்
உமையோஇறைவர்பாகத்தொடுக்கம்
இறைவரோதொண்டருள்ளத்தடக்கம்
தொண்டர்தம்பெருமையைச்சொல்லவும்பெரிதே

பெரியதைக்கேட்பையாயின் நெருப்புப்பரவிய வேலாயுதத்தை யுடையவனே! உலகம் பெரியது பெரியது பெரியது, உலகமோ பிரமனது சிருஷ்டி, பிரமனோ திருமாலின் உந்திக்கமலத்திற் பிறந்தவன், திருமாலோ அசையாநின்ற கடலில் உறங்கினவன், அசையாநின்ற கடல் அகத்தியரது உள்ளங்கையில் அடக்கம், அகத்தியனோ குடத்திற்பிறந்தவன், குடமோ நிலத்திலுள்ள அற்பமண், நிலமோ ஆதிசேடனாகிய பாம்புக்கு ஒருதலைப்பளுவு, ஆதிசேடனோ உமாதேவிக்குச் சிறுவிரலிலணியப்பட்ட மோதிரம், உமையம்மையோ சிவபெருமானது இடதுபாகத்தில் ஒடுக்கம், சிவபெருமானோ தொண்ட

ருள்ளத் தொடக்கம், அடியாரது மேன்மை சொல்வதற்குப் பெரி தேயாகும்.

அரியது.

அரியதுகேட்கில்வரிவடிவேலோய்
அரிதுஅரிதுமானிடராதலரிது
மானிடராயினுங்கூன்குருடுசெவிடு
பேடுநீங்கிப்பிறத்தலரிது
பேடுநீங்கிப்பிறந்தகாலையும்
ஞானமுங்கல்வியுநயத்தலரிது
ஞானமுங்கல்வியுநயந்தகாலையும்
தானமுந்தவமுந்தான்செயலரிது
தானமுந்தவமுந்தான்செய்வராயின்
வானவர்நாடுவழிதிறந்திடுமே

அரியதனைக் கேட்பையாயின் நீண்டவடித்த வேலாயுதத்தை யுடையவனே! மனிதராகப்பிறப்பது அரியதுஅரியதுஅரியது, மனிதராகப்பிறந்தாலும் கூன்குருடுசெவிடுபேடு என்பவற்றையொழிந்து பிறப்பதுஅரிது, இவைகளையொழிந்துப்பிறந்தகாலத்திலும் ஞானத்தையும் கல்வியையும் விரும்புதல்அரியது, ஞானத்தையும் கல்வியையும் விரும்பினகாலத்திலும் தானத்தையும் தவத்தையும் செய்தல் அரியது,தானத்தையும் செய்வாராயின் சுவர்க்கலோகம் வழிதிறந்துவைக்கப்படும் என்றுமுடித்தாள்.

இவைகளைக் கேட்டவுடனே சுப்பிரமணியர் மிகவுஞ் சந்தோஷமுள்ளவராய் ஔவையாரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு போய் விட்டனர்.

## 5.—ஆலிலையில் அமர்ந்தருளல்.

பிரமாதி ஸகலஜீவ ராசிகளும் ஸமஸ்தலோகங்களும் அழியும் மகாப்பிரளய காலத்தில், பகவான் அகில சராசரப்பொருள்களையும் தமது திருவுதரத்தடக்கி அந்தப்பிரளய மகாஸமுத்திரத்தில் ஒரு சிறுகுழந்தையாய் ஓராலிலையில் அமர்ந்தருள்கின்றார். இதுபற்றியே, அவருக்கு "வடபத்ரசாயீ" என்னும் திருநாமம் வழங்குகின்றது. [வடபத்ரம்-ஆலிலை.]

## 6—மலையைக்குடையாகப்பிடித்தது.

ஆயர்கள், வருடந்தோறும் நல்லமழைபெய்வித்துப் பயிர்பச்சைகள் செழிக்கச்செய்வதற்காக மேகநாதனாகிய தேவேந்திரனுக்குத்தை மாதத்தில் பொங்கலிட்டுப் பூசைசெய்வது வழக்கம். ஸ்ரீமந்நாராயணன் கிருஷ்ணாவதாரம் செய்திருந்தகாலத்தில் வழக்கம்போலப் பொங்கலிட்டு அத்தேவேந்திரனுக்கு நிவேதிக்கையில் ஸ்ரீகிருஷ்ணபகவான் அதனைத்தடுத்துத் தான் ஏற்றுக்கொண்டார். அதைக்கண்ட தேவேந்திரன் கோபங்கொண்டு சிலாவருஷம் வருஷிக்கும்படிமுகிலை ஏவினன். அவன் ஏவற்படி அம்முகில் சிலா வருஷம் வருஷிக்கவே, ஆயர்களும் பசுக்கூட்டங்களும் அதனைச்சகிக்கவாற்றாது பரிதபிப்பதைக்கண்ட ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி கோவர்த்தனகிரியைக் குடையாகத் தூக்கிப்பிடித்து அக்கல்மழையைத் தடுத்து ஆயர்களையும் ஆனிரைகளையுங் காத்தருளினர்.

இந்திரனுக்குப் (போகி) என்ற பேருமுண்டாதலால் இப்பண்டிகை போகிபண்டிகையென்று சொல்லுகின்றார்கள்.

---

## 7.—வணிகமல்லையர்.

வைசியர்களுக்குள் தலைமைபூண்டிருந்த மல்லையரென்னும் ஓரன்பர், சந்திரனைச் சடாபாரத்திற்றரித்த சிவபெருமானை நிதம் தரிசிக்காமல் உணவுகொள்ளாமையே விரதமாக அநுஷ்டித்துவந்தார். அவரொருநாள் வர்த்தக நிமித்தமாக அயலூருக்குப் போகநேரிட்டு, அங்கே சிவாலயத்தைக்காணாதபடியால் இராத்திரி வெகுநேரமாகியும் பசியினாலுழன்றுகொண்டிருந்தார். அப்போது கூடஇருந்த அவருடைய மைத்துனன் அவர் புசிக்காது தான்புசிப்பது தகுதியல்லவென்றெண்ணி ஊருக்கு அருகிலிருந்த ஒரு புதரிலே யொரு பெரியபடியைக்கவிழ்துவைத்துத் திரும்பிவந்து சிவலிங்கமிருக்கிறது வந்துதரிசியுமென் றவரிடத்திற்சொன்னான். உடனே அவர் அதிக சந்தோஷத்தோடுபோய் அங்கே அவனேர்விளக்கேற்றிக்காட்ட தேகம்புளகிக்கும்படிச் சிவலிங்கதரிசனஞ்செய்துவந்து தம்முடைய நியமம்முடிந்ததென்னும் மனமகிழ்ச்சியோடு உணவருந்தியிருந்தனர். அச்சமயத்தில், மைத்துனன்சிரித்து மரத்தடியில் நான்வைத்துவந்தபடியைப் பணிந்து வணங்கின பெரியவரிவர்தாமென்று அவரைப் பரிகா

சஞ்செய்து அளக்கப் படிவேண்டியதால் செடியிலிருக்கிற படியை யெடுத்து வாருமென்ருன். அதைக் கேட்டவுடனே மல்லையர் அதிக கோபாவேசத்தோடெழுந்து பார்வதிக்கு நாயகனுகிய பரமசிவமென் றறியாமல் இப்படித் துன்மார்க்கவார்த்தை சொல்லலாகுமா? சிவசிவ எனக்காதையுங்கண்ணையும் மூடிக்கொண்டு புத்திகெட்டவனே! இப் படிப் பரிகாசம் பண்ணலாமா? காண்போம் வாவென்று அவர் மைத் துனனைக் கூடவழைத்துக்கொண்டுபோய்ப்பார்க்கும்போது புதரோடு கூடிய செடியே கோபுரம் மதில்களமைந்த ஒரு பெரிய கோயிலாக வும், படியே ஒரு சிவலிங்கமாகவும், அச்சிவலிங்கத்துக்கு முன்னே நந்திதேவரும் அருகில் பிரகாசம்பொருந்திய ஒரு தீபமும் தோற்றக் கண்டு இவ்வுலகத்தோரெல்லாம் துதிக்கும்படி அவர்கள் பிரமானந் தத்தில் மூழ்கினவரானுர்கள்.

---

## 8.—கம்பர் பாம்புகடித்திறந்தபிள்ளையையெழுப்பியது.

கம்பர் தாம்பாடின இராமாயணம் ஆறுகாண்டங்களுடனே ஒட் டக்கூத்தர் பாடிய உத்தரகாண்டமும் சேர்த்துப் பன்னீராயிரம் கவி களையும் எழுதுவித்துச்சோழன் முதலானவர்களுக்கு இராமாயணம் பாடி முடித்த செய்தியை அறிவித்து இது விஷ்ணுபரமாகையால் இதை அவ்விஷ்ணுவின் சகல திவ்வியதேசங்களிலும் முக்கியமாகிய திருவரங்கத்தில் அரங்கேற்றல் செய்யவேண்டுமென்று அவர்களனு மதிபெற்று புஸ்தகத்தை எடுப்பித்துக்கொண்டு ஸ்ரீரங்கத்திற்குப் போய் அக்காலத்தில் அந்தஸ்தலத்திலிருந்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்குச் செய்திதெரிவிக்க, அவர்கள் மேற்படிகாவியத்தில் நரஸ்துதிபண்ணப் பட்டிருக்கிறதென்பதனுலும், மற்றுஞ்சிலவற்ருலும் அசூயைகொண்டு அக்கருத்தைவெளிப்படுத்தாமல், சமஸ்கிருதபாஷையாயிருந்தால் ஒன் றும் யோசனைபண்ணவேண்டியதில்லை, தமிழாதலால் எப்படியிருக்கு மோவென்று எங்களுக்கு அனுமானமாயிருக்கிறது. நீரோபிரபலவித்து வான், உமது பாண்டித்தியத்தைக் குறித்தும், யோக்கியதையைக்கு றித்தும் சொல்லுகிறதற்கு நாங்கள் அருகர்களல்ல, தமிழிலே மகா வித்துவான்களா யிருக்கிறவர்கள் தில்லைமூவாயிரவரென்னும் தீட்ச தர்களும், பின்னும் சிற்சில பெயர்களுமாதலால், அவர்கள் குற்றம் சொல்லாதபடி கொஞ்சம் பிரயாசைபட்டாவது அங்கேபோய் அவர்க ளுக்குக்காட்டி அவர்களுடைய கையொப்பம் வாங்கிவந்தால் உமது

காவியத்திற்கும் உமக்கும் அதிககௌரவமா யிருக்குமென்றார்கள். அவர்கள் சொற்படியே கம்பர் சிதம்பரத்திற்குப் போய்த்தில்லை மூவா யிரவர்களிற் சிலரைக்கண்டு இந்தச் செய்தியை அறிவிக்க, அவர்கள் நாங்கள் மூவாயிரம் பெயரும் கூடினாலல்லாமல் ஏகதேசத்தில் இத ற்கு உத்தரம் சொல்லுகிறதெப்படி, நீரின்னாரின்னாரிடத்திற்போமெ ன்று சிலரைக் குறித்து அவர்களிடத்தில் அனுப்ப, அங்கேபோன பொழுது அவர்களும் மூவாயிரம் பெயர்களும் ஒன்றாகச்சேர்ந்து ஆக வேண்டிய காரியத்திற்கு நாங்களென்ன செய்யலாமென்று வேறு சிலரைக்குறித்து அவர்களிடத்திற் போமென்று அனுப்பினார்கள். அ வர்களும் மற்றுமுள்ள யாவரும் இந்தப்படியே பலரிடத்திலும் போ கச்சொல்ல, கம்பரும் அங்கங்கே பாவோடுங் காலாய் நாள்தோறும் போய்ப்போய்க் காலோய்ந்துபோனதேயல்லாமல் ஒரு பயனுமில்லை. எவர்களுடனே சொன்னாலும் மூவாயிரம் பெயரும் ஏககாலத்திலே கூடினால்தான் உமது எண்ணம் முடியும், இல்லாவிட்டால் ஒருயுகம் சென்றாலும் நீரெடுத்த காரியம் சித்தியாகமாட்டாதென்று சொல்லக் கேட்டு, இதென்ன! ஊர்கூடிச்செக்குத்தள்ளவேண்டியதாயிருக்கிற தேயென்று வெகுநாளாக கலக்கமடைந்து, ஒரு நாள் இராத்திரி போ ஜனம்செய்து சயனித்துக் கொள்ளும்பொழுது, தில்லைத்திருச்சித் திரகூடத்தில் எழுந்தருளிய ஸ்ரீகோவிந்தராஜப்பெருமாளைத் தியா னித்து ஓ ஜனார்த்தனா, பக்தபராதீனா, ஆபத்பாந்தவா, அநாதரட்சகா, எம்பெருமானே, அடியேன் இலவுகாத்தகிளிபோல எத்தனைகாலமா கத்தில்லை மூவாயிரவருடைய தலைவாசல்காப்பேன்! ஆரையடுத்தா லும் நமக்கென்னவென்று உபேட்சையா யிருக்கிறார்களேயல்லாமல் ஒருவர்க்காவது இதைப்பற்றி எவ்வளவும் சிந்தையில்லையே! இந்தக்கா வியம் லோகப்பிரசித்தமாகவேண்டுமென்று உனக்கே திருவுளமில்லை யோ! நீ சூத்திரதாரி, நான் சூத்திரப் பிரதிமையாதலால் நீ அசைத்த படியல்லது நானாகஇயங்கமாட்டுவேனோ, உன்சங்கற்பம் அப்படியிருந் தால் எளியேன் என்ன செய்வேனென்று அதிக விசனத்துடனே கண்ணுறக்கங்கொண்டார். அப்பொழுது அவருடையசொப்பனத்தில் அந்தத் தீனதயாளன் எழுந்தருளி என் பிள்ளாய் துக்கிக்கிறாய், நீ இராமாயணம் அரங்கேற்றவேண்டித் தில்லை மூவாயிரவரைச் சபை கூட்டுவிப்பதற்காக வெகு பிரயாசைப்பட்டாய், இனி உனக்கொரு வருத்தமுமில்லை. இதுவரையில் நீ பசியேப்பக்காரனாயிருந்தாய் அவர் கள் புளியேப்பக்காரர்களா யிருந்தார்களாகையால், உனக்குண்டான ஆவசியம் அவர்களுக்கில்லாமற் போயிற்று. நாளை உதயத்திலே அத்

தில்லை மூவாயிரவரில் ஒருவருடையபிள்ளை பாம்புதீண்டி இறந்து போகும், அதைத் தகனசமுஸ்காரம் செய்வதற்காக அவர்கள் மூவாயிரம் வீட்டுக்காரரும் அந்தப்பிள்ளை இறந்த வீட்டினிடத்தில் வந்து கூடுவார்கள். அத்தருணத்திற்போய் நீ பாடிய இராமாயணத்தில் நாக பாசப்படலத்தை எடுத்து இன்ன இன்ன பாடலைவாசித்தால் இறந்த பிள்ளைபிழைக்கும். அதைக்கண்ட மாத்திரத்தில் அவர்கள் தடை யின்றிகையொப்பம் கொடுப்பார்களென்று அருளிச்செய்தார். விடிந்த பொழுது பெருமாள் அருளிச்செயலின்படி கம்பர் எழுந்துபோய் யாவருங் கூடியிருப்பது கண்டு, இராமாயணம் அரங்கேற்றவேண்டு மென்ன, அவர்கள் நாங்கள் குழந்தையைப் பறிகொடுத்துப் பரிதபிக் கிற சமயத்தில் "இடக்கிறதெல்லாயிடக்கட்டும் கிழவனையெடுத்து மணைமேல்வையுங்கள்" என்பதாக உம்முடைய இராமாயணத்தை அரங்கேற்ற வேண்டுமென்கிறீர். இதுதானா, ஏற்றசமயமென்றார்கள். இவர் நான் பன்னிரண்டுவருஷம் காத்ததற்காக இன்றைக்குத்தானே நீங்கள் மூவாயிரம் பெயரும் ஒருங்கு சேரக்கூடும்படி சம்பவித்தது. இதுதப்பினால் இனி எந்தக்காலத்தில் இப்படிப்பட்டசமயம் கிடைக்கு மென்று சொல்லி, குழந்தை எவ்விதத்தாலிறந்ததென்ன, அவர்கள் பாம்புகடித்து இறந்தது; விஷமிறங்குதற்குத் தலையிலே குடோரியிட்டும், மற்றும் எத்தனையோ மணிமந்திர ஔஷதங்களைச்செய்தும், அனுகூலப்படவில்லை யென்றார்கள். கம்பர் அந்தப் பிள்ளையை நான் பார்க்கவேண்டுமென்ன, அவர்கள் எடுத்துவந்து காண்பிக்க இவர் கடிவாயைப் பார்த்துப் பல் ஒன்று, இரண்டு, மூன்றுவரைக்கும் பதிந் தாற் பயமில்லை இது பாம்புக்குள்ளயமன், யமதூதன், காலன் முதலிய நான்கு பற்களும் பதிந்தபடியால் அசாத்தியமென்றே சொல்வார்கள். பிரம்புகொண்டு அடிக்க உடம்பில் தழும்புகண்டாற் சாத்தியமாகும் அப்படி ஏதாவது செய்து பார்த்தீர்களாவென்ன, அவர்க ளதுவும் செய்தோம் கொஞ்சமாவது தழும்புகாணவில்லையென்றார் கள். அப்பொழுது ஊர்க்குடிமிவந்து, ஐயா இந்தக் குழந்தை எண்ணெய் தேய்த்துக்கொண்டு தலைமுழுகி வருமளவிற் கடித்தபடியினாலே விஷம் அதிசீக்கிரமாகத் தலைக்கேறிப் பற்கள்கருகக் கண்பஞ் சடைந்து போயிற்று. இனி என்ன பிரயத்தினம் செய்தாலும் பலிக் கிறது பிரயாசமே யென்றான். கம்பரும்மெய்தான் அப்பியங்கனம் பண்ணியிருந்தாலும், மதுவுண்டிருந்தாலும் சீக்கிரமாக விஷம் சிரசுக்கேறிவிடும். எப்படியிருந்தாலுமிருக்கட்டும், இப்பொழுது பகவத் கடாட்சத்தால் இந்தப் பிள்ளை உயிர்பெற்று எழுந்திருக்குமானால்

நமது அபீஷ்டப்படி நடத்துகிறீர்களாவென்ன, அவர்கள் ஐயா! நீர் செத்தவர்கள் பிழைப்பார்களென்பது ஆச்சரியமாயிருக்கிறது! ஒரு வேளை அப்படி நடந்தால் உமது இஷ்டத்திற்கு ஏற்க ஆடங்கமின்றி நடந்துகொள்வோமென்றூர்கள். அதுகேட்டு அவர் பகவானை மனதில் ஸ்மரித்துத்தாம்பாடிய ராமாயணபுஸ்தகத்தை அவிழ்த்து, நாகபாசப் படலத்தை எடுத்து, லட்சுமணன் முதலானவர்கள் இந்திரஜித்து பிரயோகித்த நாகபாசத்தாற்கட்டுண்டு, மூர்ச்சையாய்க் கிடக்கையில், சகலபுவனக் கர்த்தாவாகிய ஸ்ரீமந்நாராயணன், பூர்வம் சங்கற்பித்த பிரகாரம், கருடன் வந்ததனுல் அந்த ஆபத்து நிவாரணமான சந்தர்ப் பத்திற் சில பாடல்களை வாசித்தார். அவற்றுள்,

பல்லாயிரத்தின்முடியாதபக்கமவைவீசவந்தபடர்கால்
செல்லாநிலத்தினருளோடுசெல்லவுடனின்றவாளிசிதறுற்
றெல்லாமவித்துமுணர்வோடுமெண்ணியறனேவிளக்குமுரவோன்
வல்லாஞெருத்தனிடையேபடுத்தவடுவானமேனிவடுவும்.

என்பது ஒருசெய்யுள். இதன்பொருள்—பன்னக வைரியென்று சொல்லப்பட்ட கருடனுகிய ஆபத்சகாயன் திருப்பாற்கடலிலிருந்து கிருபையுடனே காலங்கழித்தாலும் ஓரிறகேனும் உதிராத அழியா திருக்கின்ற தனது நெடிய சிறகைத் திறந்தமட்டும் விரித்து அசைத் துக்கொண்டு அதிவேகமாய்ப் பறந்துவர, அந்தச் சிறகடிக்காற்றுனது யுத்தபூமியிற் பிரவேசிக்க, அதனுல் அங்குள்ளவர்களுடைய சரீரத் தை இருக்கி ஒடுக்கி நிலைபெயரவொட்டாமற் கட்டியிருக்க, நாகபா சங்கள் பட்டுப்பட்டென்று அற்றுப்போயின. அற்றவுடனே, சகல இந்திரியங்களையும் அடக்கி மூவாசைகளையும் பற்றறவிட்டு ஆத்ம உஜ்ஜீவனம் இதுவேயென்று விவேகத்தோடு நிச்சயித்து, எதியாச் சிரம தர்மத்தையே வளர்க்கின்ற திடசித்தமுடைய ஒரு தத்துவ ஞானி விஷயத்தில், மூடாத்துமாக்கள் அகங்காரத்தால் விளைக்கும் பழிபாவங்கள் அவனை அணுகாது மாயுந்தன்மைபோல, அந்நாகபாசத் தாற் கட்டுப்பட்ட இளையபெருமாள் முதலானவர்களுடைய திரு மேனிவடுக்களும் தோன்றுமல் மாறிப்போயினவென்பதாம். அடுத்த செய்யுள்.

வாசங்கலந்தமறைநாளநூலின்வகையென்பமிதன்னைமழையென் [ம்
றூசங்கைகொண்டகொடைமீளியண்ணல்சரராமன்வெண்ணெய்நுகு
தேசங்கலந்தமறைவாணர்செஞ்சொலறிவானரென்றிம்முதலோர்
பாசங்கலந்தபசிபோலகன்றபதகன்றுறந்தவுரகம்.

இ-ள். மகாபாதகனுகிய அந்த இந்திரஜித்து பிரயோகித்த நாகபாசம் தொலைந்தவகை எப்படியெனில், சிலர் தாமரைத்தாளிலிருந்தெடுக்கும் மெல்லிய நூல்போல எளிதில் அற்றதென்பார்கள். அது ஒரு ஆச்சரியமல்ல, மேகம் மழை சொரிகின்றதென்று ஆசங்கிக்கும்படி அமிர்தமாகக்கொடுக்கின்ற பெருங்கொடை வள்ளலாகிய சடையப்ப முதலியாருடைய தம்பி கண்ணப்பமுதலியாருக்குப் பின் பிறந்த சராமமுதலியாரானவர், சதாகாலமும் பிரபலமாகச் செய்யும் அன்னதானத்திற் பற்பல தேசங்களிலுமிருந்து திருவெண்ணெய் நல்லூரை நாடிவரும் வைதிகப் பிராமணர்களும், வித்வஜனர்களும், அவர்களைச் சேர்ந்த பந்துவர்க்கத்தாரும், உசிதமான பஞ்சபட்சிப் பரமான்னம் திருப்தியாகப் புசித்து, அவர்களுடைய பசிதொலைவது போலவே தொலைந்துபோயிற்றென்பதாம். மற்றும் சிலபாடல்களையும்வாசித்து,

ஆழியான்பள்ளியணையேயவன்கடைந்த
ஆழிவரையின்மணித்தாம்பே - பூழியான்
பூணேபுரமெரித்தபொற்சிலையிற்பூட்டுகின்ற
நாணேயகலநட.

சக்கராயுதத்தை யுடையவனுகிய திருமால் பள்ளிகொள்ளுதற்குரிய சயநமே, அவன் கடைந்த திருப்பாற்கடலில் மத்தாகநட்ட மந்தரமலையில் கட்டிய அழகிய கடைகயிறே, விபூதியைத்தரித்த சிவபெருமானது ஆபரணமே, (அவன்) திரிபுரங்களை யெரித்தற்குக் கருவியாயிருந்த (மேருவாகிய) பொன்வில்லிற் பூட்டிய நாணே தூர நடப்பாயாக எனவும்,

மங்கையொருபாகன்மார்பிலணியாரமே
பொங்குகடல்கடைந்தபொற்கயிறே - திங்களையும்
சீறியதன்மேலூருந்தெய்வத்திருநாணே
ஏறியபாம்பேயிறங்கு.

மங்கைப் பருவத்தையுடைய உமாதேவியை ஒருபாகத்திலுடையவராகிய சிவபெருமானது மார்பிலணிந்த மாணிக்க ஆரமே, பொங்குகின்ற பாற்கடலைக் கடையக் கருவியாயிருந்த அழகிய கடைகயிறே, பிறைச்சந்திரனையுங் கோபித்து அதன்மேல் தவழ்கின்ற தெய்வீகமாகிய அழகிய கிரகமே, நீயேறின பிரகாரமே யிறங்குக எனவும்,

பாரைச்சுமந்தபடவரவேபங்கயக்கண்
வீரன்கிடந்துறங்குமெல்லணையே - ஈரமதிச்
செஞ்சடையான்பூணுந்திருவாபரணமே
நஞ்சுடையாய்தூரநட.

பூமியைத்தாங்கிய படத்தையுடைய பாம்பே, தாமரை மலர் போலும் கண்களையுடைய வீரனுகிய திருமாலானவன் படுத்துறங்குகின்ற மெல்லிய சயனமே, குளிர்ச்சியாகிய சந்திரனை யணிந்தசெவந்த சடாமகுடத்தையுடைய சிவபெருமான் தரிக்கின்ற அழகாகிய ஆபரணமே, விஷத்தையுடையவனே அகலப்போ எனவும்

நூதனமாக மூன்று வெண்பாப்பாடி அனந்தன், வாசுகி, சங்கன், குளிகன், பதுமன், மகாபதுமன், தட்சகன், கார்க்கோடகனென்னும், அஷ்டமாநாக முதலான சகல சர்ப்பங்களுக்கும்அதிபதியாகிய ஆதிசேஷனைப் பிரார்த்தித்தவுடனே, அங்கொரு புற்றிலிருந்து ஒரு சர்ப்பம் வெளிப்பட்டு வந்து, யாவரும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, அக்குழந்தையைக்கிட்டி முன்பு கடித்த வாயில் மறுபடி கடித்து, தலைக்கேறின விஷத்தை மீட்டுக்கொண்டு திரும்பிச்சில தூரம்போய் இறந்தது. பின்பு பிரதிக்கினை தப்பிக்கிடந்த குழந்தைக்கு உயிர் வந்தது. அது நித்திரை செய்தெழுந்ததுபோலக் கால் கைகளை அசைத்து உசுவாச நிசுவாசத்துடனே கண்விழித்தெழுந்தது. இதைக்கண்டவர்களெல்லாம் கம்பரை விஷகண்டனுகிய சாட்சாத் பரமசிவனே இப்படி மானிடவுருவெடுத்து வந்தானென்று அதிசயித்து ஸ்துதிசெய்தார்கள். எக்காலத்திலும் எப்படிப்பட்டவர்களையும் லட்சியம் பண்ணுத தில்லைமூவாயிரவர்கள் கம்பரை உள்ளபடியே மகாத்மாவென்றுமதித்தும்பயந்தும், நாங்கள் இவர் மகிமைதெரியாமல் காலதாமசம்பண்ணி, இவர் விஷயத்தில் அபசாரப்பட்டோமென்று அனுப்பிவித்து அவரை மிகவும் உபசரித்தார்கள்.

## 9.—கம்பரிடம் பொருமைகோண்ட வித்துவான்களும், அவர்கட்கு உபகாரஞ்சேய்த அம்பட்டனும் அவமானமடைந்தது.

கம்பர் சோழன் விரோதித்ததால் அவன் நாட்டைவிட்டகன்று சேரராஜனிடம் தான் கம்பரென்பதை மறைத்து அடைப்பக்காரனுக அமர்ந்திருந்தபோது அச்சமஸ்தானத்து வித்வஜனர்கள் கம்பர் விஷயத்தில் பொருமைகொண்டு நிர்நிமித்தமாகப் பகைத்தார்கள். கோழிக்காய்ச்சல் வேசைக்காய்ச்சல்போல வித்வக்காய்ச்சலினுல் மூண்டபகை தென்றல்முற்றிப்பெருங் காற்ருனதுபோல நாளுக்குநாள் அதிகரித்ததினுல், அவர்கள் நம் அடைப்பைக்காரன் இழிகுலத்தானெ

ன்று ஒரு அபவாதத்தையுண்டாக்கி, அவன்மேல் அரசனுக்கு விரோத மூளும்படி செய்யலாமென்று எத்தனித்து, இராஜாவுக்குச் சவரம்பண்ணும் அம்பட்டனை இரகசியமாக அழைத்து, நீ அடைப்பைக்காரனை உங்கள் இனத்தானென்று எவ்விதத்திலாவது அரசனுக்கு உறுதியாகத் தோன்றும்படி செய்வாயானால் உனக்கு இரண்டாயிரம் வராகன் கொடுக்கிறோம். அதனால் உனக்குவரும் தண்டனையையும் வரவொட்டாமல் தடுக்கிறோம். மேலும் எவ்வளவு பணச்செலவு நேரிட்டாலும் தருகிறோமென்று அவனுக்கு நம்பிக்கை உண்டாகச்சொல்லி சம்மதிக்கும்படி உடன்படிக்கை எழுதிப் பணமும் கையிற் கொடுத்தார்கள். கைமேல் ரொக்கத்தைக் கண்டமாத்திரத்தில் "பனமென்றாற்பிணமும் வாயைத்திறக்கும்" மென்பதற்குச் சரியாக அவனுக்கு ஆசைமேலிட்டதனால் உடன்பட்டு, அடைப்பைக்காரனை மாத்திரமா அரசன்குடியையும் கெடுக்கத்துணிந்து ஏற்ற சமயம்பார்த்திருந்தான். ஒருநாள் சோனுடைய சிங்காதனத்தின்பக்கத்திற்சமானஸ்தானத்தில் வீற்றிருந்த கம்பர் ஏதோ ஒரு நிமித்தத்தால் அதைவிட்டிறங்கி ஆசாரவாசலின் அருகே வரும்பொழுது, அங்கே காத்திருந்த அம்பட்டன் அனைவருக்கும் முன்பாக அவரைக் கட்டிக்கொண்டு அண்ணா, இத்தனைகாலமாய் உன்முகத்தை நான் பாராமலிருந்தேனே, நீ எங்கேபோயிருந்தாயென்பதாகக் கோவென்று அலறியழுதான். கம்பர் அந்தச் சர்ப்பனையை அறிந்து அவனைத் தாமும் கூடக்கட்டிக்கொண்டு ஓயாமலழுதார். அம்பட்டன் தன்னைத்தானே தேற்றிக்கொண்டு கம்பர் கண்ணீரைத் தன்னமுக்குத் துணியால் துடைத்து அழாதே யென்ன, அவர் நடித்துக்காட்டிய பொய்த்துக்கமாறி, அம்பட்டனை அடா தம்பி நீ குடியிருக்கும் இடமெங்கே? உனக்குக் கலியாணமாயிற்றா? பிள்ளைகளைத்தனை பார்ப்போம் வாவென்று அழைத்துக்கொண்டு சபையைவிட்டுத் திரும்பினார். அடைப்பக்காரனாயிருந்த கம்பர் திரும்பும்பொழுதே அப்பா! குழந்தைகளிருக்குமிடத்தில் நான் சும்மா வரமாட்டேன். பெரியோர்கள் கோயிலுக்கும், ஆசாரிய சந்நிதானத்திற்கும், அரசர் சமுகத்திற்கும், குழந்தைகளிடத்துக்கும் வெறுங்கையுடனே போகலாகாதென்கிறார்களே ஆகையால் கடைக்குப் போய்ப் பிள்ளைச்சாதிகளுக்கு ஏதாவது தின்பண்டம்வாங்கிக்கொண்டு போவோமென்று ஒருபணத்துக்குக் கடலை பட்டாணி வாங்கிக் கட்டிக்கொண்டு அவர் அம்பட்டன்வீட்டின் அருகிற் சென்றவுடனே, அவன் தன்குடிசைக்குள் முன்னேபோய் நுழைந்து, அடி அம்மைச்சி இங்கேவாடி யென்று பெயரைச்சொல்லித் தன் பெண்டாட்டியைக்

கூப்பிட்டு உங்கள்மூத்தார்வந்தார்; அவருக்கு மணைகொடுவென்றான். அவள் ஒரு கட்டைமணையை எடுத்துப்போட்டு அவர் உட்கார்ந்தபின் காலிலேவிழுந்து சேவித்தாள். அவளைக் கம்பர் தீர்க்கசுமங்கிலியாயிருவென்று வாழ்த்திக் குழந்தைகளெங்கேயென்ன, அம்பட்டன் தன் மூன்று பிள்ளைகளையும் உங்கள் பெரியப்பன் அழைக்கிறான் வாருங்களென்று அழைத்துவந்து எதிரேவிட, அந்தப்பிள்ளைகளைக் கம்பர் வாரியெடுத்து மார்போடணைத்து முகத்துடனே முகம்வைத்துக் கண்ணுடனே கண்ணொற்றி என்னருமைமக்களே! நானுங்கள் மழலை வார்த்தையைக் கேட்கவும், நீங்கள் தத்தடியிட்டு நடக்கும்மட நடையைக் காணவும், உங்களைச் சீராட்டிப் பாராட்டி உங்களுடனேகொஞ்சவும், இதுவரையிற் பாக்கியம் செய்யாமற்போனேனென்று கண்ணீர் விட்டு ஆசையுடனே அடிக்கடி முத்தமிட்டுக் குலாவி, பிறகு நாவிதனைப்பார்த்து எனக்கும் பசியா யிருக்கிறதென்றார், அவன் பெண்சாதியைச் சீக்கிரம் சமையல்பண்ணச் சொல்லிக் கம்பரை அண்ணா சாப்பிட எழுந்திரென்றான். இவர் ஒரு செப்புப்பாத்திரத்தை வாங்கிக் கிணற்றிலே தண்ணீர்மொண்டு ஸ்நானம் பண்ணிவந்து சாப்பாடு கொண்டுவரச்சொல்ல அம்பட்டத்தி இலை போட்டுச் சாதம் வட்டிக்கவர, கம்பர் நானென்ன அன்னியனா, நீங்கள் சாப்பிடுகிறகிண்ணி எங்கே என்ன அம்பட்டனும் அவன் மனைவியும் கொஞ்சமாவது இதுபாவமென்று அஞ்ஞாமல் எச்சிற்கலத்தைக் கொண்டுவந்து வைத்து அன்னம் பரிமாறி உண்ணும்படி யுபசரிக்க, கம்பர் அவனைப்பார்த்துத் தம்பி உன்னுடனே ஒரு செய்தி பேச வேண்டியிருக்கிறதென்ன, அவன் சாப்பிட்டுப் பேசலாமென்ன இவர் அப்படிச் செய்தால் உன்சோற்றையுண்டு உனக்குத் துரோகம் செய்ததாய் முடியுமாதலால் இரண்டொரு பேச்சு முன்னதாகவே பேசிவிட்டுப்போஜனம் பண்ணுவது யுக்தமென்றார். அவர் அதென்னவென இவர் அடா தம்பி நம்முடையமுன்னோர்களுக்குத் தாய்பாகம் பிரியவில்லை யென்பது உனக்குப் பரிஷ்காரமாய்த் தெரியுமல்லவாவென்ன, அவன் ஆமென்ன, இவர் நாம் கலகத்தில் ஒருவரையொருவர்விட்டுப் பிரிந்து திக்குக்கெட்டுத் திக்குமாறிப்போன பின்பு தெய்வகடாட்சத்தால் நீ தப்பிப்பிழைத்து இந்த ராஜாவை அடுத்துச் சுகப்பட்டிருக்கிறாய், "எட்டிமரமானாலும் பச்சென்றிருந்தாற் கண்ணுக்கழகுதான்" நான் கொழுகொம்பில்லாத கொடிபோல் அலைந்து திரிந்தேன்; போகட்டும் அதுமுதல் இதுவரையும் நீ சம்பாதித்ததென்ன, தெய்வசாட்சியாய் உண்மையைச் சொல்லென்றார். அவன் சத்தியமாய் நாலா

யிரம் வராகனிருக்குமென்றான். இவர் நல்லது அதிலெனக்குப் பாதி சேரவேண்டியிருக்கிறதே அதைக் கொண்டு வந்து வையென்றார். அவன் வித்வான்கள் கொடுத்த இரண்டாயிரம் வராகனையும் எடுத்து வைத்தான். இவர் இருபது வருஷகாலமாய் உன்முறையாக நீ ராஜாவுக்கு ஊழியஞ்செய்து வந்ததுபோல, நானிருபது வருஷகாலம் அந்தத்தொழில் செய்யவேண்டுமே. அதற்கென்ன சொல்லுகிறு யென்றார். அவன் தடையென்ன உன்னிஷ்டப் பிரகாரம் ஆகட்டு மென்றான். அந்தப்படி நாட்டுக் கணக்குகளைக்கொண்டு பாரிக்கத் தும் உடன்படிக்கையும் எழுதுவியென்றார். எழுதுவித்த யாத்திரத் தில் கம்பர் தம்பி! நீ சம்மதித்தாய் என்னிடத்தில் க்ஷௌரஞ்செ ய்து கொள்வதற்கு ராஜா சம்மதிப்பாரோ, மாட்டாரோ, இவ்வளவு தூரம் பகீரதபிரயத்தனம் செய்தும், வீணய்ப்போனுலென்னவாகும். அரசனைக் கேட்டறியலாம் வாவென்று அவனை அழைத்துக்கொண்டு கம்பர் இராஜசமுகத்திற்கு வருகிறார்.

அம்பட்டன் முன்பு சபையிற் கம்பனை அண்ணவென்று கட்டிக் கொண்டழுதபோது, அங்கிருந்தவர்களெல்லாம் அடைப்பக்காரனை ராஜா பெரிய வித்வானுகை மதித்துச் சன்மானித்து அவனுக்குச் சபை யில் ஆசனங்கொடுத்ததுமல்லாமல் அவனுடனே சமபோஜனமும் பண்ணிவருகிறாரே: இவனோ சாதியில் அம்பட்டனுயிருக்கிறனே இதென்னகோரம். இவனுல் நமதரசனுடைய குலத்துக்கும் அவர் பெற்ற பெருமைக்கும் அளவிறந்த கீர்த்திக்குப்பங்கம் வந்ததே ராஜா இனி இதற்கு என்ன பிராயசித்தம் செய்துகொள்வாரோ, அல்லது அவமானத்திற்கு இடமாயிற்றேயென்று ஒருவேளை பிராணத்தியாக மே பண்ணிக்கொள்வாரோ, இது எப்படி முடியுமோ வென்று பரித பித்தார்கள். அரசனும் அப்படியே எண்ணுதது மெண்ணிநெஞ்சம் புண்ணுனன். ஆயினும் நுண்ணறிவுடையவனுதலால் இவன் அம்பட் டனுகிற் கம்பர் இவனைத் தம்மிடத்தில் அடைப்பைத் தொழிலில் வைத்துக்கொள்வாரா, வேவுகாரரை விட்டுச்செய்தி தெரிந்து வரச் சொன்னுன். அவர்கள் வேடமாறி உருத்தெரியாதபடி அம்பட்ட னும் அடைப்பைக்காரனும் சபையை விட்டுத்திரும்பும் பொழுதே பின்தொடர்ந்துபோய், ஆதியோடந்தமாக நடந்த அதிசயங்களையெல் லாம் அடிக்கடி அறிந்து வந்து அரசனுக்கு அறிவித்துக்கொண்டேயி ருந்து, கடைசியில்காதிலேநாராசத்தைச் சொருகினதுபோல அடைப் பைக்காரன் தங்களுக்கு க்ஷௌரம் பண்ண வருகிறனென்றும் சொன் ஞர்கள். அச்செய்தியை அரசன் கேட்டு அடைப்பைக்காரன் மெய்

யாய் அம்பட்டன் தானென்று நிச்சயித்து, இந்த மானக்கேட்டுக்கு என்ன செய்யலாம், "அரைக்காசுக்குப்போனவெட்கம் ஆயிரங்கொடுத்தாலும் வாராதே"யென்று ஏக்கங்கொண்டிருந்தான். இப்படியிருக்கையில் உகிர்ச்சுற்றின் மேலுலக்கை விழுந்தாற்போலப் பின்னும் அதிகக்கலக்க முண்டாக அடைப்பைக் காரனும் அம்பட்டனும் அங்கேவந்து வணங்கி நின்றார்கள். அவர்களைப்பார்த்தபோது அரசன் மிகவும் நடுங்கித்தைரியம் விடாமல் ஆனதாகிறது. இன்னமும் அறிவோமென்று கம்பரைநோக்கி, என்னசமாச்சாரமென்றான். அவர் தமக்கும் அம்பட்டனுக்கும் பாகம் பிரிந்தசமாச்சாரத்தைச் சொல்லி அந்தப்பாரிக்கத்தையும் சேரன் முன்பாகவைத்து ஐயனே! என் தம்பி இருபது வருஷகாலம் தன் முறையாக ஊழியஞ்செய்து வந்தானே இனி இருபது வருஷம் என் முறையாகத்தங்களுக்கு ஊழியஞ்செய்யும்படி உத்தரவுபெற வந்தேனென்றார். அதற்கு அரசன் நாவிதன் கருத்தை அறிந்துகொண்டு கம்பரை நோக்கி நல்லது உன்னிஷ்டப்படியாகட்டுமென்றார். அது வரையில் வித்வான்களும் அம்பட்டனுக்கு நீ எடுத்தகாரியத்தில் என்ன நஷ்டம் வந்தாலும் வரட்டும் பயப்படாதே சரியாமுயற்சி கொண்டு சாதிக்கவேண்டுமென்று இரகசியத்தில் உறுதிப்பாடு சொல்லிக்கொண்டு வந்தார்கள். அவனும் உங்கள் அபீஷ்டப்படி அடைப்பைக்காரனும் அரசனும் செய்த அதர்மத்தினாலும் உங்கள் தர்மத்தினாலும் என் அதிர்ஷ்டத்தினாலும் காரியம்கைகூடிவந்திருக்கிறதென்று பிரதிசமாச்சாரம் சொல்லியனுப்பிக்கொண்டேயிருந்தான். அது நிற்க, அதன் பிறகு கம்பர் சரசுவதியை மனதிலே தியானித்து, என் தாயே கலைவாணி! இந்த ஆபத்காலத்தில் அடியேனைக்கைவிடாது இரட்சிக்கும் பொருட்டுத் திருவுளமிரங்கி உனது இடதுபாதச் சிலம்பை அருளவேண்டுமென்று பிரார்த்தித்தார், அவர் பிரார்த்தித்தபடி நாமகள் அனுக்கிரகத்தினால், அவளுடைய வச்சிரச்சிலம்பொன்று கம்பர் அக்கிட்சத்தில் வந்திருக்க, அதை எடுத்துச் சேரனுக்குக் காண்பித்தார், அது தகதகவென்று கண்கூசும்படி ஜொலிப்பது கண்டு, அரசன் இதேதென்ன அவர் மகாப்பிரபு ஒரு விண்ணப்பம். இந்த நாவிதனும் நானும் தூரமல்ல, சிற்றப்பன்பெரியப்பன் பிள்ளைகள் இவன் தகப்பனும் என் தகப்பனும் ஒரு தாய் வயிற்றிற் பிறந்த சகோதரர்கள், இவர்களும் நாங்களும் பூர்வம் ஏககுடும்பஸ்தரா யிருந்தோம், அப்பொழுது எங்களுக்குள் பாகம் தீரவில்லை. சில காலத்திற்கு முன்பு அகஸ்மாத்தாய் சம்பவித்த கலகத்தில் இவர்களும் நாங்களும் பிரிந்துபோகவேண்டி வந்ததனால்; வீட்டுத்தட்டு

முட்டு முதலானவைகளைப் போட்டது போட்டபடி கைவிட்டுப்போகிற அவசரத்தில் எங்கள் பெரியவர்கள் அந்நாளில் தங்களைப்போன்ற பிரபுகளுக்கு ஊழியஞ்செய்து சம்பாதித்த இந்த விலையுயர்ந்த சிலம்புகள் மாத்திரம்கைக்குச் சுளுவாயிருந்ததனால் இவர்களொன்றும் நாங்களொன்றுமாகக் கையோடே காவலாய்க்கொண்டுபோய் விட்டோம். இழிகுலஸ்தரும் எளியவர்களுமாகிய எங்களுக்கு இப்படிப்பட்டசிலம்பேன். இது சக்கிரபதியாயிருக்கின்ற தங்களுக்கே தக்கது. இதைத் தாங்கள் கிருபைசெய்து கைப்பற்றிக்கொண்டு எங்கள் தம்பி வசத்திலிருக்கிற இதன் ஜதையான மற்ற சிலம்பையும்வாங்கி இரண்டையும் ராஜமகிஷியாகிய அம்மாளுடைய அழகிய காலிலிட்டால் நாங்கள் கண்குளிரத் தரிசிப்போமென்றார். அரசன் அந்த ஒற்றைச்சிலம்பைக் கையிலேவாங்கிப்பார்த்து அதிசயப்பட்டு, அடா உன்னிடத்திலிருக்கிற சிலம்பையும் கொண்டுவாபார்ப்போமென்று அம்பட்டனுக்குக்கட்டளையிட்டார். அவனிதேது "கிணறு வெட்டப்பூதம் புறப்பட்டாற்போல" வந்து விடிந்ததேயென்று திகில்கொண்டு கால்கைகள் உதறலெடுக்க வாய்குழற இல்லைசுவாமி யென்றான். கம்பர் அடா தம்பி அது நமக்கேன் அம்மாளுக்குச் சும்மா கொடுத்து விடென்றார். அவனில்லை யண்ணா யென்றான், அத்தருணத்தில் அரசன் பக்கத்திலிருந்த இராணி அதைத்தனக்கு வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று தன்நாயனுக்குச்சமிக்கைகாட்டினாள். சேரன் அதுபற்றிமறுபடியும் நாலைந்து ஆவர்த்தி சிலம்பைக்கொண்டு வாவென்று வற்புறுத்திச்சொல்லியும் அவன் முன்சொன்னபடியே யில்லையென்ன கம்பர் அடாதம்பி "கள்ளிக்கு முள்வேலியும், கழுதைக்குக் கடிவாளமும் ஏதுக்கு" அதுபோல மயிர்வினைஞராகியநமக்குவச்சிரச்சிலம்பேன் "குடிக்கிறதுகூழ்கொப்புளிக்கிறதுபன்னீரா எடுக்கிறது சந்தைக்கோபாளம்ஏறுகிறதுதந்தப்பல்லக்கா" வேண்டாம் எடுத்துக்கொடுத்து விடென்ன, அவன் சத்தியமாயில்லையென்றான். இவன் பரிச்சேதமில்லையென்று ஆணையிடுகிறானென்னவென, கம்பர் சுவாமி இவன் மிகவும் கையழுத்தக்காரன். சிறுவயதிலேயே இவனுடைய சுபாவம் அஞ்சாமற்பொய்யாணையிடுகிறதுதான். பொய்ச்சத்தியம் இவனுக்குத் தயிரும்சோறும், இப்படி சாந்தமாய்க்கேட்டாற் கொடுப்பானா, மிதித்துப் பிடுங்கினாலல்லாமல் "மயிலே ஒரு இறகு கொடு"வென்றாற் கொடுக்குமா அதுபோல இவனைக்கேட்கிறபடி கேட்கவேண்டுமென்றார். தக்ஷணமே அரசனாணையால் ஏழெட்டுப் புளியமலார்க்கட்டுவந்துவிழுந்தது. அவனைப்பிடித்துக் கம்பத்தில் இறுகக்கட்டி அப்புளியமலாரைக்கொண்டு

உடம்பெல்லாம் உதிரமொழுகும்படி பொத்தினார்கள். அம்பட்டன் அடிபொறுக்கமாட்டாமற்கட்டவிழ்த்துவிட்டால்உள்ளதைச்சொல்லு கிறேனென்றான். என்றமாத்திரத்தில்அவனை அடியாமற்கட்டவிழ்த்து விட்டுக்கேட்க, அவன் "அம்பலத்திற் பொதியவிழ்த்தது போல" யதார்த்தத்தைச் சொல்லிவிட்டான். எப்படியெனில், இவரெங்கள் தமயனுமல்ல, நானிவர்தம்பியுமல்ல. இவருடைய பூர்வோத்தரமே எனக்குத்தெரியாது. இந்தச்சமஸ்தானத்து வித்வான்கள் இவர்மேற்பொறாமையால் என்னைக்கொண்டு இப்படியெல்லாம் செய்வித்தார்கள். எனக்கு அவர்களெழுதிக்கொடுத்த உடன்படிக்கையிருக்கிறது பாருங்களென்று அதைஅரசன் சமுகத்திற்கொண்டு வந்துவைத்து மற்றவர்கள் செய்யத்துணிந்த துராகிர்தங்களையெல்லாம் பட்டோலைபடிப்பதுபோலப்பகிரங்கமாகச்சொன்னான். சேரன் இது இவனால்விளைந்ததல்ல, வித்வக்காய்ச்சலாற் சம்பவித்தது. "எய்கிறவனெய்தால் அம்பென்னசெய்யு" மென்று, அம்பட்டன் மேல்மூண்ட கோபத்தை ஒருபடியாகத்தணித்துக்கொண்டு, அந்த வித்வான்களுடைய துரோகசிந்தையைக்குறித்து நெஞ்சுபுழுங்கி நம்மாலே பரிபாலிக்கப்பட்ட இவர்கள் நமக்கே தீங்குசெய்தார்களல்லவாவென்று அவர்களையெல்லாம் கழுவேற்றநிருணயித்தான். அதையறிந்து அவ்வித்வான்கள் இந்தப்பேரிடிக்கு எவ்விதத்தால்தப்புவது,

அழுக்காறெனவொருபாவி திருச்செற்றுத்
தீயுழியுய்த்துவிடும். — பொறாமையென்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவியானவன், (தன்னையுடையவனை இம்மையிலே அவனது) செல்வத்தைக் கெடுத்து (மறுமையிலே) நரகத்தினிடத்துச் செலுத்திவிடுவான்.

என்றபடியல்லோ சம்பவித்ததென்றுபயந்து, யாவருமப்படி ஆலோசித்துத்தப்புவதற்கு வேறொருஉபாயமும் காணாமையால், தங்கள் தங்கள் மனைவிமார்களை அடைப்பைக்காரன்காலிலேபோய் விழுந்துவேண்டிக்கொள்ளும்படி அனுப்பினார்கள். அந்தஸ்திரீகள் தலைவிரிகோலமாய் வந்துபுலம்பி முன்தானையை விரித்து மாங்கல்யபிட்சை தரவேண்டுமென்று கேட்க, கம்பர் அவர்களுடைய துக்கமுகத்தைக்கண்டு நெஞ்சுருகி அழுகுரலைக்கேட்கச் சகிக்காமல் இரக்கங்கூர்ந்து, பாக்கியவதிகளே அழவேண்டாம். உங்கள் நாயகன்மார்களுடையபிராணனை நான் அவசியம் காப்பாற்றுவேன். நீங்கள் அஞ்சாதிருங்களென்று அபயப்பிரதானம்பண்ணி அவர்களை அனுப்பிவிட்டு,

மகாராஜனைப்பார்த்து ஓ ராசசேகரா, உலகத்தில் மாதா, பிதா, குரு, புரோகிதர், புராணிகர், வேதப்பிராமணர், தபசிகள், வித்வஜனர், விகடகவிகள், சுத்தவீரர், தானபதிகள், தூதர்கள், சுற்றத்தார், பிணியாளர், வறியவர், பாலர், அடைக்கலம்புகுந்தோர், போகமாதர் என்னும் இந்தப் பதினெட்டுப்பெயர்களும் செய்த குற்றத்தைப்பாராட்டி அதற்காக அவர்களைத்தண்டிப்பது அரசர்களுக்கு மனுநீதியன்றாதலாலும், மேலும் அவர்களும் நானும் வித்வான்களாயிருப்பதனால் அவர்களுக்குவந்த அவமானம் எனக்கும் வந்ததாமாகையாலும், தாங்கள் கிருபைசெய்து அவர்கள் தெரியாமற்செய்த குற்றத்தை மன்னிப்பதே தங்கள் கௌரவத்திற்கும், தயைக்கும், தகுதியென்றுகோபம் தணியும்படி நயவசனமாகச்சொல்ல, அரசன் சித்தமாறிவிதித்த தண்டனையை மன்னித்துவிட்டுக் கம்பரைநோக்கி இந்தவச்சிரச்சிலம்பு உமக்கெப்படிக் கிடைத்ததென்றான்?

கம்பர் கேளீர் சக்கிரேசுரரே இச்சிலம்பைத்தரிக்கின்ற உத்தமியைத் தாங்கள் தரிசிக்கவேண்டுமென்னும் விருப்பம் தங்களுக்குண்டாயிருந்தால் அழைப்பிக்கிறேனென்றுசொல்லி, விசாலமாகிய ஒருமண்டபத்தில் முத்துப்பந்தல்சிறப்பித்து சந்தனத்தைப்பன்னீரிற்குழைத்துமெழுகி, நவரத்னப்பொடிகளாற்கோலமிட்டு, வாழைகமுகுகள் நாட்டி, மலர்மாலை தூக்கி, நெய்விளக்கேற்றி, முற்பக்கத்தில் முகமல் திரைபோட்டு, அந்தப்பந்தலுக்குள் மரகதவிமானம் ஒன்றை அலங்கரித்து வைத்து, அதில் மாணிக்கபீடம் அமைத்து; அதன்மேல் தங்கக் கலச ஸ்தாபனஞ்செய்து. அந்தக்கலசத்தில் ஜகன்மாதாவாகிய சாரதையை ஆவாகனம்பண்ணி, சங்கமுதலிய வாத்தியங்கள்கோஷிக்க, கந்தபுஷ்பதூபதீப நைவேத்தியங்களைக்கொண்டு ஆகமவிதிப்படி பக்திவிசுவாசத்துடனே அர்ச்சித்துப் பூசித்து அஞ்சலித்து, கலைமகள் மூலமந்திரத்தைப்பிரணவசகிதமாகப்பற்பலவுருசபித்து, திரைப்புறத்திலிருந்து நூதனமாகச்சரசுவதிமேல் ஓரந்தாதிபாடியும், வசனரூபமாகத் தவளஸ்வரூபி, தவளபத் மாசனி, தவளபூஷணி, புவனகாரணி, புஸ்தகபாணி என்றும் ஸ்தோத்திரித்த மாத்திரத்தில், அப்பந்தலின் திரைக்குள் அந்த ஞானசிரோன்மணியாகிய பரதேவதை சர்வாபரண பூஷிதையாய் எத்திசையிலும் மனோக்கியமான மந்தார பாரிசாததிவ்விய பரிமளவாடை வீசும்படி எழுந்தருளித் தாம் தாமென்று தாளமத்தள முழங்க, வலதுகை மகாவீணைவாசிக்க, இடதுகை அபிநயிக்க, ஒற்றைக்கால்சிலம்பு கலீர்கலீரென்று சப்திக்க

அடிபெயர்த்து அற்புத நடனஞ்செய்யத் தலைபட்டாள். அதை அரசன் முதலானவர்கள் அறிந்து சாஷ்டாங்கமாகவிழுந்து பணிந்து பிர்மானந்தத்தில் மூழ்கிப்பரவசமானார்கள். அப்பொழுது நாமகள் எங்கடா கம்பா சிலம்பென்றாள், என்றவுடனே கம்பர் அரசன் கையிலிருந்த சிலம்பை வாங்கிச் சாரதையின் இடதுபாதத்திற்கு நேரே நீட்டினார், அது அந்தத் திருவடியிற்போயேறின மாத்திரத்திற் கலைவாணி அந்தர்த்தான மாய்ப் போய்விட்டாள். பிறகு சேரன் கம்பரைப்பற்றிச் சமுசயித்து நீரார்? உம்முடைய பூர்வோத்தரமென்ன, உண்மையைச் சொல்ல வேண்டுமென்று வேண்ட, அவர் தாம் இன்னாரென்பதைச் சொல்லக்கேட்டு அதிக சந்தோஷமாய் ஆச்சரியப்பட்டு மகாவித்வானாகிய அவர் தனக்கு அடைப்பைத்தொழில் செய்ததினிமித்தம் விசனமுற்று, அன்று தொட்டு அவரை முன்னிலும் மிக்க செல்வமும் சிறப்புமாக வைத்திருந்தான்.

## 10.—ஸ்ரீராமர் விருந்துண்டதும் ஒருகுட்டிச்குரங்கின் வேடிக்கையும்.

தந்தை சொற்படி ஸ்ரீசீதாப் பிராட்டியாருடனும், இளயபெருமானுடனும், ஸ்ரீராமர் வனவாசம் செய்கையில் இருஷியொருவர் அவரைத் தம் பரிவாரங்களோடும் அழைத்து விருந்திட வெண்ணி அழைக்கலுற்றார். இராமரும் அதற்கிசைந்து ஏற்றுக்கொள்ள, ஹனுமார், ஜாம்புவானுள்பட வானர சேனைகளோடும் அவர் விருந்துக்குச் சென்றார். இருஷியாசிரமத்துக்கருகே எல்லாரும் வனபோஜனம் செய்து வருகையில், மொச்சைக்கொட்டை சுண்டிப்படைத்தார்கள். கடைசியி லுட்கார்ந்திருந்த குட்டிக் குரங்கு ஒன்று தன் கலத்தில் படைத்தமொச்சைக்கொட்டை யொன்றையெடுத்து இருவிரல்களின் நடுவே வைத்து அழுத்திப்பார்க்க, அது வெந்தகொட்டை யாதலால், தோல் விட்டு உள்ளிருந்த விதை மேலெழும்பிச்சென்று விழுந்தது. "இதில் ஏதோ சூஸ்திரமிருக்கிறது. இருஷி நம்மிடத்தில் அவர் சூக்ஷ்மசக்தியைக் காட்டுகிறார் என்று உடனே அக்குரங்குக்கு மனதில் பட்டது. மனதில் படவும் அம்மொச்சைக்கொட்டை யெழும்பிக் குதித்து தன்னை மானபங்கம் செய்தது போலாயிற்றென்று, தான் சிறு குரங்கானாலும் வானரசைந்நியத்தைச்சேர்ந்த வீரனல்லவா என்கிற அகங்காரம் அதற்கு அதிகமாயிற்று. இந்த அகங்கார முண்டா

கவும் ரௌத்ராகாரமாகக் கோபமூண்டு, என் பராக்கிரமத்துக்கு முன் இந்த இருஷியின் சூக்ஷமம் எந்த மட்டுமென்று அந்த மொச்சைக்கொட்டை எழும்பி விழுந்த உயரத்துக்குமேல் 2-அடி அதிக உயரமாக வாலைச்சுழற்றிக் கொண்டு எழும்பிக் குதித்தது. இதைப் பார்த்து அடுத்திருந்தகுரங்கு தானும்குதித்தது. அதைப்பார்த்து அதற்கப்பாலுள்ள குரங்கு குதித்தது! இப்படி 10-க்குரங்குகள் குதிக்கவும், ஒன்றைப்பார்த்து ஒன்றை எல்லாங்குதிக்க, ஜாம்புவானும், ஹனுமாரும் சேனைத்தலைவர்களானபடியால், ஏதோ அபாயம் வந்துவிட்டது. சைந்நியங்கள் யுத்த சந்நத்தர்களாகிறார்களென்று யுத்தா வேசங்கொண்டு சேனாதிபதிஸ்தானத்திலுள்ள தாம் பின்வாங்கக் கூடாதென்று அவர்கள் சேஷ்டையைக்காட்டித் தோள் தட்டிக்கொண்டு எழுந்தார்கள். இதைப்பார்க்கவும் யுத்தப்பயிர்சி விசேஷத்தால் சுத்த வீரனாகிய இலக்ஷ்மணனும் கர்ச்சித்தெழுந்து வில்லை யெடுத்து நாணேற்றி நின்றான். தம்பியைப்பார்த்து ஸ்ரீராமரும் ஏதோ அசுரர்களால் ஆபத்து வந்து விட்டதென்று தன்வில்லை நாணிட்டு அஸ்திரப் பிரயோகம் செய்ய ஆயத்தமானார்! இங்கு இவ்வளவு கோலாகலமுண்டாக குரங்குகளுக்கெல்லாம் யுத்தா வேசம் ஜாஸ்தியாய் விட்டது. முதலில் குதித்த குட்டிக்குரங்கு, இதையெல்லாம் பார்த்து நாம்நினைத்தது சரிதானென்று எண்ணி, நம்மையேயன்றி ஸ்ரீ இராமருள்பட நம்மெல்லாரையுமே இந்த இருஷி மானபங்கஞ் செய்தான் என்று எண்ணிக்கொண்டு, அவனை விடக்கூடாதென்று அவன் மேல்பாய்ந்து அவன் தாடியை பிடித்துச் சின்னாபின்னம் செய்யத்தலைபட்டது. இது ஒன்றைப்பார்த்து இன்னுமனேக வானரங்கள் அவரை மேல் விழுந்து உபத்திரவம் செய்ததால், இதென்ன விளையாட்டாக விருக்கிறதென்று நிஷ்டைகலைந்து வெளியில் வந்து பார்க்கலுற்றார். பார்த்தால் ஸ்ரீராமர், இலக்ஷ்மணர், ஹனுமார், ஜாம்புவான் எல்லாரும்யுத்தசந்நத்தர்களாக நிற்கிறார்கள். விருந்துண்டிருந்தவர்கள் இப்படியுத்தசந்நதர்களாக வெழுந்து நிற்கக் காரணமென்னவென்று சாந்தங்குறையாது ஞானதிருஷ்டியால் பார்க்க, இது அற்பத்தைக்கொண்டு அகங்காரம் செய்த கூத்தால்விளைந்த பேராபத்தென்று கண்டுகொண்டு ஆசீர்வாதஞ்செய்யும் அவர் கைகள் சாந்தம், சாந்தம் என்று பறையறைந்து சாற்றுவதுபோல் காணக் கையமர்த்திக்கொண்டு ஸ்ரீராமரிடம் போய் சங்கதி யென்னவென்று விசாரித்தார். விசாரிக்கவும அவர் காரணம் தெரியாமல், இலக்ஷ்மணர் முகத்தைப்பார்த்தார். இலக்ஷ்மணர் ஜாம்புவானையும் ஹனுமாரையும் பார்த்தார். அவர்கள் அடுத்

தபடியிலிருந்தவர்களைக்கேட்க, இப்படி இந்தப்பார்வை சைனியமெங்கும் பரவியது. ஒவ்வொருவரும் இப்படி யுத்தாவேசம் வந்ததற்குக் காரண மென்னவென்று தோன்ருது பக்கத்திருந்தவர் முகத்தைப் பார்த்து விசாரித்து வருகையில், கடைசியில் குட்டிக்குரங்கு காரணஞ்சொல்லும்படி வந்தது, அது மொச்சைக்கொட்டையைக் குதிக்கச்சொல்லி சூக்ஷ்மம் வைத்து இந்த இருஷி நம்மையெல்லாம் மானபங்கம் செய்துவைத்தான் பொருக்கவில்லை யென்று பெருமையாகச் சொல்லிக்கொள்ள, இது தானடா இந்த ஆவேசம் எல்லாரிடத்தும் ஜனித்ததற்கு மூலகாரணமென்றுணர்ந்து அதை ஸ்ரீ இராமருக்குத் தெரிவித்தார்கள். இராமர் அவ்வார்த்தையைக் கேட்டு நகைத்து தெரியாச் சிறு குரங்கு செய்த ஒரு சேஷ்டையிது வென்று யிருஷிக்குச் சமாதானம்சொல்லி சாந்தஸ்வரூபியானர். இச்சிறு குரங்கின் சேஷ்டையை வெளிப்படுத்த சாந்தஸ்வரூப சத்தியாவதாரமாகிய இருஷிசமயத்தில் வெளிவராவிட்டால் இராமருடைய அஸ்திரம் என்ன ஹதம் செய்திருக்குமென்பதை யார் அறிவார். இப்படியாக ஆறியமர்ந்து ஆராயாத காரியம் போராய் முடியும் என்றுகண்டுகொள்ளவேண்டும்.

---

## 11.—பரஞ்சோதியைக்கலந்த பறநந்தன்.

கடல்சூழ்ந்து நிலவளம், நீர்வளம், குடிவளமமைந்து சிறப்புற்ருேங்கிய சோழதேசத்தின்கண், மேற்காஞ டென்னும் ஆதனூர் பறச்சேரியில் நீசர்குலத்தில் சிப்பியில் முத்துண்டானது போலும் சேற்றிற் செந்தாமரை உற்பவித்ததுபோலும் நந்தனூர் என்பவர் பிறந்தார். அவர் அவ்வூர் மேட்டிமைத் தொழிலையும் 40-வேலி பூமியுடைய அவ்வூர் வேதியருக்கு அடிமை யாளாயிருந்து வியவசாயமும் செய்துவந்தனர். இவர் சிலர் கோயிலுக்குப்போய் சுவாமிதரிசனஞ்செய்து வருபவரைப்பார்த்தும் அவர் சொல்லக்கேட்டும் அவ்வாறு இவரும் செய்துவர ஆவல்கொண்டு சமீபமுள்ள திருப்புன்கூர் ஆலயத்திற்குச்சென்று ஊர்வலம் வந்தனர். தான் நீசஜன்மமானதால் கோவிற்குள் செல்லாமல் சன்னதிமுன் தூரநின்று தலைவணங்கியும் ஆடியும் பாடியும் மனமுருகிப் பன்முறை துதித்தனர். நந்தியின் மறைவால் சுவாமியின் மூர்த்திகரம் தெரியவில்லை. அம்மறைவு நீங்கி தனக்குத் தரிசனம் தரும்படி ஜெகதீசனை தோத்தரித்து, ஆனந்தக்கண்ணீர் சொரிய நிற்கும் நந்தனூர் மனதறிந்து நந்தியை

விலகச்செய்தும் சுவாமியானவர் தமது பக்தனுக்கு தரிசனமும் தந்தருளினர். அது முதல் நந்தனருக்கு பக்திபெருகி பலஸ்தலங்களுக்கும்போய் பரமனை வணங்கியும் கோவில் மேளவாத்தியங்களுக்குத்தோலும் வாரும், யாழுக்கு நரம்பும் தேவபூஜைக்கு சுகந்த கோரோஜனையும் காணிக்கையாய்க் கொடுத்தும் ஸ்நானபானத்திற்கு உதவியாய்த் தடாகம் வெட்டியும் சிவபெருமானுக்குத் தொண்டு புரிந்து வந்தனர். இவர்தான் முயன்ற பரமசிவபக்திமார்க்கத்தைதன்னினத்தாருக்கும் போதிக்கஅவர்களிணங்காது மறுத்தனர். மீண்டும் அவர்கட்கு பஞ்சாட்சர உபதேசம் செய்தும் சாம, பேத, தான, தண்டமென்னும் சதுர்வித உபாயத்தால் வசப்படுத்தி 12-பேர்வரையில் பார்வதி பதியை வணங்கிவரும்படிச் செய்தனர். அவர்களும் இவர் சொன்னபடியே சர்வேசனுடைய அளவிறந்த நாமங்களை தோத்தரித்தும் ஆடியும்பாடியும் தொண்டுபுரிந்து வந்தனர். இவர்கள் விஷயத்தில்செய்த நன்றிக்கும் மகிமைக்கும் உமாமகேசனே கருணைபுரிந்து வீடளிப்பவராகும். "நன்றிக்குவித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கமென்றுமிடும்பைதரும்." என்னும் குறள்படி, நந்தனரொழுக்கம்," முத்திக்கு வித்தாகு முதல்வனடிதொழில் எத்திக்கும் புகழைத்தரும்." என்றதற்கிணங்க கீர்த்திபெற்றுவரும் நாளில் சிலர் சிதம்பரத்தில் மார்கழி மாதத்தில் நடக்கும் ஆருத்திரா தரிசனத்திற்குப் போகிறவருடன் தானும்செல்லக்கருதி தன்னை அடிமைகொண்டமறையோரிடஞ்சென்று உத்திரவு கேட்டனர். அவ்வந்தணர் விடைதராததனல் சிதம்பரேசனைஸ்மரித்து மனம்வருந்தி நாளைச் சிதம்பரம் போவேனென்று சொல்லி வந்தனராதலால் "திருநாளைப்போவார்" என்னும் பெயருண்டாயிற்று. வேதியரை இவர் பல தடவைகளில் வந்து கேட்குந்தோறும் அவர் பல இம்சைகள் செய்தனரேயல்லாது விடையளித்தவரல்லர். இவர் வேதியரிடம் உத்திரவு பெற்றுச் செல்வதே ஞாயமென்று தீர்மானித்திருந்தனர். இவரிவ்வாறு 10 - வருஷ காலம் "முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்" எனும் மொழிப்படி தொட்ட காரியத்தைவிடாது முயன்று தெய்வபக்தியிற் சிறந்து மெஞ்ஞானமுணர்ந்து ஊணுறக்க முதலியதும் விட்டு, பரமன்றிருவடிக்கே உடற்பொருளாவி மூன்றும் தத்தஞ்செய்து தமது வியவசாய முதலிய அடிமைத்தொழில் யாவையும் கைவிட்டனர். ஜெகநாதனுடைய திருவடியை நம்பியே யாவையும் கைவிட்ட தமது அதிதீவிரதா பக்குவியாகிய நந்தனருடைய மனதறிந்த ஸர்வ அந்தரியாமியானவர் வெகுநாள் நித்திரையே வராத நந்தனருக்கு நித்திரைவரும்படி செய்தும்,

சொற்பனத்தில் தரிசனம்தந்தும் எமது பக்தசிரோன்மணியே அஞ்சேலென்றருள் புரிந்தும், இன்றிரவில் நமது பூதகணங்களாலும் மது வேதியருடைய கழனியாவையும் நட்டு நாளை அறுப்பறுக்கும்படி செய்தருளினேம் வேதியரிடஞ்சென்றுதெரிவித்தால் விடைதருவாரென்று திருவாய் மலர்ந்தருளி தில்லைப்பெருவெளிகாட்டி மறைந்தனர். நந்தனர் கழனிகளைப்போய் பார்க்க தான் கனவிற்கண்டபடி இருக்க, களிப்புற்று தம் பிராமணரிடஞ் சென்று தெரிவிக்க, அவர் வந்து பார்த்து மகிழ்ந்தனர். நேற்று மாலைவரையில் தரிசாயிருந்த தன் 40-வேலி நஞ்சையும் இன்றறுக்கும் படி முதிர்ந்து நன்ராய் விளைந்திருக்கும் செந்நெல்லைக் கண்ணுற்று திசயித்து நந்தனருடைய மகிமையின் அற்புதக்காட்சியை வியந்து அவர் விஷயத்தில் தான் அபராதியானதை மன்னிக்கவிரும்பியும், நீர் கீழ்குலத்திற்பிறந்தும் உருத்திர மூர்த்திக்குத் தொண்டுபுரிந்தமையால் நீரே மேற்குலத்தினரானீர். யான்மேற்குலத்திற்பிறந்தும் ஈஸ்வரபக்தி யில்லாததனுல் தாமரைத் தடாகத்திலுள்ள தவளையானது அம்மலரிலுள்ள தேனைப் புசியாதிருந்ததுபோல் யான் வீண்ஜென்மமானேன். காட்டிலிருக்கும் வண்டானது வந்து கஞ்சமலரிலுள்ள தேனைக் கிருகித்ததுபோல்நீர் பரமசிவ பத்திரசத்தைப் புசித்தருள் பெற்றவரானதால் யான் பரகதியடையும் வண்ணம் குருவுபதேசம் செய்யுமென்று கேட்டனர். அதற்கு நந்தனர் தான் நீசனும், அடிமையுமானதால் செய்யத்தகாதென்று பலதரம் மறுத்தும் அவர் கேளாமல் செய்ய வேண்டுமென்று வருந்தினர். ஆனல் பொதுவாய் பகவத் பாதாரவிந்தத்தின் மகிமையையும் குணனுபவங்களையும் நந்தனர் எடுத்துரைக்க வேதியர்கேட்டு ஆனந்தமடைந்து "நந்தனரே இன்றும் மகிமையைக்கண்டேன், கலிதீர்ந்தேன், ஜென்மசாபல்யமாச்சு. நீர் சிதம்பரேசனுக்கே அடிமை, உமக்கு யானடிமை" என்று மகிழ்ந்து சொல்லி விடை தந்தனர். நந்தனரும் விடைபெற்று சிதம்பரக்ஷேத்திரத்திற்கு வந்து ஊர்வெளி வலம்வந்திருந்தனர். இதற்கு முன்னிரவில் தில்லைமூவாயிரவர்களுக்கும் பொன்னம்பலவாணர் கனவிற்றேன்றி "தில்லைவாழந்தணர்காள்! நீசர்குலத்திலகனும் நமது பரமபக்தனுமாகிய நந்தனரென்பவர் நாளை ஊர்வலம்வருவார் நீங்களெல்லோருஞ்சென்றழைத்துவந்து குண்டத்தில் தீவளர்த்து அதில் ஸ்நானம்செய்வித்து நமது சந்நிதிமுன் கொணர்க" வென்றருளினர். இவ்வண்ணமே நந்தனருக்கும் சொற்பனஞ்சாதித்து மறைந்தனர். தில்லைவாழந்தணர்களியாவரும் பரமன் திருவார்த்தைக் கதிசயித்து எதிர்பார்த் திருக்குமள

வில் நந்தனாரும் கடவுள் திருநாமங்களைச்சொல்லி நிர்த்தனஞ் செய்துக்கொண் டானந்தப்பிதராய் வந்துக்கொண்டிருந்தனர். அவரை மறையோர் எதிர் கொண்டழைத்துவந்து அக்கினிகுண்டத்தில் மூழ்கச் செய்தனர். அவ்வெரியினின்றும் வேதபிராமண முனிவடிவமாய்த் தூயதேகம் பெற்றெழுந்த நந்தனாரை நடராஜர் சந்நிதி முன் கொணர்ந்தனர். அவர் அகண்ட ஜோதிமயமாய் பிரகாசித்து தில்லைப்பெரு வெளிக்கும் வெளியாய்க் கலந்து மறைந்தனர். இவ்வற்புதத்தைக்கண்ட யாவரும் கண்கூசி ஆனந்தபரவசராய் நந்தனாருடைய பக்திக்கும், மகிமைக்கும், புகழ்ந்தும், தோத்தரித்தும் மங்கள வாழ்த்துக்கூறினர். இங்கிவ்வாறு அழியாத்தூயதேகம்பெற்று அகண்ட ஜோதிமயமாய்ப் பிரகாசித்த நந்தனாருடைய ஜோதிசொரூபமானது கைலாயகிரியின்கண் தேவர்களும் முனிவர்களும், பக்தகோடிகளும், பதினெண்கணங்களும் சூழ்ந்து வணங்கப் பெற்று கொலுவீற்றிருக்கும், சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோபவம், அநுக்கிரகம், முதலாகிய பஞ்சக்கிருத்தியங்களையுமுடைய சர்வஜீவ தயாபரரான கௌரி மனோகரனுடைய அஞ்சித, ரஞ்சித, குஞ்சித, பாதபங்கயத்தில் வந்து கலந்தது.

---

## 12.—தரித்திரத்தையேவிரும்பிய வேளாளனும் அவனது அரியசீவகாருண்யமும் மோட்சமும்.

முற்காலத்தில் கொங்குநாட்டில் வசித்திருந்த ஒரு வேளாளன் குபேரனையொத்த அதிக செல்வவந்தனா யிருந்து. பின் மிகுந்த தரித்திரதிசையை யடைந்து தனியாய் நின்று வயற்றுக்கில்லாமல் பிச்சையெடுக்கவும் வெட்கப்பட்டு தன்னிடம் முன் பிடுங்கித்தின்றவர்க ளிடத்திற் சென்றான். அவர்கள் அவனிடத்திலிருந்தபோது பிடுங்கித்தின்ற நன்றியையும் பாராமல், அவனைக் கண்டும் காணாதவர்களைப்போ லிருப்பவர்களும், மிஞ்சிப்பார்த்தால் நாங்களே கஞ்சிக்குக் காற்றிற் பறக்கிறோமே யென்று தாட்சண்ணியம்வையாமற் சொல்லுகிறவர்களும், என்னசெய்கிறது பாவம் இருந்தகாலத்தி லிட்டுக்காப்பாற்றிய உமக்கிட ஈசன் எமக்குக் கொடுக்கவில்லையே என்று பச்சாதாபப்பட்டு நன்மொழி கூறுகிறவர்களைப் போற் கூறுகிறவர்களும், வீட்டுத் திண்ணையின்மீது உட்காரவைத்து விட்டு எந்நேரம் உட்கார்ந்திருந்தாலும் ஏனென்றுங் கேளாமல் வீட்டிலுள்ளதைச் சாப்பிட்டுத் தெருக்கதவைச் சந்தடிசெய்யாமல் தாளிட்

டுக்கொள்ளுகிறவர்களுமா யிருப்பதைக்கண்டு அவ்வேளாளன் நமக்கி ருந்தகாலத்தில் அஜாக்கிரதையா யிருந்தபடியினால் அல்லவா? இப் படிக் கஞ்சிக்கழ நேரிட்டது. இனி நாமிங்கிருந்தால் பார்ப்பவர் கட்கு ஏளிதமாயிருக்கும் ஆதலால் வேற்றூருக்குச்சென்று பிழைக்க லாமென்று ஓர் மலை வழியாய் நடந்துபோகும்போது பசி யதிகரித் துத் தன்னாற்றாங்கமுடியாமல் ஓர் மரநிழலில் உட்கார்ந்திருந்தான். அங்குள்ள ஓர் புற்றில் தேன்கூடு கட்டியிருக்கக்கண்டு, பசியின்கொ டுமையால் அதன்மேரில் ஆசைகொண்டு, பின் ஆயிரமாயிரமான ஈக் கள் சேர்ந்து அதியற்புதமாய் மகா வருத்தத்துடன் கட்டும் இக் கூண்டை நம்மனம் அழித்துண்ண அவா கொள்கின்றதே. பசியைப் பொருத்தாலும் பொறுக்கலாம் பாழ் நரகைப் பொறுக்க முடியாதே. ஓ மனமே! உனக்கேன் (இத்துர்ப்புத்தி? நமக்காதாரமானது வேதம். அவ்வேதம் சீவ காருண்யத்தையே சிறப்பித்துப்பேசும். சீவகாரு ண்ய மென்பது மற்ற உயிர்களிடத்து இரக்கமுடைமை. சீவகாரு ண்யமென்று பொதுப்படக் கூறியதனால் இன்ன உயிரிடத்துத் தான் இரங்கவேண்டுமென்னும் நியதியில்லை. தன் கண்முன் வருந் தும் எல்லா உயிர்களிடத்தும் ஒருவன் இரங்கவேண்டுமென்பதே விதி. உயிர் பலவகை. வருத்தம் ஒன்றே.

பாலுக்குச்சக்கரையில்லையென்பார்க்கும்பருக்கையற்ற
கூழுக்குப்போடவுப்பில்லையென்பார்க்குங்குத்தித்தைத்த
காலுக்குத்தோற்செருப்பில்லையென்பார்க்குங்கனகதண்டி
மேலுக்குப்பஞ்சணையில்லையென்பார்க்கும்விசனமொன்றே.

யென்பதுபோல அவரவர் சக்திக் கியன்றவளையும் வருத்தமும் எல் லார்க்கும் ஒன்றேயாய் முடியும். பல்லாயிரம் உயிர்களைக் காக்கும் ஒரு பெரிய சக்கிரவர்த்திக்குத் தன்னுடைய தேசத்தை மாற்றரசன் வெல்ல வருங்கால் உண்டாகும் வருத்தமே உண்ணச்சோறற்றுவருந் தும் ஏழைப் பரதேசிக்குண்டாகும் வருத்தம். சக்கிரவர்த்தியின் அளவு கடந்த செல்வத்திற்கு அது வருத்தமாவதுபோல உண்ணவழியற் றிருக்கும் ஏழைப்பரதேசிக்கு ஒரு கவளம் சோறு இல்லாதிருந்தாலும் வருத்தமாய் முடியும். ஆதலின் வருத்தத்தில் செல்வர்களை ஒத்த பரமதரித்திரர்களுக்கும் அத்தகை வாயில்லாப் பிராணிகளெல்லாவற் றிற்கும் இரங்கவேண்டுவது அவசியமெனப்படும். இவர் பகைவர், இவர் உறவர், இவர் சிநேகர், இவர் யாரோவென்று வித்தியாசப் படாத சீவகாருணியமே சிறந்தது. பிறருக்குண்டாகும் வருத்தத்தை

ஒருவன் காணுங்கால் முன் தனக்குண்டாயிருந்த அத்தகைய வருத்தத்தை ஆலோசித்தல்வேண்டும். அப்பொழுது பிறர்படும் வருத்தம் இவ்வளவு கொடியதென்பதும், தான் அதற்கு உதவவேண்டுமென்பதும் விளங்கும். டம்பம், புகழ், பொருள், புண்ணியம் முதலியவற்றைக் கருதி ஒருவர் மற்றவர்மீது இரங்குவாராயின் அவ்விரக்கம் பயன் பெறாது. எல்லாச்சீவர்களையும் ஒப்ப நோக்கி ஏற்ற காலத்தில் ஏற்றவிதமாய் உதவவேண்டும். ஐயோ நமக்குண்டாயிருந்த வருத்தத்தைப் போலத்தானே இவனுக்கு அல்லது இந்தப் பிராணிக்கு இவ்வருத்தம் உண்டாகுமென்று கருதி அது தீர்ந்து அவனுக்கு அல்லது அந்தப் பிராணிக்குச் சுகமுண்டாக்குவதே நமது கடமையென்று இரங்கும் இரக்கமே சிறந்தது. சிபிச்சக்கரவர்த்தி தன்னை அடைக்கலம் புகுந்த புறவுக்கு இரங்கினது உடம்பத்தைக் கருதியன்று, புகழைக்கருதியன்று, பொருளைக்கருதியன்று, புண்ணியத்தைக் கருதியன்று. பின்னை எதைக்கருதி? அதன் துன்பத்தைத் துடைப்பதொன்றைக் கருதியேயென்க. ஓ மனமே அக்கதையையுங் கேள்! இதோ சொல்லுகிறேன்.

பூர்வம் ஒருவேடன் ஒருபுறவை அம்பால் எய்தான். அப்புறவு அம்புதப்பிச்சென்று சிபிச்சக்கரவர்த்திபால் சரணமடைந்தது. அவ்வேடன் அதனைத் தொடர்ந்துவந்து அதனைத்தரும்படி வேண்ட சக்கரவர்த்தி அடைக்கலம் புக்கதைத்தாரேன், வேறு என்னவேண்டினுலுந் தருவேனென்ன, வேடனு மதற்குச் சம்மதியாது நெடுநேரம் வாதித்துப் பின் "அற்பப்பிராணியின்மே லிவ்வளவு காருணியமுடையது மெய்யானுல். உம்முடைய சரீரத்தினின்றும் இப்புறவின் எடையளவுமாமிசம் அறிந்துகொடுப்பின் சம்மதிப்பேன்" என்றான். சிபியும் அதற்குச் சம்மதித்து துலைநாட்டிப் புறவை ஓர் தட்டில் வைத்து மற்றொன்றில் தன்தொடைத்தசையை அரிந்து வைத்தார், புறவுள்ள தட்டே தாழ்வதுகண்டு பின்னும் மற்ற உறுப்புகளின் தசையை அறிந்துவைத்தார். எவ்விதத்திலும் புறவின்தட்டே தாழ்வதுகண்டு, தாமே அத்தட்டில் ஏறிநின்றார். பின்னர் தாணிருந்த தட்டுதாழ வேடன் "புறவுஎடை தசையே வேண்டினேன்" என்ன, பின்னர் சிபி இறங்கி தசையை எடுத்துக்கொண்டேவர, சிறிது தசையே புறவின் எடைக்குச் சரியாயிற்று. இவ்விளவிற்கும் மனஞ்சலியாமையைக் கண்டு, புறவுருக்கொண்ட அக்கினியும், வேடுவவுருக்கொண்ட இந்திரனும் மெய்யுருவோடு தோன்றி வியப்படைந்து பல வரங்களை ஈந்து, ஓ சீவகாருண்யமுள்ள சிபிச் சக்ரவர்த்தியே!

நின்னுடைய சீவகாருண்யத்தைச் சோதிக்குமாறு நாங்கள் இவ்வுருத் தாங்கி வந்தோமென்று கூறி மகிழ்ந்து சென்றனர். இதுநிற்க "பச்சிலையுங் கிள்ளப் படுமோ பராபரமே" என்றார் தாயுமானவரும். என் இப்படிக்கூறினர்? சிவபெருமானுக்குப் பத்திர அர்ச்சனையில் (பத்திரம்-பச்சிலை) விருப்பம் அதிகமாயினும் அப்பத்திரத்தைக் கிள்ளும்பொழுது அதிலுள்ள புழுக்கள் இறந்துபோகுமென்பதுபற்றியே யல்லவா? அவ்வாறுகூறினர். எல்லாம்வல்ல சிவபெருமானுக்கே அது விருப்பமான பொருளாயிருந்தும் அவ்விருப்பபத்தினும் சீவகாருண்யமே சிறந்ததாயிற்று. சிவபெருமானுக்குப் பத்திர புஷ்பமெடுத்து அருச்சித்தலே சிவஞானச்செய்கையென்று உணர்ந்த வியாக்கிரபாதரும் தான் பத்திர புஷ்பமெடுக்கும்பொழுது அவற்றிலுள்ள புழுக்கள் இறந்துபட்டொழியுமேயென் றஞ்சி அவற்றிற்கு யாதொரு வருத்தமுமின்றி எடுக்கக்கருதி அதுபற்றியே புலிநகத்தைத் தவஞ்செய்து பெற்றுக்கொண்டார். திருவாரூரிலே அரசுபுரிந்த மனுமுறைகண்ட சோழன்காலத்திலே அவன் மகன் ஒருநாள் தேரிலேறிப் பவனிவருங்காலத்தில் தேர்க்காலில் ஒரு பசுக்கன்று அகப்பட்டிறந்துபோயிற்று. அதுதெரிந்த தாய்ப்பசு மனம்வருந்தி கதறி வீறிட்டுக்கொண்டு அழுதகண்ணோடும் அரண்மனை வாசலில் வந்து நிற்க அதைக்கண்ட அரசன் சீவகாருண்ணிய ரூபி யாதலாலும் வருந்து முயிர்கள் யாதாயினும் இரங்கி அவ்வருத்தத்தைத் தீர்க்கும் இயல்புடைய னாதலாலும் மனந் திடுக்கிட்டு இதற்கு யாது சம்பவித்ததோ வென்று பக்கத்திருந்தாரை வினவினர். பசுவின்கன்று தமது மகன் தேர்க்காலில் அகப்பட்டிறந்தமை தெரிந்து பசுவின் கொலைக்குத் தமது மகனே காரணனெனத் தீர்மானித்து தமது மகனையும் தேர்க்காலில் கொடுத்துக் கொன்றுவிட்டால் கன்றையிழந்த பசுவின் வருத்தமாறுமென்று சொல்லி அவ்வண்ணமே கட்டளையிட்டனர். இதுவன்றோ நடுநிலைதவறா சீவகாருண்ணிய மென்பது. இப்படிப்பட்ட சீவகாருண்ணியச் செல்வருக்குச் சிவபெருமான் திருவருள் செய்யாதிருப்பாரா? உடனே இடபவாகனத்தில் தோன்றி அவருக்குக் காட்சியளித்து மகனையும் பிழைப்பித்து அவருக்கும் சிவகதியை அளித்தனர் என்று சொல்லவும் வேண்டுமோ? ஆதலின்; சீவகாருண்ணியம் எல்லாச்செல்வமுந்தரும்.) ஆதலால் இவ்வழகிய தேன் கூண்டைக்கலைத்து மகா பாதகத்தைத் தேடிக்கொள்ளக்கூடாதென்று தன்மனதுக்குச்சொல்லி நிற்க, உடனே அவன் கண் திருஷ்டியால் தேன்கூடு உடைந்து. புற்று திடீரென்று வெ

டித்து, இவன் நல்லெண்ணமுடையவனு யிருப்பதால் இவனைக் காப்பாற்றவேண்டுமென்னும் கருணைகொண்டு அதினின்றும் ஒரிருடி வெளியேவந்தார். அவரை அவ்வேளாளன்கண்டு பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்தெழுந்து நின்று கண்ணீர்சொரிந்தான். அவனைக்கண்ட இருடியானவர் அப்பா! நீயார், எங்குள்ளவன், இங்குவந்த காரணம் யாது? எனக்குப் பகருவாயென்னலும், அதற்கவ்வேளாளன், நம்முடைய உண்மையான சரித்திரத்தை யொளியாமல் இம்மகானுக்குக் கூறுவோமாயின், "மெய்யருக்கு மெய்யுரைத்தால் வெற்றியாம்" என்றபடி நல்ல வழியைக் காட்டுவாரென்று தன் விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாக விளம்பினன். அதைக் கேட்டருளிய முனிவர் திருவாய்மலர்ந்தருளலாயினர்.

தரித்திரத்தை விரும்பும் தனயா! உலகத்தில், செல்வமிருந்தாலும் துக்கம், செல்வம்போய் தரித்திரம் வந்தாலும் துக்கம், இவ்விரண்டாலும் மனிதனை உலகபந்தம் பீடித்துவருத்துகிறது. இவைகளால் மனிதனுக்கு ஓர் பிரயோசனமுங் கிடையாது. இனி இதை மறந்து விடுவையாயின், உனக்குகந்த பதவிகிடைக்கும், ஆதலால், உன் சிறுபிராயம் முதல் எக்கடவுளைத் தியானித்து வந்தனையோ அக்கடவுளை நோக்கித் தவஞ்செய்வையாயின் உனக்கு மேலாம்பதவி கிடைக்கும் என்றருளி அப்புற்றினிடமாகவே மறைந்தனர். பிறகு தரித்திரன் அவருரைத்தபடி நாம் தவஞ்செய்தால் நற்பதவிகிடைப்பதற் கையமில்லை. அப்படிப் பதவி கிடைத்தாலும் அங்கு நாம் வாழ்ந்திருக்கும்போது ஏதேனும் குற்றங்களைச் செய்தால் மறுபடியும் இங்குதான்வந்து பிறந்துழல வேண்டுமென்று அஞ்ஞானவிருள் மூடினவனுகி நமக்கு மோக்ஷமும் வேண்டாம், நாகமும்வேண்டாம், செல்வமும் வேண்டாம்; தரித்திரத்தையே யனுபவிப்போமாயின் நம்மையொன்று மணுகாது. நிம்மதியாய் இக்காட்டிலேயே திரிந்து காய்கனிகிழங்குகளைத் தின்று காலத்தைக் கழிக்கலாமென்று வெகுகாலம் மகாவைராக்கியத்துடன் இருந்தான். இவனது வைராக்கியத்தையுணர்ந்த தேவர்கள் அதிசயித்து இவனது வைராக்கியத்தைச் சோதிக்கவேண்டுமென்று லட்சுமியை நமஸ்கரித்துத் தாயே! பூலோகத்தில் கொங்குநாட்டு வேளாளன் ஒருவன் மூடவைராக்கியத்துடன் தானினைத்த நினைப்பினின்றும் மாறுபடாமல் ஒரே நிலையாயிருக்கிறான், அவனை அதினின்றும் திருப்புமாறு உன்னுடைய கடாக்ஷந்தரன் வேண்டும். நீ சென்று அவன் முன் தரிசனமாயினையாயின். அவன் நினைத்திருக்கும் எண்ணம் மாறிவிடும் என்றார்கள். அவர்கள்

கூறியபடியே உலகமாதாவாகிய இலட்சுமி தேவியார் அவனிடம் வந்து தரிசனந்தந்து அன்பனே! நீயேன் வீணாய் அலைந்து திரிகின்றனை, இனிமேல் உனக்கு எவ்வளவு செல்வவிருப்பமிருந்தாலும் அவ்வளவும் நான் தருகிறேன். நீயுனது இருப்பிடஞ்சென்று பழையபடி வாழக்கடவாயென்று அந்தர்த்தானமாயினர். உடனே அத்தரித்திரனைச் சுற்றிலும் பொன் நவரத்தின முதலியவைகள் மலைமலைகளாகக் குவிந்துவிட்டன. அதைக்கண்ட தரித்திரன் மகாவைராக்கியத்துடன் அதனிடத்தே ஆசைவையாமல் வெறுத்து அவ்விடத்தைவிட்டு வேறோரிடத்திற்குச் சென்றனன். அவ்வனத்தில் வேட்டையாட வந்திருந்த ஓரரசன் அங்கு குவிந்திருக்கும் பொருள்களை வெறுத்துச் செல்லும் இவ்வேளாளனைக்கண்டு ஆச்சரியங்கொண்டு இவ்வளவு பொருள்களைக்கண்டு வெறுத்துச் செல்பவன் மகாதுறவியாகவே யிருக்கவேண்டும். இப்படிப்பட்ட துறவியை இதுவரையில் நாம் எங்கும் கண்டதில்லையே. இவரை எவ்விதத்திலும் அழைத்துப்போய் நம்மிடத்தில் வைத்திருந்தால் நமக்கு நல்ல லாபமுண்டாகும் என்று மனதுட்கொண்டு அங்கு குவிந்திருக்கும் நிதிகளைச் சுமையாட்களைக்கொண்டு தன்னரண்மனைக்கு அனுப்பிவிட்டு, தரித்திரனையடுத்து சுவாமி! ஏழையாகிய யான் உஜ்ஜீவிக்கும் பொருட்டு என் மாளிகைக்குத் தாங்கள் எழுந்தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டனன். தரித்திரனாகிய வேளாளனோ அரசனைப் பார்த்து அரசனே! நான் உங்களைப்போல் எப்பொருளினிடத்தும் ஆசையுடையவனல்ல. தரித்திரம் என்ற பொருளைக்குறித்தவன், என்னையழைத்தால் என்னுடைய தரித்திரம் உன்னையும் பிடித்துக்கொள்ளும், இதை யுணர்ந்து நீ என்னை யழையாமற் போய்விடு. என்று சொல்லி ஓடத்தொடங்கினான். அரசனும் பின்தொடர்ந்து வழிமறித்து சுவாமி! என்னைக கிருதார்த்தனுக்கும் என்றான். இதைக்கேட்ட அவனுக்குக்கோபம்பிறந்து அரசனது கிரீடத்தின்மீது ஒருதைகொடுத்தான். கிரீடம் கீழேவிழவும் அரசனுடன் வந்த மந்திரிக்குக் கோபம்பிறந்து தன் கைவாளால் அவனை வெட்ட கையைநோக்கும்போது இலட்சுமிதேவியானவர் வேடப்பெண்போல் அருகில் நின்று வாளைத்தடுத்து, மந்திரீ! உதைப்பட்ட அரசனோ மனக்கிலேசமில்லாமலிருக்க நீ வெட்டத்துணியலாமா? அவ்ரை வெட்டாதே, அவருதைத்தது கோபத்தாலல்ல, கிரீடத்திலிருந்த பாம்பைக்கண்டு அரசனைக் காப்பாற்றுமாறு உதைத்தார். அதிலிருந்த பாம்பு அதோ ஓடுகின்றதுபார் என்றுசொல்லி உடனே மறைந்தனள். அந்த இலட்சுமி கூறியபடி அவனுடைய கருணை

யால் மெய்யாகவே அச்சமயத்தில் ஓர்சர்ப்பம் ஓடிற்று. அதைக்கண்டு ஆச்சரியங்கொண்டு, இங்குரைத்துச்சென்ற பெண்யாரோ தெரியவில்லையேயென்று சந்தேகங்கொண்டு பின் தேவமாதாவாகிய மகாலட்சுமி தேவியாகத்தானிருக்கவேண்டும் வேறொருதேவியுமல்லவென்று தெளிந்து இந்த தரித்திரனை விடப்படாது இப்புண்ணியவானால் நமக்கு சகல ஐஸ்வரியமும் கிடைக்குமென்று அரசன் மந்திரியிடஞ்சொல்லி இந்தப்புண்ணியவானை எவ்விதத்தினாலாயினும் நம்மரண்மனைக்குக் கொண்டு வந்துவிட வேண்டுமென்று கட்டளையிட, அவ்வாறே அந்தத் தரித்திரனை பலவித இனியவார்த்தைகளால் வருந்தியழைத்தும் வராமையைக்கண்டு, அவனைப் பலவந்தப்படுத்திக் கொண்டுபோய் சிலகாலம் வைத்துக்கொண்டிருந்தார்கள். தரித்திரன் அவ்விடத்திலிருந்த நாள்வரையில் நல்லபோஜனபதார்த்தங்களை வேண்டிவேண்டியூட்டினாலும் அதைத்தின்னாமல் இலை சருகு காய் கனிகளையே தின்று காலங்கழித்துவரும் நாளில் ஓர்நாள் அரசனது போஜனபதார்த்தத்தில் சுயம்பாகி உப்பு அதிகமாக்கிவிட்டான். அது கோபம் பொறாத அரசன் அச்சுயம்பாகியைக்கொல்லநினைத்து அவனை அறைப்படி உப்பு எடுத்துவாவென்று கட்டளையிட்டான். அந்த கருத்தை யுணராத சுயம்பாகி உப்பைக் கொண்டுபோகும்போது பிராட்டியினருளாலுணர்ந்த இத் தரித்திரன் பார்த்து என் இவ்வளவு உப்பு அரசனிடங் கொண்டுபோகிறாய், கொண்டுபோனால்போ, நன்றாய்ப் புளித்த மோர் ஒரு படிக்குக் குறையாமற் சாப்பிட்டுப் பின்பு போ என்றான். அப்படியே அச்சுயம்பாகி புளித்த மோரை ஒரு படி புசித்துப் பிறகு உப்பைக் கையிலெடுத்துக்கொண்டு அரசனிடஞ்சென்றான். அரசன் உப்பைத் தண்ணீரிலிட்டுக் கரைக்கச்சொல்லி குடிக்கச்சொன்னான். சுயம்பாகி அதன்படியே குடித்து முன்போலவே அன்றளவும் தன் வேலையைப்பார்த்து சௌக்கியத்தோடிருந்தான். இச்சுயம்பாகி இறந்துவிடுவானென்று எண்ணங்கொண்டிருந்த அரசன் சுயம்பாகியையழைத்து, அவன்மீது கடுங்கோபங் கொண்டு ஹே சுயம்பாகி! நீ உப்பைக்கரைத்துக் குடிப்பதற்கு முந்தி வேறெதையேனும் சாப்பிட்டையா என்றான். அச்சுயம்பாகி, தரித்திரன் கூறியபடி தான் தயிர் குடித்ததை ஒளியாமல் உரைத்ததும் அரசனுக்கிருந்த கோபமாறி அந்த தவசிக்கு இச்சங்கதி எப்படிதெரிந்தது அவருக்கு அருளில்லாமல் தாமே இதை உணர்ந்திருக்கமாட்டார். அப்படிப்பட்ட மகான் நம்மீது கிருபைவைக்காவிட்டாலும் நாம் கொடுக்கும் போஜனபதார்த்தங்களையுமுண்ணாமலிருக்கின்றனரே நாம் செய்தபாக்கியம்

இதுதானேயென்று ஏக்கங்கொண்டு தரித்திரனிடம்போய் வருந்தி னின்றான். அப்படிநின்ற அரசனைத் தரித்திரன்கண்டு அங்கிருந்த ஒருவாளையெடுத்து அரசனை ஒரேவெட்டாக வெட்டிப்போட்டான். அங்கிருந்தவர்களெல்லாம் அவனைப்பிடித்து அடித்துக் கொன்று போட்டு அரசன் இறந்ததைக்கண்டு அழத்தொடங்கினார்கள். அவ்வ ழுகை யெவ்வாறிருந்திருக்கும். அரசசபையாதலால் உலகே ஒன்று பட்டழச் சமுத்திர ஓசையினும் மிகுந்திருக்குமே. அச்சமயத்தில் இன்னும் சோதித்துப்பார்க்கலாமென்று இலட்சுமிதேவியானவள் சுயரூபத்தோடு அவ்விடத்திலெழுந்தருளி அழுபவர்களைக்கிட்டி அழு கையை நிறுத்தச்செய்து அரசனையும் அந்த தரித்திரனான வேளாள னையும் எழுப்பி, தரித்திரனைப்பார்த்து, நீ யினியேனும் நற்பதவியை யடைய இஷ்டங்கொள்ளென்ன! வேண்டாமென்று மறுத்து அத்தே வியைக் கல்லாலடிக்கத் தொடங்கினான். இவன் தான்பிடித்த பிடி யை நழுவவிடமாட்டேனென்கிறானே என்று அரசனுக்கு வேண்டிய வரங்களைக்கொடுத்து அந்தர்த்தானமாயினள். பிறகு இவனுடைய வைராக்கியத்தைப்பார்த்து ஸ்ரீ பக்தவத்ஸலன் தாமே வந்து ஆட் கொண்டார்.

## 13—தருமந்தலையைக்காத்தது.

மாந்தையென்னுநகரத்தில் குமுணச்சக்ரவர்த்தி யென்னுமர சன் தேகியென்று தன்னைவந்தடுத்த பண்டிதர், வறியோர் முதலிய யாவருக்கும் வரையாது கொடுத்து உலகமெங்கும் வள்ளலென்றும், தியாகியென்றும் கீர்த்திநிலைநாட்டி மநுமுறைதவறாது இராஜ்ஜியப ரிபாலனஞ்செய்து வருங்காலத்தில், அவருடைய தம்பி தன் தமை யன் வீண்செலவுகள்செய்து பொக்கிஷத்திலுள்ள திரவியங்களையெல் லாங் குறைத்துவிடுகிறாரென்றெண்ணித் தமையனிடத்திற்குவந்து கோபித்துக்கொண்டு தான் அரசாட்சிசெய்யவேண்டுமென்றான். உட னே அரசன் தம்பியை சிம்மாசனத்தின்மே லிருக்கச்செய்து விட்டுத் தானேர் காட்டுக்குப்போய் தவம் செய்து கொண்டிருந்தான். பிறகு தன் தமையன் திரும்பவும் ஒருவேளை அரசாட்சி வேண்டி வருவா னென்றஞ்சி, அவர் தலையைக்கொண்டு வருபவருக்குக் கோடிபொன் வெகுமதி கொடுப்பதாகப் பறையறைவித்தான். அந்தோ! இப்பேர்ப் பட்ட கொடும்பாவியைப் போன்றவர்கள் இவ்வுலகில் யாரிருக்குத்தம் பியாய்ப்பிறந்தார்கள். ஒருவருமில்லையே. இவன் ஆசைக்கொண்டசெல்

வம் அவ்வளவு மேம்பட்டதா? கூடப்பிறந்ததோஷத்தையும் எண்ணு மற் செய்து விட்டதே. இஃதிருக்கட்டும்.

அச்சமயத்தில் "ஒப்பிலாமணிப்புலவர்" என்னும் ஓர்வித்துவான் பசியினால் வருந்தி குமுண சக்கிரவாத்தியிடத்திற்குப் போனால் தன் கலிதீருமென்று கேள்விப்பட்டு அவரைத்தேடித்திரிந்து கடைசியில் வனத்திற்கண்டு,

ஆடெரிபடர்ந்த கோடுயாடுப்பில்
ஆம்பிபூப்பத் தேம்பசியுழல
இல்லிதூர்ந்த பொல்லாவறுமுலை
சுவைதொறுஞ்சுவைதொறும் பால்காணமற்
குழவியதாய்முகநோக்க மனைவியென்முகநோக்கயாமு
நின்முகநோக்கி வந்தனங்குமுண.

குமுணராஜனே! அசையாநின்ற அக்கினிசுவாலைகள்பரந்த கொம்புயர்ந்த அடுப்பில் காளான் பூக்கவும், கொடிய பசியென்னும் நீங்காதுழலவும், துளைதூர்ந்தனவாகிய அழகற்ற வெறுமுலைகளைச் சுவைக்குந்தோறுஞ் சுவைக்குந்தோறும் பால்சுரக்கக்காணமல் குழந்தை தாயின்முகத்தைப்பார்க்க, மனையாள் என் முகத்தைப்பார்க்க, நாமும் உன்முகத்தைப்பார்த்து வந்தோம். என்றர்த்தங்கொள்ளும் மேற்படி பாட்டால் தெரிவித்தார்.

அதைக்கேட்டு அரசன் மனமிரங்கி தற்காலம் வித்வானுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவருடைய வறுமையை நீக்கமுடியாமைக்கு அதிக துயருற்று அருமையாகிய தமிழைப்பாடும் வல்லமையுடைய புலவனே! நீஅந்த நாள் வீந்தாயில்லை, (என்கையிலில்லாத) இந்நாளில் வருந்தி வந்து என்னைச்சேர்ந்தாய். (ஆனாலும் அஞ்சவேண்டாம்) என் தலையைக்கொண்டுபோய் என் தம்பியின்கையில் கொடுத்து அதன் விலையைப்பெற்று உன் வறுமையாகிய பிணியை நீக்குவாயாக, என்றபொருளுள்ள பின்வருஞ் செய்யுளைச் சொன்னர்.

அந்தநாள் வந்திலையருந்தமிழ்ப் புலவோய்
இந்த நாள்வந்துநீ நொந்தெனையடைந்தாய்
தலைதனைக் கொடுப்போய்த்தம்பிகைகொடுத்ததன்
விலைதனைப் பெற்றுன் வெறுமைநோய் களையே.

உடனே வித்வான் அவருடைய தீரத்துக்கு ஆச்சரியமுற்று தருமசிந்தைக்கு வியந்து,

ஆறுபெருக்கற் றருந்திடர்தான்பட்டாலும்
ஊறலமையாதோ உலகாற்றத்—தேற
வறியையேயானு மென்கலியை மாற்றச்
சிறியையோ சீர்க்குமுணு செப்பு.

சிறப்புள்ள குமுணனே! ஆறானது நீர் பெருகுதலொழிந்து மிக்க மணல்மேடுகளாய் விட்டாலும் உலகத்தாருடைய தாகந்தணித்தற்கு அதன்கண்ணுள்ள ஊற்றுப்போதாதோ! (அதுபோன்ற நீயும்) விசாரிக்கவறியனே யாயினும் என்வறுமையைத்தீர்க்க சிறியையாவையோ என்று அர்த்தமாகும் பாடலால் அவருக்குத் தேறுதலை சொல்லித் திரும்ப வருகிறேனென்று போய் அவ்வூரிலுள்ள விஸ்வகருமனென்று சொல்லத்தக்க அதிசாமர்த்தியமுள்ள ஒரு சில்பியைக் கண்டு, குமுணச்சக்கிரவர்த்தி சிரத்தைப்போல் யாவரும் நம்பும்படியாகத் தற்சொரூபமான பொய்ச்சிரமொன்று செய்து தாவேண்டுமென்ன, அந்த சில்பி அவ்வண்ணமே வாழைமரத்தினுல் யாவரு மயங்கும்படியான ஒரு சிரத்தைச்செய்தவரிடத்திற்கொடுக்க அதைக் கண்ணுற்று, (மாங்கையென்னுமூரில் வாழ்கின்ற மருடதானஞ்செய்வோனே! உனக்குத் தாங்குதற்குரிய வடுக்கள் இரண்டுண்டு (எவ்விடத்திலுண்டெனின்) உன்பாதத்தில் அரசாது முடிபட்ட வடுக்களுண்டு, உன்கையில் முத்தமிழ்ப்புலவருக்கு அளந்து கொடுக்கின்ற படிபட்டதழும்பு உண்டு) என்ற

மாங்கையிலேவாழு மருடத்தியாகியுனக்
கேந்துதழும்போவிரண் டுளதே—வேந்தர்
முடித்தழும்புன்காலிலே முத்தமிழோர்க்கீயும்
படித்தழும்புன் கையிலே பார்.

இப்பாடலைப்பாடி குமுணராஜனுடைய பெருமையையும் தர்மகுணத்தையும் வியந்து அந்தப் பொய்த்தலையை வித்வான் தம்பி யாசாக்ஷிசெய்கின்ற இராஜசபையிற் கொண்டுபோனர். அதைக்கண்டமாத்திரத்தில் தம்பி அனலிலிட்ட மெழுகுபோல் உள்ளங்கரைந்து புரண்டு புரண்டழுது தான் மூர்க்கத்தனமாய்ச்செய்த மூடப்பிரதிக்கினைக்கு வருந்தி வித்வானை நோக்கி நீ இவ்வருமைத் தலையைக்கொய்யும்போது என் தமையனு ரென்னசொன்னுரென்று வினவினன். அதற்குப்புலவர் (பகைவர் வெட்டுங்காலத்தில் கொதித்துவிழுகின்ற தலையானது கோடிசெம்பொன் விலைபெருமென்று கருதினன், (ஆதலால்) தேவலோகத்திலும், இவ்வுலகத்திலும் தேடினலும் என்தம்பியைப்போல எனக்குரியராவார் யாருளர்) என்னும் பொருள்படும்

வெம்புங்காலே வெதும்பி விழுஞ்சிரமம்
செம்பொன்கோடி விலையெனச்சிந்தித்தான்
உம்பர்நாடு முலகினுந்தேடியும்
எம்பிபோலெமக் கியாவருரியரே.

இச்செய்யுளைச் சொல்லி இதுதானுன் தமையனார் சொன்ன தென்றான். அதைக் கேட்டமாத்திரத்தில் தம்பி பட்ட வருத்தத்தை வித்வான் சகிக்காதவனாய், ஓ அரசனே! நீ இச்சிரத்திற்குக் கொடுப்பதாகப் பறைசாத்திய கோடி பொன்னைக் கொடுப்பாயாகில் உன் தமையனை யெழுப்பிவருகிறேனென்றான். உடனே தம்பி வித்வானைத் தழுவி யாலிங்கனஞ்செய்து கொண்டு, அப்படிச் செய்வாயாகில் கோடியல்ல பத்துகோடியாயினுந் தருவேனென்றான். அப்படியேயாகட்டுமென்று குமுணச்சக்கிரவர்த்தியிடத்திற்குப்போய் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லினான். குமுணச்சக்கிரவர்த்திக்குத் திரும்பவும தனது நாட்டுக்குள் வர மனமில்லையாயினும் வித்வான் வறுமை தீரும் பொருட்டு வந்தார். தம்பி சாஷ்டாங்கதண்டன் சமர்ப்பித்து தான் தெரியாது செய்த அபராதத்தைப் பொறுத்தருளவேண்டுமென் றிரஞ்சிச் சிம்மாசனத்திலிருந்து பழையபடியே யரசாட்சி செய்யவேண்டுமென மிகவும்வணங்கிக்கேட்டுக்கொண்டான். அவரதையங்கீகரித்து வித்வானுக்கு வேண்டியமட்டில் பொன்கொடுத்தனுப்பினார். அது முதல் கொடையிற் சிறந்த குமுணன் முதலெழுவள்ளல்களில் முதலவனாகக் கொள்ளப்பட்டிருக்கின்றான்.

---

## 14.—மதியால் விதியை வெல்லாத அரசனும் விதியால் அரசனான வேடப்பிள்ளையும்.

எத்திசையும்புகழ் உத்தமபுரியென்றொரு நகருண்டு. அந்நகரிற் சித்திரமன்னன் என்பான் அரசுபுரியும் நாளில் அவனுக்குக் கடவுளருளால் முதியவயதில் ஓர் பெண்மகவு பிறந்தது. அதற்கு நற்றமிழ் மாதென்று பெயரிட்டு வளர்த்துவரும் நாளில் ஓர் நாள் இவ்வரிய குமரிக்குத் தக்கநாயகன் எங்ஙனங் கிட்டுவானென்று அரசனும் அரசியும் யோசிக்குஞ் சமயத்தில், அந்நகருக்கடுத்த ஓர் பட்டியில் இரண்டு வயதுடைய ஒரு ஆண்பிள்ளையைப் பெற்ற ஒரு வேடப்பெண் தனக்கிருக்கும் வறுமையைத் தாளமாட்டாமல் அழகுமிகுந்த அக்குழந்தையை விலைகூறிவிடலாமென்று அரசசமூகம்கொண்டுவந்தாள். அதைக்

கண்ணுற்ற அரசனும், அரசியும், மந்திரியும் ஆனந்தக்கடலில் மூழ்கி வளர்த்து மருகனுக்கிக் கொள்ளலாமென்று விலைக்குப்பெற விருப் பங்கொண்டு, அவ்வேழைப் பெண்ணின் குலத்தைக் கேட்டார்கள். அவள் வேடஜாதி யென்றாள். இதைக்கேட்ட அரசன், அரசியை நோக்கி, நாயகி! மன்மதனை யொத்த இச்சிசுவை வளர்த்து மருமக னுக்கிக் கொள்ளலாமென்ற விருப்பம் அடியோடு தொலைந்துவிட ஜாதிவித்தியாசமொன்று நடுவே மாட்டிக்கொண்டது. பிள்ளையைப் பெற்றவள் பிச்சைக்காரியா யிருப்பதால் இவளுக்குப் பத்துப்பொன் கொடுத்து அனுப்பிவிடுகிறேனென்று அந்த வேடப்பெண்ணிடம் பத் துக்கிருபதாகவே கொடுத்தனுப்பிவிட்டான். குழந்தையின் ரூபலா வணியத்தைக் கண்ட மந்திரிக்கு மாத்திரம் அக்குழந்தையின் மீதே ஆவலிருந்தது, அடிக்கடி அரசனைத் தொந்திரவு செய்துவந்தான். அர சன் வேடப்பெண்ணின் குழந்தை உயிரோடிருப்பதாலன்றோ அதை மந்திரி நம்மை மருமகனுக்கிக் கொள்ளச் சொல்லுகிறான். அதைக் கொன்றுபோட்டால் சனியன் விட்டுப்போகுமென்று. அரசன் மாற் றுருவங்கொண்டு பட்டியிலிருக்கும் வேடப் பெண்ணண்டைபோய் நயவஞ்சமாய்ப்பேசி குழந்தைக்குப் பதில் 1000-வராகன் கொடுத்து வாங்கி கம்பளத்திற் சுற்றி ஒரு பாம்பின் புற்றுக்குள்போட்டு ஓர் பா ராங்கல்லால் புற்றின்வாயை மூடிவிட்டுப் போனான். புற்றிற்கிடத் திய பிள்ளையை அப்புற்றிலிருந்த சர்ப்பங்கொண்டு பரிதாபப்பட்டு, தன் குட்டிகளினும் சிறந்த பிள்ளையாகவே வளர்த்து வந்தது. இப் படியிருக்குங்கால் மதனபுரத்து வதனசுந்தரனென்னும் ஓர் அரசன் அப்புற்றின் வழியாக வரும்போது அப்பிள்ளை புற்றினருகிலிருக்கும் ஓடையில் விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டு, இப்பிள்ளை இவ் வளவு அழகுடைத்தாயிருப்பதால் அரசகுமாரனுகத்தானிருக்கவேண் டியது. அரசகுமாரனு யிருந்தால் இங்குத் தனிமையாய் விளையாட வேண்டிய காரணமென்ன? இந்நகர வரசனுக்கும் புத்திரப்பேறு கிடையாதே, இது யாருடைய பிள்ளையோ வறியவேண்டுமென்று பையனை அருகே அழைத்து. அப்பா குழந்தாய்! உன்பேரென்ன? உன் தந்தை பேரென்ன? நீ யிருக்குமிடமெதுவென்று வினவினான். அதற்குப் பதில் அச்சிறுவன், ஐயா! என் தந்தையும் எனக்குத் தெரியாது. எனக்குப் புத்திதெரியாத நாள்முதலாய் இப்புற்றினிட முள்ள சர்ப்பராஜனிடமிருக்கிறேன். தாங்களிடம் வார்த்தையாடுவ தை யவர்கண்டால் என்னை யேசுவார் ஆதலால் நான் போய்விடுகிறே னென்று புற்றுக்குள் நுழைந்துவிட்டான். அரசனே மிகமனநொந்த

வனாய் ஐயோ ! நாம் பாவியாய் விட்டோமே இச்சிறுவன் நாகலோகத்தான் போலருக்கிறதே. இவன் நம் கண்ணுக்கு அகப்பட்டதே அருமை. இவனைப் பிடித்துக்கொள்ளாமல் விட்டுவிட்டோமே என்று பரிதபித்து அப்புற்றைத் தன் கையிலிருந்த வாளால் குத்திப்பேர்த்தான். அதிலிருந்து கடல்மடை திறந்தாற்போல கோடிக்கணக்கான சர்ப்ப சைநியங்கள் வெளியேகிளம்பின. அதைக்கண்ட அரசன் திகிற்கொண்டு ஓடியொளித்துப் பிறகு, இதை உத்தமபுரியின் சித்திர மன்னனுக்கு ஆதியோடந்தமாக அறிவித்தான். அதற்கு அம்மூட அரசன் நன்கு ஆலோகியாது, ஐயா அவன் ராஜபுத்திரனுமல்லன், நாகலோகத்துக்குப் புத்திரனுமல்லன், அது பைசாம் வெகு நாளாய் அப்புற்றண்டை வசிக்கிறது. என்னையும் இரண்டு தடவை யேமாற்றியிருக்கிறது. அதற்கு நீரொன்றும் பயப்படவேண்டாம். தொலைந்து போகிறது கழுதையென்று பதிற்கூறி யனுப்பிவிட்டு, மறுநாள் புறப்பட்டுப் புற்றண்டை சென்று நாள் முழுதுங்காத்திருந்து சிறுவன் வெளியில் வரப்பார்த்து மெல்லப் பிடித்துக் குதிரையின் மேலேற்றிக் கொண்டு ஓர் பாழுங்கிணற்றண்டை கொண்டு போய்க் கிணற்றில் தள்ளிவிட்டுச் சென்றான். கிணற்றில் வீழ்ந்த பாலன் அதிலொரு சுரங்கமிருக்கக்கண்டு அதன் வழியாகச்சென்று உத்தமபுரியின் பிராமண வீதியையடைந்து அங்குள்ள பாடசாலையிற் சேர்ந்தான். பாடசாலைகளின் பிள்ளைகள் இவன் வரவை உபாத்தியாயருக் கறிவித்தார்கள். உபாத்தியாயர் இவனைக்கண்டு யாரோ ராஜகுமாரன் திசைதப்பி வந்துவிட்டானென்று பயந்து ராஜனிடம் அறிவிக்குமாறு தன்னிடத்தே வைத்திருந்து ராஜன் அவ்வீதியாக வரும் பொழுது இப்பாலனை அவனிடம் ஒப்புவித்தான். அரசன் இவனைப் பார்த்து "நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்கிறதே" என்று மறுபடியும் சிறுவனைக்கொல்ல எத்தனித்து ஒரு சீட்டெழுதி அவன் கையிற்கொடுத்து அப்பா! நீ இதைக்கொண்டு ராணியிடங் கொடுத்து அங்கேயே யிரு, நான் நொடிக்குள் வந்து உனக்கு வேண்டிய உபகாரங்களைச் செய்கிறேன் என்று அனுப்பினான். இவன் நம்மைக்கிணற்றில் தள்ளினவன்தானே இவன் நமக்கேது உபகாரஞ்செய்கிறது. அபகாரந்தான் செய்வான் என்று இச்சீட்டை உபாத்தியாயரிடத்தே காட்டி, ஐயா ! இவ்வரசன் எனக்கெமனெனவுதித்தவன். என்னை இன்னின்ன காலத்தில் இன்னின்ன வேலை செய்திருக்கின்றான் என்று பழையகதைகளை யெல்லாமெடுத்தோதி இதற்கு யான் என் செய்கிறது என்று வினவினான். உபாத்தியாயர் அக்கடிதத்தைப்

பார்த்து அடே பிள்ளாய் உன்னை வெட்டிக்கொன்று விடும்படியாய் இதிலெழுதியிருக்கிறது. இதைக்கிழித்தெறிந்து இதற்குப்பதிலாகவே றொன்று எழுதித்தருகிறேன். அதைக்கொண்டுபோய் கொடு உனக்கு உடனே இராஜசிம்மாசனங் கிடைக்கு மென்று சொல்லி அக்கடிதத்தில் நமது பெண்மகவை உடனே இப்பால்யனுக்கு விவாகஞ்செய்து விடு, நான் வருகிற வரையில் எதிர்பார்க்காதே யென்று எழுதிஅரசன் கையெழுத்தைப்போல அதில் வரைந்தனுப்பினான். இக்கடிதத்தைக் கையிற் பெற்ற பால்யன் இதில் வரைந்திருப்பது இன்னதெனவறியாது இராணியின் மாளிகையையடைந்து இச்சீட்டைக் கொடுத்தான். இதைப்பார்த்த அரசி, வெகுநாளாய் மருமகன் கிடைக்கவில்லையே யென்றேங்கியிருந்தவளானகபால் உடனே தன்புத்திரியை அவனுக்கு ஒரு பிராமணனைக்கொண்டு தீமுன் விவாக முடித்து விட்டாள். அரசன் சற்றுக்கழித்து வந்து இப்பால்யனும் தன் குமாரத்தியும் ஒருவரோடொருவர் சம்பாஷித்துக்கொண்டிருப்பதைக்கண்டு மகாகோபாந்தகாரனாய் அடா வேடப்பயலே! நீயா என்அருந்தவப்புதல்வியோடு வார்த்தையாடுபவன். உன்னை யின்னம் சம்மரிக்காமல் விட்டதேது, யான் அப்போதே சங்கரிக்கும்படி சீட்டனுப்பினேனே அதெங்கேயடா துஷ்டா வென்று வாளால் ஓங்கி வெட்டினான்.

"திக்கில்லார்க்குத் தெய்வமேதுணை" யென்பதைப்போல் தெய்வச்செயலால், வாளாயுதம் இரண்டு துண்டாச்சுதேயன்றிஅவனுடலில் அணுவத்தனை காயமுங் காணமற்போகவே இவன் ஏதோவரம் பெற்றவனா யிருக்கிறானென்று ஆலோசிக்கத்தொடங்கி, அரசியையழைத்து இவனை நான்கொல்லும்படி யெழுதியனுப்பினால் அதைப் போற் செய்யாமல் நம்பால்யையுடன் வார்த்தையாடவிட்டிருக்கின்றனையேயென்றான். அரசி திடுக்கிட்டு, இதேது? "கிணறு வெட்டப்போய் பூதம் புறப்பட்டாற்போலிருக்கிறதே" தாங்கள் எனக்கனுப்பிய கடிதத்தில் கூறிய இச்சங்கதி யொன்றுங்காணோமே. இவருக்கு நம்முடைய குழந்தையை உடனே விவாகஞ்செய்து கொடுக்கச்சொல்லியன்றோ வெழுதியிருந்தது. அதைப்போலல்லவா நடத்திவிட்டேன் என்று அக்கடிதத்தை அரசனிடங்கொடுத்தாள். அவன் அதை வாசித்து அடா துஷ்டா! இக்கடிதமா உன்னிடத்தே கொடுத்தது. நான் கொடுத்த கடிதம் ஈதல்லவே உண்மையைக்கூறிவிடு தப்பித்துக்கொள்வை யெனவும், வானத்தில் ஓர் அசரீரி தோன்றி "விதியை வெல்லமுடியுமா யாரால்முடியும்" ஓ, அரசனே! இச்சிறுவனை வருத்தாதே இழிகுலத்தானென்றெண்ணாதே! இவன் உன்கும

ரிக்கென்றே பிறந்தவன். இவனை நீ யெவ்வாறு கொல்ல நினைத்தாலும் முடியாது. இவனுக்கே நின் மகுடத்தைச் சூட்டுவாயாகவென்று கூறிற்று. இவ்வசரீரிவாக்கையும் அசட்டைசெய்து சிறுவனை யருகேயழைத்து நான்சொன்னபடி செய்தால் உன்னைக்கொல்லாமல் என் பட்டத்தை யுனக்களிப்பேன் அசரீரி வாக்களித்ததையும் நம்புவேன் என்று கூறி, நூறுவண்டிக் காட்டுக்கட்டைகளைக் கொண்டுவந்து வைக்கற்போர்ப்போலடுக்கி நெருப்பிலிட்டு அதிற் குதிக்கச் சொன்னான். சிறுவனும் யாதொரு தடங்கலுஞ் சொல்லாமல் அதிற் குதித்து தெய்வச் செயலால் இரண்டு நாழிகை கழித்து ஒரு பின்னமுமின்றி வெளியே வந்தான். அரசன் இவ்வருமையைக்கண்டு களித்து நாம் புத்தியில்லாமல் இழிகுலத்தானென்று பலவிதத்திலுங் கொல்லப்பார்த்தும் இவன் சாகாமையால் இவனைத் தெய்வமாகத் தான் பாவிக்கவேண்டுமென்று தன்பட்டத்தை யவனுக்களித்துச் சுகத்தோடு வாழ்ந்திருந்தான்.

## 15.—சத்வகுணப் பிரதானர் மகாவிஷ்ணுவே யென்பது.

முன்னம் நைமிசாரண்ணியத்தில் சௌனகாதி மகா முனிவர்கள் யாகஞ்செய்துகொண்டிருக்க, அவ்விடத்திற் நாரதபகவான் எழுந்தருளி, அவர்களைப் பார்த்து முனிவர்காள், சிருஷ்டி-திதி-இலய காரியங்களுக்கு பிரமா-விஷ்ணு-ருத்திரன் என்னும் மும்மூர்த்திகளுண்டு. அவர்களில் யாரைக்குறித்து யாகஞ் செய்கின்றீர்கள் என்று வினவ, அம்முனிவர்கள் அவ்வார்த்தையைக் கேட்டு, அந்த மும்மூர்த்திகளில் யார் சத்துவகுணப் பிரதானரோ அந்தத் தேவனைக் குறித்து யாகஞ்செய்கின்றோமென்று சொல்ல நாரதர் கேட்டு அந்தத் தேவன் யார் என்றுகேட்டார். அப்போது முனிவர்களுக்கு ஒன்றுந்தோன்றாமல், சந்தேகந் தெளியுமாறு பிருகு முனிவரை யழைத்து, நீர் பிரம்மலோகம், வைகுண்டம், கைலாயம் இந்த இடங்களுக்குச் சென்று அந்த மும்மூர்த்திகளையும் பார்த்து அவர்களில் சத்துவகுணப் பிரதானர் யாரோ அவரைத் தெரிந்துவாரும் என்று அனுப்பினார்கள். அவர்களின் வாக்குத்தவறாமல் முதலில் கைலாயத்தை யடைந்து பார்வதி சமேதராய பரமசிவம் வீற்றிருக்கும்போது கண்டார். அப்போது பரமசிவம் அதிக கோபங்கொண்டு கண்கள் சிவந்து பிருகு முனிவரைப் பார்த்தார். பார்க்கும்போது முனிவரானவர் இவர் தமோகுணப் பிரதானரென்று தெரிந்துகொண்டு, அங்கிருந்தும் சத்

தியலோகத்திற்குப்போக அப்பொழுது பிரமதேவர் சரஸ்வதியோ டிருக்குஞ் சமயத்தில் அவருக்கு சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து நிற்க, அம்முனிவரைப் பார்த்துப் பிரமதேவன் பேசாமலிருந்தார். அப்போது அம்முனிவர் பிரமன் இராஜோகுணப் பிரதானரென்று அறிந்து, அங்கிருந்தும் ஸ்ரீவைகுண்டத்தை யடைந்து ஸ்ரீமந்நாராயண மூர்த்தியைக் கண்டார். அந்தச் சமயம் ஸ்ரீலட்சுமி தேவியுடன் ஸ்ரீபகவான் நித்திரைசெய்து கொண்டிருந்தார். அவரைப்பார்த்து அம்முனிவர். தமது கரங்களால் சுவாமியின் மார்பில் அடித்தார், அப்போது திருமாலானவர் கோபங்கொள்ளாமல் அம்முனிவரை யழைத்து அவருடைய க்ஷேமங்களை விசாரித்துச் சந்தோஷமாய்ப் பூசித்தார். இதனால் விஷ்ணு சத்வகுணப் பிரதானரென வெளியாயிற்று. நாரதபகவான் உண்மையை யுணராதிருந்த முனிவர்களுக்கு உண்மை வெளிப் படுத்தினரென்று இதனால் விளங்குகின்றது.

---

## 16—குலத்தளவேயாகுங் குணம்.

முற்காலத்தில் அநுதபரென்கிற ரிஷியானவர் ஒரு காட்டில் வசித்துக்கொண்டிருந்தார். அக்காட்டிலுள்ள மிருகங்கங்கள் அவரருகிற் சென்று நமஸ்காரஞ்செய்து பயமற்றிருந்து அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச்செய்துவந்தன. அவரும் அவைகளிடத்து நிரம்பிய தயவுடையவராய் அவைகளுக்கு ஒரு துன்பமும் வரவொட் டாயல் பாதுகாத்துவந்தனர். அப்படியிருக்க ஒரு ஆண்நாயானது காட்டில் மிகுந்த வறுமையடைந்து அவரிருக்கும் காட்டுக்குச்சென்று வாலைக்குழைத்து, வாய்விட்டிரைந்து அவரை வணங்கிக்கொண்டது, அந்த மகாநுபாவர் அதன்விஷயத்திலும் கிருபைவைத்தவரா யிருந் தார். அவர் எழுந்துபோனல் அதுவும் எழுந்துபோகிறது. அவர் உட்கார்ந்தால அதுவும் உட்காருகிறது. அவர்படுத்தால் அதுவும் படுத்துக்கொள்ளுகிறது. அவர் எழுந்தபோது அதுவும் எழுந்து தண்டனிடுகிறது. அவருடைய பாதங்களை முகர்ந்தும், நக்கியும், உடம்பைக்குலுக்கிச் சந்தோஷக்குரைப்புக் குரைத்ததுமாயிருந்தது. இப்படி அவரைவிட்டு நீங்காமலே அதிக பிரீதியாய்க் காத்துக்கொண்டிருந்ததின்பேரில் அவருக்கு ஆச்சரியம்பிறந்து அதனிடத்தில் மிகுந்த தயவுடையவராயிருந்தார். அவ்வாறிருக்கிறபோது, அவரையடைந் திருந்த மிருகங்களில் ஒரு கலைமான் தனது இனத்துடன்வெருண்டு, தன் கொம்பைப் பூமியிற்றூழ்த்தி மருண்டு, கும்மாளமிட்டு, அந்த

நாயைக்குத்திக் கொல்லவேண்டுமென்று எழுந்துவருங் காலையில் அதனெண்ணத்தை யுணர்ந்த முனிவர் நாயைக் காக்கவேண்டுமென்னும் தயவுள்ளவராய் தமது கமண்டலத்திலிருந்த ஜலத்தைத்தெளித்துக் கையிற் பிடித்திருந்த தண்டினால் தட்டினர். உடனே அவருடைய தபோபலத்தினால் அந்த நாயானது வாயுபகவானுக்கு வாகனமாகிய கலையைப்போல் மேன்மேலாக உயர்ந்து தலைநிமிர்ந்து கொம்புகள் பணைத்துப் பரந்து உயர்ந்து நெறித்து முறித்துக் குறித்துப் பாய்ந்து எதிர்த்து வந்த மானின்பேரில் சண்டைக்குவிட மெய்யான மான் ஓடிப்போகவும், நாயாகியமான் வெற்றியடைந்தது. அந்த மானுருவத்துடனே சில நாள் வைத்துக் கொண்டிருந்தார். அப்படியிருக்கும்போது அதன்பேரில் ஒருவராலும் வெல்லப்படாத ஒரு வேங்கை பாய்ந்து மேல்விழநெருங்கிற்று. அந்த நாயாகியமான் பயந்து ரிஷியின் பின்புறத் தொதுங்கியது. அவ்வேங்கையைக் கண்ட ரிஷியானவர் கமண்டலத்தின் ஜலத்தைத் தெளித்துத் தண்டினால்தட்டி முப்பத்திரண்டடி வேங்கை போலாக்கிச் சண்டைக்குவிட்டார். அதைக்கண்ட வேங்கை பெரியவரைவிட்டுப் பிரியாமல் அவரிடத்தே தங்கியிருந்தது. பிறகு யானையொன்று கிளம்பிற்று, அப்போது நாயை யானையாக்கினர், உடனே ஒரு சிங்கம் புறப்பட்டது, சிங்கத்தைப்போலவுமாக்கினர். வந்த சிங்கமும் ஓடிற்று. அதன்பின் ஒரு சரபம் புறப்பட்டது, அந்தச் சரபத்தையழிக்க அதற்கிரண்டு பங்கு தேகதிடங்கொண்ட சரபமாக்கினர். இவ்விதம் சாமான்யநாய் தவசிரேஷ்டரின் சகவாசத்தால் கலை, வேங்கை, யானை, சிங்கம், சரபம் முதலான உருவத்தைப்பெற்றும் அவரிடத்தே நன்றி பாராட்டாமல, "குலத்தளவேயாகுங்குணம்" என்ற பழமொழிப்படி, நாமெப்படியோ பெறற்கரிய சரபவுருவத்தைப் பெற்றோம். அவ்வுருவத்தைப் பெற்றது. இம்முனிவர் கடாக்ஷத்தினாலே யென்றாலும், இவரால் ஒருக்கால் இவ்வுருவம் யாதுகாரணத்தினாலேனும் அழிந்தாலும் அழியும். ஆதலால், இம்முனிவரை நாம் திடீரெனக் கொன்றுபோட்டால் வெகு காலம் வாழலாமென்று தன் ஜாதியின் குணத்தைக்காட்டவெண்ணிற்று. முனிவர் திரிகாலக்கியானியாதலால் அதன் தீய வெண்ணத்தை அறிந்து அதையழைத்து நகைத்து ஓ நாயே! என்றார். உடனே சரபம் நாயாய்விட்டது. ஆதலால் அதைப்போன்றவர்களுடைய சகவாசம் என்றைக்கும் எதற்கும்பயன்படாதென்றறியவும்.

## 17:—போய் கோண்ட ஆசாரியேன்னும் வைகுண்டாசாரி கதை.

கோதாவரிநதிக் கரையிலுள்ள ஒரு பட்டிக்காட்டில் ஒருபிராமண னிருந்தான். அவனிடத்தே "மெய்மூன்றும் பிறை பொய்பூரணச்சந்திரன்" எனவிளங்கிக்கொண்டிருந்தது. இப்பிராமணன் இயற்கையிலேயே ஏழை யாதலால் சாப்பாட்டுக்கு வேறுவழியில்லாமல், தினந்தோறுங்காலையிலெழுந்து, ஸ்நானஞ்செய்து, மடியுடுத்தி, துவாதசநாமஞ் சார்த்திக்கொண்டு, மிகவும் தெய்வபக்தி யுள்ளவனைப்போற்காட்டி பிச்சையெடுப்பது வழக்கம். அவ்வூர் ஓர் சிறு குக்கிராமமாகையால், அக்கிராம வாசிகளெல்லாரும் நிரட்சரகுட்சிகளா யிருந்தார்கள். இப்பிராமணன் அவர்களுக்கு இருட்டறையில் மின்மினிப்பூச்சியைப்போல் பிரகாசித்துக்கொண்டு, சோதிடம் முதலானவைகளும் சொல்லிவந்நான். இவன் ஜோசியம் சொல்லுவதில், தீமையானகாரியங்கள் இல்லாமல் எப்பொழுதும் எல்லோருக்கும் நன்மையானகாரியங்களையே சொல்லிவந்தபடியால் இவனிடத்தில் அவ்வூர் ஜனங்களுக்கு மிகவும் பற்றுதல் உண்டாயிற்று. அவன் எதைச் சொன்னபோதிலும் நம்ப ஆரம்பித்தார்கள். இதை யறிந்த அப்பிரமாணன், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டு மல்லவா என்று, இனி இவர்களை வஞ்சித்துப் பணஞ்சேகரிக்கவேண்டுமென்று தீர்மானித்து ஒரு நாட்காலையிலெழுந்து, எப்போதும் போலஸ்நானபானஞ்செய்து நாமஞ்சார்த்திக்கொண்டு, அவ்வூர் நாட்டாமைக் காரனிடஞ்சென்று ஐயா, நாட்டாமைக்காரரே, நான் சென்ற இராத்திரி ஒரு காட்சிகண்டேன். அதை இவ்வூரார் எல்லாருடைய முன்னிலையிலும் வெளியிடவேண்டும். ஆகையால், அம்பலக்சாவடியில் இன்று காலமே பத்துநாழிகைக்கு எல்லோரும் வந்து கூடவேண்டுமென்று பறையறைவியும்" என்றூர். அதைக் கேட்ட நாட்டாமைக்காரன் ஆச்சாரியரிடத்தில் அதிக விசுவாசமுள்ளவனாகையால், உடனே ஊரெங்குந் தெரிவித்து, அம்பலச் சாவடியில்வந்து கூடி, அப்பிராமணனும் மிகவும் ஆடம்பரத்தோடு வைதீகவேஷம் போட்டுக்கொண்டு, அம்பலச் சாவடிக்குப் போய், அங்கேஅவருக்காகப்போடப்பட்டிருந்த ஆசனத்தில் உட்கார்ந்தார். எல்லோரும்என்ன சொல்லப்போகிருரோவென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அந்தப்பிராமணன் அவர்களைப் பார்த்து, ஓ! சனங்களே உங்களுக்கும்உங்கள் சந்ததியாருக்கும் இனி நரக பயமில்லை. நீங்கள் என்னை யாதரித்துவந்தபடியால் உங்களுக்கு

நன்மையுண்டாகும்படி இதுகாறும் ஸ்ரீவைகுண்டபதியைத்தியானம் பண்ணிக்கொண்டு வந்தேன். அவர் நேற்றிரவில் எனக்குப் பிரத்தியட்சமாகி என்னை வைகுண்டத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் எனக்கு வைகுண்டாச்சாரி என்னும் பெயரைக் கொடுத்து, நீ மிகவும் யோக்கியன். உன்னால் அவ்வூரில் மரணமடைகிற ஒவ்வொருவருக்கும், உன் பிழைப்பிற்காக, அவ்வைந்து பொன்வாங்கிக்கொண்டு ஒவ்வொரு சீட்டுக்கொடுத்தனுப்பு நான் அவர்களுக்கு வைகுண்ட பதவி அளிக்கிறேன் என்று சொல்லி என்னை மறுபடியும் இங்கே அனுப்பிவிட்டார். நான் கடவுளின் மகாத்மத்தையும், தயாளத்தையும் என்ன சொல்வேன்! வைகுண்ட காட்சியை மனுஷனும் கேட்கப்போமோ! நீங்கள் அதிர்ஷ்டவான்கள், புண்ணியம் பெற்றீர்கள் எனப்பலவாறுகப் புகழ்ந்து, சன்மார்க்க வசனங்களை இடைக்கிடையே உபயோகித்து வசனிக்க, "தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்" என்றபடி அவ்வூரில் இவன் மோசவார்த்தையைக் கண்டிக்கத் தக்க ஆட்களில்லாமலிருந்தபடியால், ஊரரெல்லாம் அப்பிராமணனை நம்பி அன்று முதல் அவரைச் தெய்வமாகப் பாவித்து, அவருக்கு வேண்டியவைகளெல்லாம் கொடுத்து ஆதரித்து, யாராகிலும் இறந்துபோனுல், ஐந்து பொன் எடுத்துக்கொண்டுபோய் அவருக்குக் கொடுத்து, அவரிடத்திலிருந்து வைகுண்டத்திற்கு ஒரு சீட்டு வாங்கி பிணத்தின் கையிற் கட்டிக்கொளுத்திவிடுவது வழக்கம். இப்படி அனேக வருஷங்கள் செல்ல, பிராமணன் திரண்ட ஆஸ்தி வந்தனுகி பெரிய மெத்தைவீடு முதலானதுங்கட்டி தினே தினே வைகுண்டச் சீட்டால் வந்து குவியும் பணத்தையெல்லாம் அவ்வீட்டிலுள்ள ஒவ்வோரறையிலும் நிரப்பி தாள் போட்டுத் திருடர் யாரேனும் கொள்ளையிடப் போகிறுர்களென்று அவ்வீட்டின் வாயிற் காத்து பொன்னைப் பூதங்காத்தகதையாய் வெளியே வராமலிருந்தார் அவருக்கு வயதும் ஐம்பதுக்கு மேலாயிற்று. இப்படியிருக்குநாளில் ஒரு நாள், அவ்வூரில் ஓர் எளிய மனிதன் இறந்துவிட்டான். அவனிடத்தில் ஐந்து பொன்னுக்கு ஐவேசு இல்லை. அவன் மனைவி தவிர வேறு திக்கியுங்கிடையாது. அவன் மனைவி மாத்திரம் தனித்தவளாய் அழுதுகொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் வெளியூர் வர்த்தகர்கள் நான்கு பேர் அவ்வூரை நாடி வருபவர்கள் அவளழுகுரலைக்கேட்டு அவளிருக்கு மில்லத்துட் சென்று நீ எதுக்காக அழுகின்றுய் என்று கேட்டார்கள். அவள் மிகபதிவிரதா சிரோன்மணியாயிருந்தபடியால் ஐயமாரே! நான் மணுளனிறந்ததற்காக அழவில்லை. அவர்

சுவர்க்தகத்திற்குப் போகும்படியான சீட்டுவாங்க ஐந்து பொன்னுக்கு வழியில்லையேயென்று அழுகிறேன் என்று சொல்லி துக்கித்தாள். உடனே அவர்கள் இந்த விஷயத்தை தீர விசாரித்து அந்த, "வெறுங் கையால் முழம்போடுகிறவனை" தக்கதண்டனைக்குள்ளாக்கலாம் முன் னடக்க வேண்டியதை நடத்திவிட வேண்டுமென்று அவ்வூராருடன் கலந்துபேசி இறந்துபோன ஏழையின் பிரேதம் சாயவேண்டியதற் காக ஊரார் ஒவ்வொருவரிடத்தும்பணம்தண்டி எல்லோரும்வரிவைத் துக்கொடுத்து அவ்வெளிய மனிதனை வைகுண்டத்திற் கனுப்புகிற தென்று தீர்மானித்து பணம் தண்டி அதைக் கொண்டுபோய் ஆச் சாரியருக்குச் செலுத்தி சீட்டுவாங்கி வழக்கம்போல, வைத்துக் கொளுத்தி விட்டார்கள். வியாபாரிகளோ தம் தீர்மானத்தை நிறைவேற்ற மறுநாள் அதிகாலையிலெழுந்து, ஒரு ஓலையை யெடுத்து, அதில் "சிறுகாவூரிலிருக்கும் வைகுண்டாச்சாரிக்கு வைகுண்டபதியாகிய நாம் எழுதுவதென்னவென்றால், நீர் தாரதம்மியமில்லாமல், எல்லோ ருக்கும் சீட்டுக்கொடுத்தனுப்பி விடுகிறீர். உமது தாட்சண்ணியத்திற் காக நாம் எல்லோருக்கும் இடங்கொடுப்பதால் வைகுண்டத்தில் இடம் இல்லாமற் போய்விட்டது. இன்னம் ஒரே மனுஷனுக்குத் தான் இடமிருக்கிறது. ஆதலால் நீர் இந்த ஓலை கண்டவுடன் வைகுண்டத்துக்கு வந்து சேரவேண்டியது. செய்தால் அதற்குத் தக்க சிட்சை செய்வோம். நரகம் காலியாய்க் கிடக்கிறது. அதிலே போட் டடைப்போம். நீர் இச்சீட்டு கண்ட தட்சணமே புறப்பட்டு வர வேண்டியது. இப்படிக்கு வைகுண்டத்தில் வீற்றிருக்கும் வைகுண்டபதி" என்று எழுதி முத்தரித்து "பூலோகத்தில் சிறுகாவூர் வைகுண்டாசாரிக்குக் கொடுப்பது. அனுப்புதல் வைகுண்டபதியாகிய ஸ்ரீமந்நாராயணன்" என்று மேல்விலாசம் எழுதி மஞ்சள் பூசி, சுடுகாட்டிற்குப்போய், முன்தினம் பிணத்தைச்சுட்ட சாம்பலுக்குள் புதைத்துவைத்து வந்துவிட்டார்கள்.

## 18.—சிறுகூனன் பெருங்கதை.

பூர்வத்திலே தார்த்தார நாட்டின் எல்லைக் கடைக்கோடியிலே காஸ்கார் என்றொரு பட்டணமிருந்தது. அப்பட்டணத்திலே சுந்தாராவ் என்னும் ஒரு தையற்காரன் சந்திரபாய் என்னுங் கட் டழகியான காதன் மனைவியுடன் கூடி மிகவுமந்நியோன்னியமாய்

வாழ்ந்துகொண்டிருந்தான். ஒரு நாள் மாலை வேளையில் அச்சுந்தரன் தன்கடையிலுட்கார்ந்து தைத்துக்கொண்டிருக்கும்போது குறுகிய அவயவங்களோடு கூடிய ஒரு சிறுகூனன் முச்சட்டையாயுடுத்திய வுடையோடு காத்திலே சல்லரி என்னுஞ் சிறுபறை யொன்று தாங்கி வெகு விநோதமாக ஆடிக்கொண்டும் மிக இனிமையாகப் பாடிக் கொண்டும் உல்லாசமாக வந்து பற்பல அகசியங்களுஞ் சாலங்களும் வேடிக்கைகளுங் காட்டினன். அவை யவனுக்கு மிக்க சந்தோஷத்தை யுண்டாக்கின, ஆதலால் அவன் "நாம் இக்கூனனை இல்லங்கூட்டிச் செல்வோமானல் நாமும் மனைவியும் இராத்திரியை இவனோடு வெகு வுல்லாசமாகப் போக்கலாம்" என்று சிந்தித்து, கூனனைத் தன் வீட்டிற் கழைத்துக் கொண்டுபோய் இல்லாளை நோக்கி "அடி பெண்ணே! இதோ பார், இக்கூனன் நம்மை யெப்படி யுச்சாகப்படுத்தப்போகிறன், இவன் ஆடல் பாடல்களைக் கண்டுங் கேட்டும் இன்றிரவை வெகு ஆனந்தமாகக் கழிக்கலாம், இவனுக்கு நல்ல விருந்தளிப்பாய்'' என்றனன். அதுகேட்ட மனைவி முகமலர்ந்து புருஷன் சொற்கடவாது பல சிற்றுண்டிகளுடன் புலால் சமைத்து, உண்கலம் பரப்பி, அன்னம் முதலியன பரிமாறி, தானும் புருஷனுமாகக் கூனனுட னிருந்து, அவன் இடை இடையே குசோத்தியமாய்ப் பேசுவதைக் கேட்டும், நவநவமா யகசியஞ் செல்வதையுஞ் சாலங் காட்டுவதையுங் கண்டும் ஆனந்தம் பெருக வுண்டு களிப்படைகையிலே, கூனன் தன் முன்னே யிட்ட வுணவுகளை இன்ன தினியதன் றென்றாமல் மிக்க ஆவலோடு கைக்கொண்டமட்டும் வாரிவாரியுண்டான். அப்படி யுண்ணு மவசரத்திலே ஊனோடூ ணே யிருந்த ஒரு வலிய மாமிசத்துண்ட மவன்தொண்டையில் அடைத்துக் கொண்டது அதனாலக்கூனன் மாரடைந்து, மூச்சடங்கி அறிவிழந்து, பிணம்போலத் தரையிற்சாய்ந்தான். இதைக்கண்ணுற்ற தம்பதிக ளிருவரு மதிமயங்கித் திடுக்கிட்டு "ஐயோ தெய்வமே! இஃதென்னை விபரீதம்! நமது வீட்டில் இவனுக்கிப்படி நேர்ந்ததே. இவன் செத்துக் கிடப்பதை யாரேனுங் கண்ணுறின் நாமேதோ இக் கூனனைச் சதிசெய்து கொலைபுரிந்ததாக எண்ணுவார்களல்லவோ. அதிகாரிகள் கண்டால் நம்மை வதைப்பார்களே என்னசெய்வோம்?'' என்று அதிக திகிலடைந்து, தங்களாற் செய்யக்கூடிய பரிகாரங்களெல்லாஞ் செய்து யாதும் பயன்படாமை கண்டு, பிரேதத்தை யெவ்வாறுவது வீட்டைவிட்டப் புறப்படுத்துவதே கருமமெனத் தேர்ந்து, தையற்காரனும் பெண்டாட்டியும் தலைப்பக்க மொருவரும் காற்பக்க மொரு

வருமாக அச்சவத்தை யடுத்த நாலைந்து வீட்டிற் கப்புறமிருந்த ஒரு வைத்தியன் வீட்டிற்கு எடுத்துச்சென்று, அவன் வீட்டின் தெருக்கத வைத் தட்டினார்கள். அதுகேட்டு ஒரு வேலைக்காரி வந்து கதவைத் திறந்து "சேதி என்ன ?" என, சுந்தரன் அவள் கையில் ஒரு வெள் ளியைக் கொடுத்து "அம்மே! இதைப் பண்டிதர் கையிற் கொடுத்து ஒரு நோயாளியை யழைத்துவந் திருக்கின்றோம் என்றி சொல்" என் றனன். அப் பணிப்பெண் வைத்தியன் முன் சேதி சொல்லும்படிக் குப்போகும்போது அவள் பின்னரே மெல்லெனத்தம்பதிகளிருவருஞ் சவத்தை யெடுத்துச்சென்று மேல்மாடிப் படிச்சுவரில் சார்த்திவிட்டு மீண்டு விரைந் தில்லம்போய்ச் சேர்ந்தனர். பணிப்பெண்ணோ பரி காரியிடஞ் சென்று "இருவர் நோயாளி யொருவனைக் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள்" என்று சொல்லி, அவர்கள் கொடுத்த வெள்ளியை அவன் கையிற்றந்தனள். பண்டிதன் வேலைக்காரியை "தீபங்கொண்டுவா" என்று கட்டளையிட்டு, வியாதியஸ்தனைக் காண வேண்டி விரைந்து தானிருந்த அறையைவிட்டு வரும்போது, அவன் கால் தடுக்கி மேற்படிக் கடுத்தாற்போல் வைக்கப்பட்டிருந்த பிணம் மளமளவென்று புரண்டு கீழேபோய் விழுந்தது வைத்தியன் "இஃது என்னை ?" என்று தீபங்கொண்டுபார்க்கக் கூனன் விழுந்து செத்துக் கிடக்கக் கண்டான். "ஓ ஓ! நாம் என்னகாரியஞ் செய்தோம்? ஐயோ! இவனைக் கூட்டிக்கொண்டு வந்தவர்கள் எங்குற்றனர் ? நமது அவசரத்தா லிவனிக்கதியானாற்போற் காண்கிறதே, யாது செய் வோம்?" என்று திகிலடைந்து சற்றுத் தெளிந்து, தானுந் தன் மனை வியுமாய் ஒருவித ஆலோசனை செய்துகொண்டு, நல்ல நிசிவேளையில் அண்டையிலிருந்த வொருவர்த்தகன் வீட்டின் இறப்பின்மேலேறி யிருந்துகொண்டு, அவ்வீட்டின் புகைக் கூண்டின்வழித்தாய் அக்கூ னற்சவத்தின் கைகளிற் கயிறுதொடுத்து மெல்லக் கீழே இறக்கிவிட் டுக் கயிற்றை மேலாகவே வாங்கிக் கொண்டார்கள். சதிர் கச்சேரிக் குப் போயிருந்து அப்போதுதான் வீட்டுக்குவந்த வர்த்தகன் புகை போக்கியின் வழியாய் ஒரு சிறுகுள்ளன் இறங்கி நிற்பதாகக் கையிலி ருந்த தீபத்தாற் கண்டு, "ஓகோ! திருடனிதோ அகப்பட்டான் அகப்பட்டான்" என்று கூச்சலிட்டு, "ஆ! எலியும் மூஞ்சூருமல் லவோ என் எண்ணெயையெல்லாங் குடித்துப்போகின்றனவென்று நினைத்தேனே, நீதானா இதுவரையிலும் என்சொத்தைக் கொள்ளை கொண்டாய்? நல்லது ஓடிப்போகப்போகிறாய், நில்லு நில்லு" என்று அதட்டிக்கொண்டே ஒரு நீண்ட தடியோடுவந்து சவத்தைப் புடைத்

தான். அடியுண்டபிணம் கீழேவீழ அதன்மேல் தான் வீழ்ந்து நன்ருய்ப் புடைத்தான். அப்போது கள்ளன் அசைவின்றிச் சத்த மிடாதிருக்கக்கண்டு, வர்த்தகன் தீபங்கொண்டு சோதித்து அடி பொறுக்கமாட்டாம லவன் செத்து வீழ்ந்து பிணமாயினுனென்று நினைத்து, அவன்மேற் கொண்ட கோபம் போயொளிக்க "ஐயையோ! நமது மூர்க்கத்தனத்தால் திருடன் மாண்டானே, கொலைபாதகனுனேனே தண்டனைக்குள்ளாகவேண்டி வருமே, ஐயோ! தெய்வம் இப்படியுமென்னைப் பழிக்காளாக்குமா?'' என்று பலவாறு எண்ணி எண்ணி முகம் வாடி இடிவிழுந்த மரம்போலே நின்று, பிரமித்து, சித்தங்கலங்கி ஒன்றுந்தோன்ருமல் ஏங்கி, "அடா பாவி! அடா சண்டாளா! என்பொருளைக் கொள்ளைகொண்டதுமல்லாமல் என் குலத்தையுமழிக்கவந்தாயே காலா! என்றுபலவாருய்ப் பிணத்தை வைது, பின்பு அந்தக் கோணற் சவத்தைத் தோளின்மே லெடுத்துச்சென்று, தன் வீட்டுத் தெருக்கோடியிலுள்ள ஒரு கடைவீட்டின் சுவரோடு சுவராய் நிற்கும்படி நிறுத்திவிட்டுத் திரும்பிப் பாராமலே யொருவருமறியாதபடி மிக்க பரபரப்பாய் வீடுவந்து சேர்ந்தான்.

பின்பு சுக்கிர னுதித்துக் கீழ்த்திசை வெளுத்துப் பொழுது புலருந்தருணத்தில் மிக்க செல்வவந்தனும், பெருமைபெற வாழ்பவனும், இராஜமாளிகைக்கு வேண்டியசாமான்கள் கொடுத்து வருபவனுமான மிலேச்ச வர்த்தகனெருவன், அன்றிரவைச் சிற்றின்ப நுகர்ச்சியிலேயும் வெறியாடலிலேயும் போக்கி நேரப்பட விழித்தெழுந்து, நித்திரைமயக்கந் தெளிந்துந் தெளியாதவனுய்ப் படுக்கையைவிட்டுவெளிப்பட்டு, காலைக்கடன் கழித்து நீராடி மீளவிரும்பி, இராத்திரி யுண்ட மது மயக்கத்தால் தள்ளாடிக்கொண்டே செல்லுகையில் கிலந்தெளிந்தால் சனங்கள் தன் நிலையைக்கண்டு நகைப்பார்களே என்கிற அச்சத்தாற் சற்று விசையாய் நடந்து சென்ருன். அப்படிச் செல்லுங் காலடி யதிர்ச்சியாற் சந்தின் மூலையோடு மூலையாய் நிறுத்தப்பட்டிருந்த சவம் அவன் சந்து திரும்புகையி லவன் முதுகின் மேல் திடீரெனச் சாய்ந்தது. சாயவே அதைப் பிணமென் றேராது, பதுங்கியிருந்து ஆளைப்போகவிட்டு மேல்வீழ்ந்து குறளையைப்பிடித்து வழிபறிக்குங்கள்வனென்று நினைத்துத் திரும்பி விரைவிற் சவத்தைப் பற்றி முகத்தில் ஓங்கி ஒரு குத்துகுத்தினுன். அக்குத்தினுற் சவங் கீழேவிழ, அதன்மேல் தான் வீழ்ந்து "திருடன்! திருடன்!'' என்று கூக்குர லிட்டுக்கொண்டே நன்ருய்ப் புடைத்தான். அவன் கூச்சல் வழிப்போக்கர்களை அங்குக்கூட்டியது; சரத்துச் சேவர்களும் வந்து

சேர்ந்தனர். காவற்காரர் சங்கதி விசாரித்து வர்த்தகனை "ஐயா! அடித்ததுபோதும், நிறுத்து நிறுத்து" என்று விலக்கி, கள்வனை முழுந்திருக்கும்படி கைலாகு கொடுத்துத் தூக்க முயன்றனர். கள்வனெழுந்திராம லசைவின்றிப் பிணமா யிருக்கக்கண்டு வர்த்தகனைப் பிடித்துக் கட்டிப்போய் நியாயாதிபதியினுடைய காவற்கூடஞ்சேர்த்தனர். மிலேச்சவர்த்தகன் அப்போது மதுமயக்க நீங்கித் தெளிந்து, தான் முன்பின் யோசியாது செய்த செய்கையைக்குறித்துச் செய்வதின்னது தவிர்வ தின்னதென ஒன்றுந் தோன்றுதவனாய்த் தியங்கித் துன்புற்றிருந்து, நியாயாதிபதி கச்சேரிக்குவந்தவுடன் அவர்முன் கொண்டுபோய் நிறுத்தப்பட்டான். நீதிமான் காவலர் சொன்ன பிரியாதைக் கவனமாய்க்கேட்டு, கைதியுட னெடுப்பித்து வந்த சவத்தை நன்ருய்ப் பார்வையிட்டு, வர்த்தகனை நோக்கி "நீ செய்ததாய் ருசுவாகிற இக்கொடிய செய்கைக்கு என்ன சொல்லுகின்றாய்?" என்றான் வர்த்தகன் "ஐயா! இவன் எனது கைகளாற் கொலையுண்டான் என்பதில் ஐயமில்லை, ஆதலினால் நான் குற்றவாளியல்லன் என்று சொல்வதற்கு வழியொன்றுமில்லை" என்றான்.

நியாயாதிபதி இந்தக் குறிய கூன்சவத்தைக் கண்டபோதே ஊராள் வோனுக்குச் சந்தோஷம் விளைவிக்கும் அகசியக்காரருள் அக்கூனனு மொருவனென் றறிந்தவனாதலாலும், வர்த்தகனும் அரண்மனையைச் சார்ந்தவனாதலாலும், அரசன் அனுமதிபெறவேண்டி, இவ்வர்த்தகன் அறியாதுபுரிந்த கொலையைக்குறித்தும், அவனதைத்தடையின்றி யேற்றுக்கொண்டதைக்குறித்தும் தேசாதிபதிக்கு விண்ணப்பஞ்செய்து, அவன் கட்டளை பெற்று மிலேச்சவர்த்தகனைக் கழுவிலேற்றும்படி தீர்மானித்து, வர்த்தகனைக் கொலைக்களத்திற்குக் கொண்டுபோம் படிக்குக் கட்டளையிட்டான். கொலைபுரிவோர் கழுமரத்தடியில் அவனை நிறுத்தித் தூக்க எத்தனிக்குந் தருணத்தில், வேடிக்கை பார்க்கவந்து அங்குக் குழுவிய கூட்டத்தினின்று "ஐயா! அவரை கழுவேற்றுதே! ஏற்றுதே! கூனனைக் கொன்றவன் நானே" என்று உறத்துக்கூவிக்கொண்டு ஒரு சுதேச வர்த்தகன் சரேலென்றெதிரேவந்து, நியாயாதிபதிசை நோக்கி, தன் வீட்டின் புகைகூண்டின் வழியாய் அக்கள்வன் இறங்கினதும், அவனைத் தானடித்ததும், அதனாலவனிறந்துபோனதும், தெருவிலே யவன் சவத்தைக் கொண்டுபோய் நிறுத்தினதும் இவைமுதலான தன் கதையைச்சொன்னான்.

நியாயாதிபதிகேட்டு "இவ்வர்த்தகன் சுயேச்சையாய் ஓடிவந்து தானே கொலைபுரிந்தேனென்று குற்றத்தை ஏற்றுக்கொள்ளுகி

ருனே, இஃது என்னே ஆச்சரியம்?'' என்று சற்று யோசித்துநின்று, பின்பு "நன்று, அம்மிலேச்ச வியாபாரியை விட்டு இவ்வர்த்தகனைக் கழுவேற்றுக'' என்றான். கொலையாளிகள் அந்த வர்த்தகனைப் பிடித்துக் கட்டும்போது யூதவயித்தியன் ஒருவன் கும்பலினின்று வெளிப்பட்டு "ஐயா நியாயாதிபதியே! பொறும், பொறும்; இக்கொலைக்குக் காரண மிவ்வர்த்தகனல்லன்; நான் சொல்வதைச் சற்றுச் செவி சாய்க்கக்கடவீர்'' என்று சொல்லி, சென்ற இராத்திரி நல்ல தூக்க வேளையில் இருவர் இக்கூனனைக் கொடுவந்து தன் வீட்டுத் தெருக்கதவைத் தட்டினதும், வேலைக்காரி தீபமில்லாமற் கதவைத் திறந்ததும், அவர்க ளவள்கையில் ஒரு வெள்ளியைக் கொடுத்து அதைத் தன்னிடங் கொடுத்து அவர்கள் கூட்டிவந்த வியாதியஸ்தனை உடனே வந்து பார்க்கும்படிக்கு வேண்டினதும், அவர்கள் வேண்டுகோளைத் தன்னிடம் அவள் வந்து சொல்லுகையில் இக்கூனனை வீட்டின்மேல் மாடி படியண்டை அவர்கள் விட்டுப்போனதையும், தீபமில்லாமல் நோயாளியைப் பார்க்கவேண்டித் தான் அவசரமாய் வருகையிற் கால்பட்டுக் கூனன்படியிற் புரண்டு கீழே வீழ்ந்து செத்துக் கிடந்ததையும், தானும் தன் பெண் சாதியுமாய்ச் சவத்தை யெடுத்துப்போய் அடுத்த வர்த்தகன் வீட்டு இறப்பின் புகைக்கூண்டின் வழியாய் வீட்டினுள் இறக்கி விட்டதையும் விவரமாய்ச் சொல்லி "இக்கூனனை யுண்மையாகக் கொன்றவன் நானே யாதலால் கழுவேற்றப்பட வேண்டியவன் நானாகவே யிருக்கிறேன்; அவ்வர்த்தகன் குற்றவாளி யல்லன் அல்லன்'' என்றான்.

அதைக்கேட்டு நியாயாதிபதி "இஃதென்னே புதுமை? முற்றுஞ் சோதித்தறிவோம்'' என்று "நல்லது, இவ்வர்த்தகனைவிட்டு வயித்தியனைப் பிடித்துத் தண்டிக்கக்கடவீர்'' என்று கட்டளையிட்டான். அப்போது சுந்தரனென்னுந் தையற்காரன் கூட்டத்தினின்றும் "நான் தான் குள்ளனைக் கொன்றேன் கொன்றேன், வயித்தியனைக் கொல்லாதேயுங்கள்'' என்று கூவிக்கொண்டு நியாயாதிபதி முன் சரேலென ஓடிவந்து, அக்கூனனைத் தான் கடையிற்கண்டு வீட்டிற்கழைத்துப்போய் விருந்தளித்தபோது அவன் முள்ளடைத்துக்கொண்டு செத்து வீழ்ந்ததனால் அவனைத் தானும் மனைவியுமாய் தூக்கிக்கொண்டு சென்று வைத்தியன் வீட்டின் மேல்மாடிப்படியிலேவிட்டு வந்ததுமுதல் எல்லாச்செய்தியையும் விளங்கச்சொல்லிக் "கூனன் செத்தது நானிட்ட சோறுண்டதனு லாதையால் நானே கழுவேற வேண்டியவனாகின்றேன்'' என்று பிரலாபஞ்செய்தான்.

நியாயாதிபதி இம்மூவர் செய்தியையுங்கேட்டு மேலே நடத்த வேண்டியதைப்பற்றி ஆலோசியா நிற்கையில் வேடிக்கைபார்க்க வந்த வர்களுள் ஆங்கு நிகழ்ந்தனவெல்லாம் மிக்க ஆவலோடு கேட்டுக் கொண்டு நின்றிருந்த குழிந்தாழ்ந்த சிறு கண்களோடு கூடியவனும் வெள்ளிக்கம்பிக் காய்த்துத் தொங்குவதுபோல்தேகமெங்கும் நீண்ட நரை பொருந்திய உரோமங்கள் குறைவரப் பெற்றுள்ளவனும், உச்சி முதற் பாதம்வரையிலும் தளர்ந்து மடிப்படைந்து கறுத்து நீண்ட தேகத்தோடு கூடினவனுமாகிய ஒரு கிழ அப்பட்ட இரணவைத்தி யன் சடுதியில் நியாயாதிபதி முன் வந்து நின்று, "ஐயோ! இந்தக் கூனன் இன்னுஞ் செத்தானில்லை உத்திரவானால் சில நிமிஷத்திற் குள் அவனை உயர்ப்பிக்க மாட்டுவேன்" என்று சொல்லிக்கொண்டே பிணத்தண்டை சென்று, அதன் தலையைப் பிடித்துப் பலமாயசைத் துப்பார்த்துத் தன்னிடமிருந்த வோராயுதத்தினால் அக்கூனன் தொண்டையிலடைத்துக்கொண்டிருந்த முள்ளையாவருங்காண எடுத் துக்காட்டி, கூனன் சகசமாய் நித்திரையினின் றெழுந்திருப்பவன் போல ஆயாசமின்றி யெழுந்து ஆடிப்பாடும்படிசெய்து, ஆங்கெய்திய எல்லோரையுஞ் சந்தோஷ சாகரத்தில் முழுகச்செய்தனன்.

# இரண்டாம்பாகம்.

## 19.—ஸ்திரீகள் கற்புடனிருக்க வேண்டியதற்குக் காரணம்.

முற்காலத்தில் பிரகஸ்பதிக்குத் தமையனுர் உசத்தியரென்கிறவருடைய மனைவி கருவுற்றிருந்தாள். எக்காலத்திலும் எப்படிப்பட்டவர்க்காகிலும் தீயசெய்கை விடுவதில்லை என்பது மாயாமயமாகிய உலகத்தின் இயற்கையாகையினுலேயும், காமமென்பது கொடிய தீயகுணமாகையினுலேயும், பிரகஸ்பதியானவர் தீவினையின் வலிமையினுல் கொடியகாமமடைந்து அதனுல் செய்வினை தவிர்வினையொன்றுந் தோற்ருமல் மூடராய்க் கருவுற்றிருந்த மூத்தவன் மனைவியோடு சம்யோகிக்க முயலுகையில் கருப்பத்திலிருந்த சிசுவானது இவரைப் பார்த்து ஐயரே! தேவர் மகாபுருஷர், மகானுபாவர், உமது வீரியம் வீணுய்ப்போகாமல் ஒருபிள்ளையை யுண்டுபண்ணும். நானொருவனுகவே, இந்தக் கருப்பத்திலிருக்க வருத்தப்பட்டுக்கொண் டிருக்கையில் மற்ருெருபிள்ளையுமிதில் உண்டானுல் எனக்கு மிகுந்தவருத்த முண்டாகுமல்லவோ? நான் வெளியிலேவந்து விடுவோமென்ருல் இன்னம் காலமாகவில்லை; ஆதலாலே தயைசெய்து இப்போது என் தாயுடன் புணராமற் போகவேண்டுமென்று சொல்ல, அதுகேட்டுப் பிரகஸ்பதியானவர் காமாவேசம்போல மிகுந்த கோபாவேசங்கொண்டு அடா பிள்ளாய் காமவேதனை தீர்த்துக்கொள்ளவந்த என்னை நீ, வயிற்றிலிருந்துகொண்டு தடுக்கிறபடியினுலே நீ பிறவிக்குருடனுய்ப்பிறக்கக் கடவாய் என்று சபிக்கவே, அந்தரிஷிகுமாரர் அப்படியே பிறவிக்குருடராய்ப்பிறந்து தீர்க்கதமன் என்கிற பெயர்பெற்றுச் சகலவேத சாஸ்திரங்களிலும் வல்லவராய் மகாஞானியாரர்கி ஓராச்சிரமத்திலிருந்தார்.

இப்படி இருக்குமிவருக்கு ஒருரிஷி கன்னிகாதானம்பண்ணினர். அந்தத் தீர்க்கதமர் அப்பெண்ணை மணஞ்செய்து அவ்வாச்சிரமத்திலே அவளுடன் கூடத்தவஞ்செய்து வந்தார். அவருக்குச்சில புத்திரர் பிறந்தனர், இவ்வாறு நெடுங்காலமானபின் அந்தத் தீர்க்கதமரிஷியினுடைய மனைவியானவள் அதிக போகவிச்சைகொண்ட கொடிய சித்தமுடையவளா யிருந்தபடியினுலே நாமோ நல்லபோகத்

துக்குரிய தன்மையுடையவளாயிருக்கிறேம், நமது கணவனே குருடன்; மேனிதளர்ந்தவன் போகத்தில் வெறுப்புடையவன். இவனேடின்ன மெத்தனைநாளிருக்கிறது? இவன் நம்மைக் கலியாணஞ் செய்ததற்குப் பலன் பிள்ளைகள் பிறந்தன. இனிவிருதாவாக இங்கே இருக்கிறதிற் பிரயோசனமென்ன? சுந்தரனுகியும், காமப்போர் விருப்பமுடையவனுகியு மிராநின்ற மற்றொரு புருஷனை தேடிக்கொள்ள வேண்டுமென்று நினைத்து, அப்பாதகியானவள் நமது கருத்தை இந்தக் குருடன் அறிந்தால் ஏதாகிலும் தொந்தரைசெய்வான்; இவனுடனே கூடவிருந்தால் இராப்பகலறுபதுநாழிகையும் பணிவிடை செய்யவே சரியாயிருக்கின்றன. ஆதலால் இவனைத் தந்திரமாகக் கொல்லவேண்டுமென்று காட்டுக்கொம்புகளினுலே ஒருதெப்பங்கட்டி அதில் தன் புருஷனை உட்காரவைத்துக் கங்காநதியில் விட்டு விட்டாள். புத்திரரும் தாயின்செய்கைக்கே றுணைப்பட்டிருந்தார்கள்.

இவ்விதமாக இப்பாதகரெல்லாருங் கொடியசெய்கைசெய்து தண்ணீரில் விட்டுவிடவே, அந்தத் தீர்க்கதமரென்கிற மகாமுனியானவர் மிகவுங்கோபங்கொண்டு மனத்தில் ஆலோசித்து ஓ ஓ! உலகத்தில் இதுவரையிலும் ஸ்திரீகள் யாவருக்கும்பொதுவென்றும், விவாகஞ்செய்தவன், அதிபதிமாத்திரமேயென்றும், யாருடன் ஸ்திரீகள் சேர்ந்தாலும் தோஷமில்லையென்று மிருக்கிறபடியினுலேயல்லவோ? இப்படிப்பட்ட கொடுஞ்செய்கைக்கு இடமுண்டாயிருக்கிறது. ஆதலால், இதுமுதல் ஒருவன் விவாகஞ்செய்த ஸ்திரீயை மற்றொருவன் சேரக்கூடாது. எந்த ஸ்திரீயாகிலும் விவாகஞ் செய்தவனையன்றி மற்றொருவனுடனே சேரக்கூடாது, பேசவுங்கூடாது, அப்படியாராகிலும் அதிக்கிரமமாய் நடந்தால் அவர்களுக்கு மகாபாபம் நேரிடக் கடவது. அதனுலே கொடியநரகம் சம்பவிக்கக்கடவது. அவர்கள். சண்டாளருக்குச் சமமாகப் போகக்கடவர்கள். தன்னைக்கலியாணஞ் செய்த புருஷன் ரூபவானுயிருந்தாலும், குரூபியாயிருந்தாலும், தனவானுயிருந்தாலும், தரித்திரனுயிருந்தாலும், அந்தஸ்திரீ இகழவுங் கூடாது அவனைவிடவுங்கூடாது அப்படிசெய்யாதவர்களுக்கு நரகம் வரக்கடவதென்றுசபித்தார். அதுமுதல்தான் உலகத்தில் இந்தநல்ல ஏற்பாடு உண்டாயிற்று.

## 20.—கற்புக்கரசியாராகிய சாவித்திரிதேவியார்.

மத்திர தேசாதிபதி யென்னும் அசுவபதி மஹாராஜன் மாளவியாகிய தேவியுடன் கூடிவாழுநாளில் சகல சாம்பிராச்சியம் சம்பூரணமாயிருந்தும், புத்திரன் பேறில்லாக் கொடுமையால் வருத்த முற்றிருக்கையில், திரிலோக வாசியாகிய நாரத முனிவரைத் தரிசிக்கப்பெற்று, அவர்பால் தங்கள் குறைகளை முறையிட, அவர் சரஸ்வதி தேவியார் கடாக்ஷத்தால் சில காலத்திற்குள் ஒரு குழந்தை பிறக்குமென்று சொல்லிப் போயினர். அவ்வண்ணமே சில காலங் கழித்துப் பார்வதியார் அநுக்கிரகத்தால் நல்ல சுபமுகூர்த்தத்தில் தேஜோ மயமாகிய வொருமகவைப் பெற்று, சாவித்திரியென்று நாமகரணஞ் செய்து வளர்த்து மங்கைப் பருவம் வந்த காலத்து, நங்கைக்குத் தகுந்த நாயகன் வேண்டுமே எங்கு வாய்ப்பானென்று தந்தை தா யிருவரும் ஏங்கி யிருக்கையில், ஒருநாள் முன்போலவே நாரத முனிவர்வரவும், அவரை எதிர்கொண்டு சிங்காசனத்திலிருத்தி, மனங் குழைந்து அம்முநீந்திரரைப் பார்த்துத் தேவர் கட்டளைப்படி உதித்த சாவித்திரிக்குத் தகுந்த கொழுநன் வேண்டுமே யென்று சஞ்சலப்படுகின்றேமென்றுகூற, அதற்கு யாழ்முனிவர் அவரவர்கள் வினையின் வண்ணம் எதுவும் நடக்கும் நீங்கள் ஒன்றும் யோசிக்க வேண்டாம். சர்வஜீவ தயாபரமூர்த்தி சாவித்திரியினது மனத்தில் குறித்திருக்குந் தலைவனையே தலைவனாக விதித்திருக்கின்றார். அவனுக்கே பாணிக்கிரஹனஞ் செய்து கொடுப்பது உத்தமமென்று நவிலக்கேட்டு, இராஜன் குமாரத்தியினது முகத்தை நோக்கி, அம்மா! உன் மனத்தில் குறித்திருக்கும் நாயகனைச் சொல்லென்று கேட்க, பருவமங்கை யாதலினால் சற்றுநேரந் தாமதித்து ஐயா! நான் சிறு பெண்ணாகிய காலத்தில் பூங்காவனத்தில் என் சேடியர்களோடு விளையாடிக்கொண்டிருந்தபோது, சாலுவ தேசாதிபதி குமாரன் சத்தியவான் அவ்வழியாய்க் குதிரையின்மேல் போகக்கண்டு, அன்றே நெஞ்சில் அவரை வரித்தேனென்று மொழிய, இதுகளை நாரதரிடத்து விண்ணப்பஞ் செய்து, சுவாமி! அந்தச்சாலுவ தேசாதிபதியின் புத்திர சிகாமணியாகிய சத்தியவானுடைய குணாதிசயங்களை தயைசெய்ய வேண்டுமென்று பணிவாகக் கேட்டனா. பகவான் ஸ்ரீநாரத முனிவர் மொழிகின்றார். அந்த இறைவன் அழகில் சிறந்தவன், ஆண்மையிலுயர்ந்தவன், ஆயினும், இன்னம் ஒருவருடத்தில் தேகவியோகமாவன் அவன் தாய்தந்தை யிருவருக்குங் கண்ணில்லாமல் தங்களிராச்

சியத்தைச் சத்துருவினிடத்தில் ஒப்புவித்து விட்டு அரணியத்தில் கஷ்ட தசையடைந்து வாசஞ் செய்கின்றார்களென்று கூறி தம்மிருப்பிடம்போய்ச் சேர்ந்தனர். இதைக்கேட்ட மாதா பிதாக்கள் மிகுதியும் வருத்தமுற்று தமது செல்வக்குமாரத்தியை நோக்கி, நாரதமுனிவர் நவின்றதை கேட்டனையன்றோ? அவர்கள் புத்திரனை மணக்க விரும்புவது தகுதியன்று. வேறு புருடனை விரும்புவையென்றுகூற, சாவித்திரி, அவர்கள் வருத்தமுற்று வனத்திலிருந்தாலும், இன்னும் வரவேண்டிய தீயுவை நேரிட்டாலும், அந்தச் சத்தியவானே நாயகன் நானே அவருக்குப் பத்தினியென்வினையின் வண்ணம்நடக்குமேயன்றி வேறு நடவாது. ஆகையால், நீங்கள் ஒன்றுக்குஞ் சிந்திக்காமல் என்னை சத்தியவானுக்கே விவாஹஞ் செய்து கொடுத்து விடுங்களென்று சொல்லினள். அப்படியே மத்திர தேசாதிபதி வனத்திலிருக்கும் சத்தியவானின் தந்தை தாயர்களிடஞ் சென்று நோக்கி, என்பெண் உம்முடைய குமாரனை விவாஹஞ் செய்துகொள்ளக் கருதினள் என்றுகூற, சாலுவராஜன் சற்றுலோசித்துச் சம்மதித்தனன். உடனே மத்திர தேசாதிபதி நல்ல சுபமுகூர்த்தத்தில் கன்னிகாதானமாகச் செய்து முடித்துக் குமாரத்திக்குச் சில நீதிகளைக்கூறி, தன்னிருப்பிடம்போய்ச் சேர்ந்தான். அப்பால், சாவித்திரியும், சத்தியவானும் பாலும் பழமும், உடலும் உயிரும்போல மனம் பொருந்தி வாழுங்காலத்தில், சாவித்திரி மூன்றுவது சாமத்திலெழுந்து நித்தியக் கடன்களை முடித்துக்கொண்டு, கனி காய்களைக் கொண்டுவரும்படி நாயகன் சென்றபின், மாமன் மாமியாரை நித்திரை நீக்கி அவர்கட்குச் செய்யவேண்டிய பணிவிடைகள் புரிந்து தருமகதைகளைப் பேசிக்கொண்டு அன்னோர் கால்களையும் கரங்களையும் மெல்லெனப் பிடித்துக்கொண்டிருந்து, நாயகன் வந்தவுடன், அவன் கொண்டுவந்த காய் கனி, கிழங்குகளை இருகுரவருக்கு முன்மித்து, அப்பால், தன் காதலனுக்குக் களைதீரச்செய்து, அவன் உண்டபின்பு அவனுண்ட சேஷத்தை அருவருப்பில்லாமல் அமிர்தம்போல உண்டு, கண்டோர் அருந்ததி இவளெனக் கூறும்படி ஒழுகி அகமகிழ்ந்திருக்கு நாளிலே, பகவான் நாரதமுனிவர் நவின்ற வாக்கியத்தை மனத்திலிருத்தி வருந்தும் இத்தையனுயகி, ஒவ்வொரு நாளாகக் கணக்கிட்டு இன்னம் நான்கு நாளிருக்கின்றன, தன் நாயகனுக்கு ஆயுளென்று கருதி மிகுந்த சாக்கிரதையுடன் மூன்று நாள் வரையும் அன்னபான முதலியவை நீக்கி, தேவியாரைத் தியானித்துக்கொண்டு, நான்காநாள் உதயத்திற்கு முன்னெழுந்து, கணவனை நோக்கித் தமியளும் தேவரீருடன்

காட்டுக்கு வருகின்றேன் தடை சொல்லாமல் அடியேனையும் உடன் கொண்டுபோக வேண்டுமென்று இரந்து கேட்டுக் கொண்டனள். அதுகேட்ட சத்தியவான், என் தாய் தந்தையரிடம் கட்டளை பெற்று வருவாயாயின் வாலாமென்று சொல்ல, அப்படியே, தன் மாமன் மாமியை வணங்கி உங்கள் குமாரரோடு காட்டுக்குப்போய் வருகிறே னென்று விண்ணப்பஞ் செய்தனள். அவர்களும் நல்வினை வசத்தால் உடன்பட்டுப் புத்திரனை யழைத்து, இப்பெண்ணை ஜாக்கிரதையாய் அழைத்துக் கொண்டுபோய் வெகு விரைவில் வரக்கடவை யென்று ஆசீர்வதித்து அனுப்பினர். இவ்விருவரும் சந்தோஷத்துடன் வனத் திற்குச் செல்லுகையில், சாவித்திரியானவள் செம்பருந்தோடு நிழ லுஞ் சென்றதுபோலப் பிரியாமல் தொடர்ந்து பின்பற்றும்போது பற்பல கனிகளையுடைய ஒரு விருக்ஷத்தைக் கண்டு, அதில் ஏறுவ தற்கு விரும்பிய சத்தியவானானவன், தன் பத்தினியை நோ க்கி, இப்போது என் கரங்கள் கால்கள் எல்லாம் நடுங்குகின்றன. ஓய்ந்து போகின்றன; கண்கள் சுழன்று ஒளிமழுங்குகின்றன; சுவா சம் தடுமாறுகின்றனவென்று சொல்லிச் சாய்ந்தான். அங்ஙனஞ் சாய்ந்த காதலனைத் தன் மடியின்மீது சிரத்தைவைத்துப் படுக்கச் செய்துகொண்டு ஏங்கியிருக்குஞ் சமயத்தில், யமன் பதிவிரதை யாகிய சாவித்திரியம்மனை நெருங்கிவர உடல்நடுங்கி மெதுவாகவந் து சத்தியவானுடைய பிராணனைக் காந்தம் இரும்பை இழுக்குந் தன் மைபோல் கைக்கொண்டு நடக்கக் கண்ணுற்ற சாவித்திரி தன் மடியி லிருந்த சிரசை பூமியில் வைத்துவிட்டு, தன் கண்களுக்கு நேராகக் காணுகின்ற மஹாபுருடனைத் தொடர்ந்துபோகையில், மறலியான வன் திரும்பிப்பார்த்து நீ யாரம்மா வென்று வினவினன்? சாவித்திரி தீர்க்க தெண்டஞ் செய்து சுவாமி! என் நாயகனுடைய பிராணனைக் கைக்கொண்டு போகின்ற நீர் யாரையாவென்று கேட்க? தென்றி சைக்கோன் நகைத்துப் பதிவிரதையின் மஹத்துவத்திற்குச் சந்தோ ஷங்கொண்டு அம்மா! கேளாய் நான் சங்காரத்தொழில் செய்கின்ற யமன், உன்னுடையபதிக்கு ஆயுள் இன்று பதினைந்துநாழிகையுடன் முடிந்துவிட்டது. இந்த சத்தியவான் உத்தமனாகையால் நானே வந்து கைக்கொண்டேன், நான் தேவன். நீங்கள் இருவரும் மக்கள் உம்முடைய நற்குண நற்செய்கையால் என்னைக்காணப்பெற்றாய், நீயேன் கால்வருந்த வருகின்றனை, அவ்விடம் நில்லென்று சொல்லி னன். அந்த அம்மாள் நாங்களிருவரும் உடலும், உயிரும் போலி ருந்தோம், உடலைவிட்டு உயிரைக் கொண்டு போவது நீதியன்று என்

னையும் உடன் கொண்டுபோவது உத்தமமென்றியம்பக் கேட்ட கூற்றுவன் ஆயுள்முடியாமல் உன்னை யழைத்துக்கொண்டுபோக என்னால் இயலாது. ஆகையால் உனக்குப் புருடன் தவிர வேறுவ ரங்களை ஏதாகிலும் வேண்டியிருந்தால் கேளாயென்று கூறினர். அம்மொழியைக்கேட்டு ஆண்டவனே! என்மாமனர் மாமியார் இரு வருக்குங் கண்கள் தெரியும்படி கடாட்சிக்க வேண்டுமென்று கேட்க; அப்படியே கொடுத்தே னென்று சொல்லிமறலி நடத்தலும், பெண் ணரசி மீண்டும் விடாது தொடர்ந்து வருவதை அந்தகன் கண்டு ஏனம்மா நீ ஒன்றியாக வருகின்றனையே? வியர்வை பெருகவருந்தி வருவானேன்? நின்றுவிடென்று கூறினன். அதற்கு சாவித்திரி நாயகனில்லாவாழ்வு நஷ்டமென்றும், புருடனையிழந்த பூவைபின்ன மென்றும், என்போலொத்தபெண்கள் யாவரும் செழித்துக்களிக்க வும் நான் கண்ணீர் சொரிந்து தத்தளிக்கவுஞ்செய்வது உமக்கழகன் றென்றும் சொல்லப் புலம்பினள். அதற்கு யமன் இவ்வுயிர் தவிர வேண்டியவரத்தைக் கேளென்ன, தன் மாமனுருக்குப் பழையபடி இராச்சிய சம்பிரமச் செல்வங்க ளெல்லாம் கிடைக்கும்படிவேண்ட, அப்படியே ஆருகவென்று சொல்லி தென்திசைக்கோன் நடக்க, விடாமல் தொடர்ந்து நெடுந்தூரம் பின்தொடர்வதைக்கண்டு தாயே ஏனிப்படி வருந்து கின்றாய் ஜன்மிக்கும்போதே ஆயுள் இவ்வள வென்று நிர்ணயித்திருக்கிறது. அவரவர்களை நன்மை தீமைக்குத் தக்கதாய் நடத்துவேன். ஆகையால் வேறுவரங்களைக் கேட்டுக் கொள்ளலாமென்று கூறினன். அம்மொழியைக்கேட்டு சாவித்திரி என் தந்தைசிந்தைகளிக்கும்படி நூறுமைந்தரைத்தந்தருள வேண்டு மென்று கேட்க, அப்படியே தந்தேனென்று நடுவன்கூறி அந்தரத் தில் மறைந்துபோயினன். அப்பால் சாவித்திரி சிந்தைகலங்கி வந்த வழிதெரியாமல் எந்தவழிமறைந்தா னென்று ஏங்கித்தென்திசையை நாடி ஓட்டமும் நடையுமாக விரைந்து வருவதைக்கண்டு, ஒருகற்பு டைய பெண்மனம் நொந்தால் ஏதாமோ, எப்படி விளையுமோஎன்று சிந்தித்துக் கூற்றுவன் எதிரில்தோன்றி அம்மா! உனக்கு அனேக வரமும் கொடுத்தேனென்றுகூற, சாவித்திரி இன்னமும் மேலாகிய பாக்கியங்களைக் கொடுத்தாலும் அவை என்னபலனைக் கொடுக்கும் இறைவனே! என்புருஷனையும் தயைசெய்து விடுவீராகில் நீர் கொ டுத்தபாக்கிய மெல்லாம்பயன்படும் எனக்கு மாங்கல்யபிட்சை யருள் புரிந்து இரட்சிக்க வேண்டுமென்றிரங்கினள். அச்சாவித்திரியைக் கூற்றுவன் நோக்கித்தாயே! நீ சிறந்த உத்தமியாதலால் உன் எண்

ணத்தை நிறைவேற்றிக் கொண்டாய், யானே மெத்தவும் மகிழ்ந்தேன். உன்னுடைய நாயகன் பிழைக்கவும், நீ சகல நலங்களையும் பெற்று வாழவும் நான் வரமளித்தேன். நீங்கள் இருவரும் வாழக்கடவீரென்று ஆசீர்வதித்தான். சாவித்திரியம்மை தருமனுக்குச் சாஷ்டாங்கமாகத்தண்டன் சமர்ப்பித்து விடைபெற்றுக்கொண்டு, முன்னிருந்த விடத்திற்கு வந்து புருடனுடையசிரத்தை எடுத்து மடிமீது வைத்து முகத்தைப்பார்த்துக்கொண்டிருக்கும்போது, நித்திரை நீங்கி எழுந்தவரைப்போலெழுந்து, மனைவியினுடைய முகத்தைப்பார்த்து நானயர்ந்து நித்திரை செய்தேனே, என் எழுப்பாமல் போனாய்? பகலும் கழிந்தது. தாய்தந்தையர்கள் வருந்துவார்களே. மேலும் ஒரு திவ்ய புருஷன் என்னைக் கைக்கொண்டுபோகவும், ஒருத்தமப்பெண் பின் தொடர்ந்து அவன் வசத்தினின்று மீட்டுக்கொண்டுவரவும், சொப்பனங் கண்டு விழித்துக் கொண்டேனென்று சொல்லினன். அச்சொல்லைக்கேட்ட சாவித்திரியானவள் நாயகன் முகத்தைநோக்கி நீர்கண்டது கனவன்று, நிஜமான காரியந்தானென்று கூறி இருவரும் வீட்டிற்கு அதிவேகமாய் வரும்போது, இவர்கள் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் அன்னை தந்தையர்கள் மனம் நொந்து வாடித் தாங்களிருக்கு மிடத்தில் நிழல் சாய்வதைக்கண்டு ஐயோ பொழுது போய்விட்டதே, எம்புத்திரனையும் மருமகளையும் இதுவரையும் வரக் காணோமே? எங்களுக்குங் கண் தெரிகின்றதே இதென்ன வாச்சரியமென்றிருக்கையில் மகனும் மருமகளும் வந்து சாஷ்டாங்கமாகத் தண்டமிட்டு அம்முதியவர்களுக்குக் கண் தெரிவதைக் கண்டு சந்தோஷங் கொண்டமைந்தனையும் மருமகளையும் வாரி அணைத்து முத்தமிட்டு, காலையில் போன நீங்கள் இது காறும் வாராமலிருந்த காரணமென்ன வென்று கேட்டனர். சாவித்திரியானவள் ஆதியோடந்தமாய் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லக் கேள்வியுற்று மாமனாரும், மாமியாரும், மருமகளுடைய மகத்துவங்களை நினைந்து ஆநந்தப் பரவசராய், அம்மணி! சிந்தாமணி! பாக்கியவதி! நீ எங்கட்கு மருமகளாய் வாய்த்த போதே இனியாது குறைவு எங்கட்குள்ளதென்று சொல்லி, வனத்தில் யாவரும் வாழ்ந்து கொண்டிருக்கு நாளில், சாலுவதேசத்தை சண்டையிட்டுப் பறித்துக்கொண்ட சத்துருவானவன் இறந்துபோனான். பட்டணத்திற்கு அரசனில்லாமையால் பழைய மந்திரிகள் யானையை அலங்கரித்துக் கொண்டு வனத்திலிருக்குஞ் சாலுவதேசாதிபதியைக் கண்டு வணங்கி யானையின் மேலேற்றிக் கொண்டு வந்து ராஜ பட்டாபிஷேகஞ் செய்தமையால், பழையபடி அசுவபதி ராச்சிய பரிபாலனஞ்செய்து வந்தான்.

## 21.—ஸ்திரீகளுக்கு நல்ல ஆபரணம் பதிவிரதா தர்மம்.

சாதாரணமாய் ஸ்திரீகள் நல்ல வஸ்திரங்களையும் விலையேறப் பெற்ற ஆபரணங்களையும் அணிந்துகொள்வதில் மிக்கப் பிரீதியுடையவர்களாய் இருக்கின்றார்கள். பெரும்பாலும் ஏழைஜனங்களின் ஆபரணங்கள் வெள்ளி, பித்தளை முதலியவைகளால் செய்யப்பட்டிருக்கின்றன. விசேஷ ஐஸ்வரியமுள்ளவர்கள் பொன், வெள்ளி, நவரத்தினங்கள் முதலியவைகளாலியற்றிய ஆபரணங்களால் அலங்கரித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். அநேகஸ்திரீகள் படாடோபமாய் வெளியில் பார்ப்பவர்கள் பிரமிக்கத் தக்கபடி அலங்கரித்துக்கொள்ளக் கருதுகிறார்கள். ஆங்கிலேயநாட்டில் அரசுபுரிந்த நமது சக்கிரவர்த்தியாராகிய விக்டோரியா பெருமாட்டி யவர்கள் சாதாரணமாயுள்ள ஆடையாபரணங்களையே தரித்திருந்ததாகத் தெரியவருகிறது. அந்தம்மாளுக்கிருந்த ஐஸ்வரியத்தைப் போல் மற்றெவர்களிடத்திலுமில்லை. அப்படியிருந்தும் உபயோகமற்ற ஆபரணங்களை யணிந்து சுமந்ததில்லை. முக்கியமாய் அந்த இராணியார் தம்தேசத்தின் குடிகள் சுகப்படவேண்டிய முயற்சிகளே தமக்குரிய ஆடையாபரணங்களாய் நினைத்து வந்தார்கள். ஆபரணங்களை யணிவதால் கள்ளர் பொறாமைக்காரர்கள், துட்டர்கள் முதலானவர்களுடைய பயமதிகரிக்கின்றது. ஆபரணங்களையணிந்திருந்த பல ஸ்திரீகளும், குழந்தைகளும் பிராணச்சேதங்களடைவதை யாம்கண்டும் கேட்டும் வருகின்றோம். ஸ்திரீகள் மிகவும் தங்கள் ஆபரணங்களை இதரர்களிடத்தில் காண்பிக்க ஆவல்படுகிறதுவழக்கம். அது பெரியதப்பிதமான காரியம். புனாவில் ஓர் உயர் குடும்பத்திலிருக்கும் ஓர் ஸ்திரீயை ஒருவர் கண்டு, அம்மா! உங்கள் ஆபரணங்களெங்கே? அணிவதில்லையா! என்று கேட்டதற்கு, அந்த உத்தமஸ்திரீ, தன் சமீபமிருந்த பிள்ளைகளைச்சுட்டி, இதோ இவர்களே என் திரண்ட ஆபரணங்களென்றாள். அற்பபொருளாகிய ஆபரணங்களின்பேரில் பிரியத்தைக் செலுத்தாமல், தன்பிள்ளைகளை ஒழுக்கமாய் நடத்துகிற காரியத்தில் கருத்தாயிருந்தார். அவ்வாறு சிலகாலஞ்சென்றதின்பின், அந்தம்மாளால் கல்வியிலும், ஒழுக்கத்திலும் தேர்ச்சியடைந்துவந்தபிள்ளைகள் துரைத்தனச் சாலையிலும் வைதீகத்திலும் உயர்ந்த பதவியிலிருக்கின்றார்கள். இப்பேர்ப்பட்ட பிள்ளைகளைப்பெற்று, வளர்த்து, புத்திசாலிகளாக்கிய குணசாலியான அவர்கள் தாயை பாக்கியவதியென்று எல்லோரும் போற்றுகிறார்கள். இதற்குத் திருஷ்டாந்தங் குறள்,

"ஈன்றபொழுதிற்பெரிதுவக்குந்தன்மகனைச்
சான்றோனெனக்கேட்டதாய்." பூமியிலுள்ள பல ஆபரணங்களை யணிந்து மகிழ்ந்தபோதிலும், அவைகளொரு காலத்தில் யாதா மொருகெடுதியால் நஷ்டத்தைக்கொடுப்பிக்கும். அவ்வாறு நஷ்ட மென்பதைக்கொடுப்பிக்காதவிலையேறப்பெற்ற ஆடையாபரணங்களை யணிவதே மிகவுநன்று. அது எது எனில் பதிவிரதா தருமமொன்று தான். ஸ்திரீகள் விசேஷ ஆபரணங்களை யலங்கரித்துக்கொள்வ தற்குப் பதில் தங்கள் புருடர், மாமன், மாமி முதலான பந்துக்களி டம் நற்கிரியைகளைச் செலவுசெய்துவந்தாலதுவே தங்களை விலையே றப்பெற்ற ஆடையாபரணங்களால் அலங்கரித்ததாகும். ஸ்திரீகள் கல்வியைக்கற்றிருந்தபோதிலும் புத்தி, கற்பு முதலிய சுகுணங்கள் பெற்றிருப்பதே ஸ்திரீ தருமத்திற் கழகாகும். இதற்கு மூதுரை கூறும் உதாரணமாவது,

கல்லாதமாந்தர்க்குக்கற்றுணர்ந்தார்சொற்கூற்றம்
அல்லாதமாந்தர்க்கறங்கூற்றம்மெல்லிய
வாழைக்குத்தானீன்றகாய்கூற்றங் கூற்றமே
இல்லிற்கிசைந்தொழுகாப்பெண்.

## 22.—பதிவிரதைகளுக்குத் தேவர்களும் நிகரல்லர்.

விசிட்டாபுரமென்னும் பட்டணத்தில் கௌசிகன் என்றொரு வேதியன் குட்டநோயால் மிகவும் வருந்திக்கொண்டிருந்தான். அவன் மனைவி அங்ஙனம் நோயால் வருந்துங் கணவனைத் தெய்வமாகப்பா வித்து, அவனுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகள் வழுவின்றி நடத்திக்கொண்டுவந்தும், கொழுநன்நிட்டூரவார்த்தைகளால் வைது கொண்டுவருவான். இப்படிக்கொழுநனும் மனைவியும் இல்லறம்நடத் திக் கொண்டுவருகையில், ஒருநாள் மனைவியைநோக்கி ஓ பெண்ணே! இராஜமார்க்கத்திலுள்ள கணிகை மாதொருத்தியை இன்றுகண் டேன், கண்டது முதல் மதன் அம்பு என் மார்பைப்பிளக்கின்றது. இப்போது மாலையும் வந்துவிட்டது. ஆகையால் எனக்கிதுகாறுஞ் செய்துவந்த பணிவிடைகளைக் காட்டிலும் இப்போது காமத்தால் வருந்தும் என்னை யெவ்விதத்திலாவது அவளிடம் சேரச் செய்வை யேல், உனக்கு எல்லாவித நன்மைகளு முண்டாகும். அப்படி நீ செய் யா தொழியின் என்னுயி யுடம்பினைவிட்டு நீங்குமென்றனன். அங் ஙனங் காமத்தால் வருந்துங் கணவனுக்குத் திருப்தி செய்ய வெண்ண

முடையவளாய்த் தன்னுடையை நன் குடுத்து அம்மாதினுக்குக் கொடுக்கத்தக்க பணத்தினையும் கைக்கொண்டு, தோளில் கொழுநனைத்தாங்கி அவ்விராஜ மார்க்கமாகச் சென்றனள். அவ்வழியில் களவென்பது சற்று மறிந்திராத மாண்டவ்யரென்னும் மஹா இருடி களவுக்குற்றஞ்சாட்டப்பட்டுக் கழுமுனையிலேற்றப் பட்டிருந்தனர். இவ்விருளில் மனைவியின் தோள்மேல் செல்லுங் கௌசிகனது கால்பட்டு வருந்த, உடனே மாண்டவ்யருக்குக் கோபம்பிறந்து யாரால் காரணமின்றி யான் அசைக்கப்பட்டேனோ, அப்படிப்பட்ட அதமன் சூரியனை நோக்கினவுடன் நாசத்தையடையக் கடவனென்று சபித்தனர். இக்கொடுஞ்சாபத்தைக்கேட்ட கௌசிகன் மனைவி பொருதவளாய் அங்ஙனமாயின் சூரியன் உதயமாகாதொழிக வெனத்தானுஞ் சபித்தனள். பிறகு உலகமெல்லாம் இருள் சூழ்ந்து என்றும் இரவாகவேயிருந்தன. தேவர்கள் பிரமதேவனது கட்டளையால் அத்திரிமுனியின் பத்தினியாகிய அநசூயையை வழிபட்டு, அவ்வம்மையைத் துதித்தனர். தேவர்களால் பூஜிக்கப்பெற்ற அவ்வநசூயை யானவர் கௌசிகன் மனையாளது திருமனைக்குச் சென்றவுடன் அக்கற்புடையாள் எதிர்கொண்டு உபசாரத்தோடு மழைத்து க்ஷேமங்களை விசாரித்துப் பிறகு தாயே! என் சிறுகுடிலுக்கு எழுந்தருளியவாறெதுவோ என்னாலாயினும் என் கடவுளான தலைவராலாயினும் தேவருக்கு ஆகவேண்டிய கருமம்யாதோ என்று வினவினள். அப்போது அநசூயை யானவள் தேவர்கள் என்னிடம் வந்து குறையிறந்தனர். உன் வாய்ச்சொல்லினால் இராப்பகலும் அவ்விராப்பகலிலுண்டாம் நற்கருமம் இழந்தோராய் வருந்தி முன்போலப்பகலிரவ உண்டாகவேண்டுமென்று இரக்கின்றனர். அவர்கள் வேண்டுகோளால் நின் மங்கலத் திருமனைக்கு வந்தேன். ஆதலால் பகலே இல்லாதொழிந்தால் எத்தொழில் தான் நடக்கும். சூரியனைக்காணவிடின் மழை பெய்யுமா? மழையின்றாகில் உலகம் பிழைக்குமா? உன் வாய்ச்சொல்லினால் உலகமே பாழ்படுகின்றது. உலகமனைத்திற்கும் உண்டாயிருக்கும் பேரிடரை யொழிக்கவேண்டுமென்னுங்கருணையுனக்குண்டாகு மாயின் கற்புடையாளே! முன்போலச் சூரியோதயமாகும்படி அநுக்கிரகித்தலைச்செய்யென்றாள். பின்பு கௌசிகன் மாண்டவ்ய முனிவர் பெருஞ்சினங்கொண்டவராய்ச் சூரியனுதயமானால் நீ யிறந்தொழிவாயென்று என் தலைவரைச் சபித்தனரே யான் என் செயக்கடவேன் என்றாள். அதற்கு அநசூயை ஓ புண்ணியவதி! யான் சொல்லுஞ் சொல்லுனக்கு இனிமையாயிரு.பின், என் மொழியால் நல்லயாக்கை

யுடையவனாய்ப் பிழைத்திருக்கச் செய்கின்றேன். இதில் ஐயமில்லை என்றுற்றலைப்பாரென்று கூறினள். பின்னர் அக்கௌசிகன் மனைவி அநசூயையினது மொழியைக் கேட்டுச்சூரியனை வரப்பிரார்த்தித்த னள். உடனே கதிரவன் உதயகிரியில் தோன்றினான். பின்பக்க ணத்திற்றானே அக்கற்புடையாள் கணவன் ஆவி உடம்பினை விட் ட்டது. அவனும் நிலத்து வீழ்ந்தான். வீழ்கையில் அக்கற்புடையாள் தாங்கிக்கொண்டனள். அப்போது அநசூயை அவளை நோக்கி ஓ சௌபாக்கியவதி நீ வருந்த வேண்டாம் என்றுற்றலைப்பார். யான் நெடுங்காலமாக என் கணவரைத்தொழுது சிறுதவமுடையவளா யிருக்கின்றேன். என் மனமானது எனது நாயகரோடு கல்வி, அறிவு, ஒழுக்கம், வடிவு, அழகு, ஆற்றல், தவம், பெருமை செல்வமுதலிய வற்றுளொன்றாலும் ஒத்த வேறொருபுருடன் உள்ளானாகக்காணம விருப்பது எவ்வாறு சத்தியமாயிருக்கின்றதோ, அப்படிப்பட்ட சத்தி யத்தால் இவ்வேதியனும் நோயிழந்து, மீண்டும் இளமை பெற்று, உயிர்பெற்று எழுந்து, மனைவியோடு நூறுவருடம் பிழைத்திருக்கக் கடவன். என்கணவனுக்கு ஒப்பான வேறு தெய்வத்தினை நான் பாரா தது எவ்வாறு சத்தியமோ, அச்சத்தியத்தினால் இவ்வேதியன் மீட்டும் பிழைத்து நோயற்றவனாய் வாழ்க! நான் எப்பொழுதும் என் கொழு நரைப் பூசிப்பதற்கு மனம், வாக்கு, காயம் இவைகளால் வழுவின்றி முயல்வது எவ்வாறு சத்தியமோ, அந்தச்சத்தியத்தால் இவ்வேதியன் பிழைக்கக் கடவனென்று பிரமாணத்தோடும் முக்காலுங் கூறினள். பின்னர் அக்கௌசிகன் பிழைத்தெழுந்து, இளமைபெற்றவனாய் மனை வியோடு சகல போகமும் அநுபவித்துக் கொண்டு வாழ்ந்திருந்தான்

## 23.—மருமகளும் மாமி, நாத்திக்கொடுமையும்.

### ஆண்டிச்சியம்மாள் சொல்லும் கதை.

வீட்டுக்கு மருமகளே பெருமகள், மகனுக்கு மனையாட்டியாக வாய்த்தவள் மருமகளாயிருந்தாலும் அவளைத் தன் மகளைக் காட்டி லும் இரண்டு பங்கு அதிகமாகவே பாதுகாக்கவேண்டும். ஏனென் றால், அவளாலேயே பிள்ளைகள் பிறந்து கிளையோடித் குடும்பந்தழை க்கவேண்டி யிருத்தலால் அவள்தான் வீட்டுக்குடையவளாகின்றாள். அவளே வீட்டுக்கு எஜமானியாகவும் பணிப்பெண்ணாகவும் இருந்து உழைக்கவேண்டியவளாகின்றாள். அவள் எஜமானி யென்றதினாலே

மாமியார் மாமனார்நாத்தி முதலானவர்களை அடக்கியாள நினைக்கக்கூடாது. அவள் பணிப்பெண் என்றதினாலே அவளை மாமிமாமன் முதலானவர்கள் மாட்டுப்பெண் ஆட்டுப் பெண்ணென நினைத்து ஊளை அதிகாரம், பண்ணக்கூடாது. மருமகளை மாமியார் தன் பெண்ணைப் போலவும். மாமியாரை மருமகள் தன் தாயைப்போலவும் நினைத்து நடந்து கொள்ளவேண்டும். நாத்தியா யிருக்கப்பட்டவள் தான் பிறந்த வீடுதனக்குச் சொந்தமேயானாலும் வீட்டிற்பிறந்தபெண் நாட்டிற்கும் நாட்டிற் பிறந்த பெண்வீட்டிற்கும் வாழ்க்கைப்பட வேண்டுமென்பதை மனதிற் கவனமாய் வைத்துக்கொண்டு, வீட்டுக்கு வந்த மதனியைத் தனக்கு மேலானவளாகவே கொள்ளவேண்டும். ஏனென்றால் வீட்டுக்கு வந்தவளே வீட்டுக்குடைய எஜமானுக்கு மனைவியாகவும் எஜமானியாகவு மிருக்கிறாள். இவள் எஜமானியாய்வந்து வாய்த்ததினாலே அவ்வீட்டிற் பிறந்த நாத்தியை சாமான்யமாய் நினைக்கக் கூடாது. நாத்தியோ தன் எஜமானுக்கு இரத்தக் கலப்புள்ளவளாயிருக்கிறாள். அதனாலே அவள்படும் துக்கம் தன் மணாளனைச் சேரும். இவ்வளவு யோசனையோடு மருமகளும் மாமியும் நாத்தியுமாக மேன்மையாய் நடந்துகொண்டவர்களும் கொள்பவர்களும்வெகு பேருண்டு. இது இப்படியிருக்க, என்குறையைச் சொல்லுகிறேன்.

"பெண்பிறந்தார் யார்பட்டார் யான்பட்டப் பெருந்துயரம்"

"நான் ஒரு தனவான் வீட்டிலே பிறந்து, தனவான் வீட்டிலே வாழ்க்கைப்பட்டேன். நான் பிறந்த இடம் புதுவைமாநகர் புகுந்த உடம் பொன்னகரி. என் தாயார் இறந்தபிற்பாடு, என் தகப்பனார் இதற்குப் பதினாறு வருஷத்திற்குமுன் இராணுவவகுப்பில் தயகத்தராயிருந்த என்னுடைய அத்தை மகனுக்கு என்னைப்பாணிக்கிரகணஞ் செய்து கொடுத்தார். எனக்குக்கலியாணமாகி நான் புருஷன் வீட்டுக்குப்போன உடனே தூரதேசத்தில் வாழ்க்கைப்பட்டிருந்த என்னுடைய நாத்தனார் புருஷன் பிராணவியோகம் ஆனதாகச் சமாசாரம் வந்தபடியால் என் மாமியார் அந்த ஊருக்குப்போய்விட்டாள். அவள் திரும்பிவரப் பத்துமாதம் சென்றது. அந்தப் பத்துமாதக்காலமும் நானும்என்னுடையபர்த்தாவும், தேகமும் சீவனும்போலவும், கரும்பும்ரசமும்போலவும் அதிகப்பிரீதியாக வாழ்ந்தோம். எங்களுடைய சந்தோஷம் நீடித்திருந்தால் இந்தஉலகமே சதமென்று நாங்கள் எண்ணி விடுவோம், என்றோ, அல்லது வேறென்ன காரணமோ எங்களுடைய சந்தோஷத்தைக்கடவுள் மாற்றிவிட்டார். எப்படியென்றால், பத்துமாதத்துக்குப்பிறகு என்னுடைய மாமியும் அமங்கலியாய்ப்

போன அவளுடையமகளும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் எங்களுடைய கிரகத்தில் வந்து பிரவேசித்தது கிரகசாரமேவந்து பிரவேசித்ததுபோல ஆயிற்று. அவர்கள் வந்து நுழைந்தபோது நானும் என் பர்த்தாவும் அதிக நேசமாகச் சல்லாபித்துக்கொண்டிருந்தோம். அதைக்கண்டவுடனே அவர்களுக்குக் கோபம் பொங்கி, அவர்கள் எங்களைப்பார்த்த கடூரமானபார்வை ஆயிரங்கத்தி வெட்டுக்குச் சமானமாயிருந்தது. அந்தப் பார்வையில் நாங்கள் பட்டுப்போகாமற்பிழைத்தது யார்செய்த புண்ணியமோ தெரியவில்லை. நான் அவர்களைக்கண்டவுடனே அவர்களுக்கு நமஸ்காரஞ்செய்து, அப்பாலே போய்விட்டேன், என்மாமியார் பர்த்தாவைநோக்கி, "நான் உன்தகப்பனாரை விவாகஞ்செய்து இருபது வருஷம் வரைக்கும் மங்கிலியஸ்திரீயாயிருந்தேன். அந்த இருபது வருஷகாலத்திலும் இரண்டு வார்த்தைகூட என்னுடைய நாயகரிடத்தில் நான் பேசி அறியேன். வீட்டில் வந்து அடிவைத்த உடனே நாத்தனா புருஷனைத் தின்றுவிட்டவள் இடத்தில் உனக்கென்னபேச்சு என்றாள். உடனே என்பர்த்தா "நாத்தனார் புருஷன் இறந்துபோனால் என் பெண்சாதி என்ன செய்வாள். நான் என் பெண்சாதியிடத்தில் பேசினேனேதவிர அந்நியஸ்திரீயிடத்தில் பேசவில்லையே" என்றார் இதைக்கேட்டவுடனே "அந்தச்சிறுக்கி உனக்கு இவ்வளவு பேசக்கற்றுக்கொடுத்து விட்டாளா?" என்று என்மாமிகுதித்தகுதிப்பும் ஆடின ஆட்டமும், சதுருக்குவிட்டதேவடியாள் கூட ஆடமாட்டாள். என்னுடைய நாயகர் மானி ஆனதால் ஊர்சிரிக்கும் என்று பயந்து ஒன்றும், பேசாமல் இருந்து விட்டார். அன்றுமுதற் பல நாள்வரைக்கும் என் மாமியார் வாயும் நாத்தனார் வாயும் ஓயவே யில்லை அவர்கள் என்னுடைய கொட்டத்தை அடக்கவேணுமென்று தீட்சித்துக்கொண்டு, வேலைக்காரர்களை யெல்லாந்தள்ளிவிட்டுச் சகலவேலைகளையும் நான் செய்யும்படி என்தலைமேலே சுமத்தினார்கள். என்பர்த்தாவுக்கு அமுது படைத்தல், தாம்பூலங்கொடுத்தல் முதலியவேலைகளையும் நான் செய்கிறதாயிருந்தால் என்னுடைய சிரமங்களுக்கு ஒரு பரிகாரமாயிருக்கும் அந்த வேலைகளெல்லாம் அவர்கள் வகித்துக்கொண்டு, கஷ்டமானவேலைகளை எல்லாம் என் பங்கில்வைத்து விட்டார்கள். எல்லாரும் சாப்பிட்டபிறகு அவர்களுடைய உச்சிட்டத்துக்காக நான் காத்திருக்க வேண்டுமே அல்லாது. எனக்குப்பசித்தபோது நான் சாப்பிடக்கூடாது. அந்த உச்சிட்டமும் பாதிவயிற்றுக்குக் கூடப் பற்றுகிறதில்லை. என் மாமியும் நாத்தியும் வந்தநாள் முதல் நானும் என்புருஷ

னும் பேசுவது குதிரைக்கொம்பாகி விட்டது. நான் ஒரு பக்கத்திலும் அவர் ஒரு பக்கத்திலும் இருப்பதால் நாங்கள் ஒருவரை ஒருவர் பார்க்கக்கூடாமலும், நயன பாஷைக்குக்கூட இடமில்லாமலும்போய் விட்டது. இராக்காலங்களில் என்னுடைய பர்த்தாவின் படுக்கை அறைக்குள் நான் பிரவேசிக்காதபடி அந்த அறையின் வாசற்படி ஓரத்தில் தாயும்மகளும் படுத்துக்கொண்டு ஒருவர்மாற்றி ஒருவர் பாராகொடுக்கத் தலைபட்டார்கள்.

"இவ்வளவு துன்மார்க்கர்களுக்கும் இடங்கொடுத்துக்கொண்டு என் கணவர் உபேக்ஷயா யிருப்பது எனக்கு மனவேதனையா யிருந்தாலும், அவர் மானத்துக்குப்பயந்து மௌனமாயிருக்கிறாரென்றும் அவருக்கு என்னிடத்திலிருக்கிற அன்பு குறையாதென்று மெண்ணி, நான் சகல கஷ்ட நஷ்ட நிஷ்டூரங்களையும் பொறுமையுடன் சகித்தேன்; அப்படியிருக்க என்மாமியும் நாத்தியும் சிலவியபிசாரிகளை அடிக்கடி வீட்டுக்கு வரவழைத்து, அவர்களுக்கும் என் பர்த்தாவுக்குச் சிநேகத்தை உண்டு பண்ணச் சர்வபிரயத்தனஞ் செய்தார்கள். என்னுடைய கணவர் சொர்தஸ்திரீயினிடத்திலே பேசக்கூடாதென்று விலக்கி அந்நியஸ்திரீகளுடன் சகவாசஞ்செய்யும்படி முயற்சிசெய்த என்னுடைய மாமியும் நாத்தியும் எப்படிப்பட்ட பொல்லாதவர்களா யிருக்கவேண்டுமென்று நீங்களே உணர்ந்துகொள்ளுங்கள். இந்தக் கொடுமைகளை எல்லாம் தூரதேசத்திலிருக்கிற என் தகப்பனுருக்கு நான் கடிதமூலமாகத்தெரிவித்தால்உடனே எனக்குப் பரிகாரங்கிடைத்திருக்கு மென்பதில் சந்தேகமில்லை. என்பாட்டனார் இறந்தபிறகு என் தகப்பனுரே அவருடையதங்கையாகிய என் மாமியை வளர்த்து, விவாகஞ் செய்து கொடுத்ததுந்தவிர, அவள் விதந்துவானபிறகும் அவரே அவளையும் அவள்பிள்ளையாகிய என்பர்த்தாவையும் நெடுங்காலம் ஆதரித்து வந்தபடியாலும், அவர் துஷ்டகண்டகர் ஆனபடியாலும், அவரைக்கண்டால் கருடனைக்கண்ட பாம்புபோல் என்னுடைய மாமியும் நாத்தியும் அடங்குவார்களென்பது நிச்சயமே ஆயினும் புருஷன் வீட்டில் நடக்கிறகொடுமைகளைத் தகப்பனுக்குத் தெரிவிப்பது பதிவிரதைகளுக்குத் தகுதி அல்லவென்று கலகத்துக்கு ஆஸ்பதம் ஆகுமென்றும் நினைந்து, நான் என் தகப்பனுருக்குக்கடிதம் எழுதாமல் இருந்துவிட்டேன். என்னுடைய வருத்தங்களை எல்லாம் என் புருஷனுக்கு எவ்வகையிலாவது தெரிவிக்கிறதென்று நிச்சயித்துக்கொண்டு, ஒருநாள் நடுச்சாமத்தில் எல்லாருந்தூங்கின பிற்பாடு, நான் எழுந்து சத்தஞ்செய்யாமல் என் பர்த்தாவின் படுக்கை அறைக்கு

நேரேபோனேன். அந்த அறையின் வாசற்படி ஓரத்தில் இரண்டு காவற்காரிகளும் படுத்திருந்தார்கள். அவர்களுடைய காவலைக்கடந்து, உள்ளே போகிறதற்காக அவர்கள் இருவரையும் ஒரே தாண்டாய்த் தாண்டினேன். உடனே என் சேலைதடுக்கி அடியற்றமரம்போல அவர்கள் மேலே விழுந்து விட்டேன். அப்போது இருட்டாயிருந்த தால் அவர்கள் என்னைக்கையாலே தடவிப்பார்த்து, நான்றான் என்று கண்டு பிடித்துக்கொண்டு, என்னை அடிக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் என்னைப்பிடித்த பிடியைவிடாமல் அடித்தபடியால் நான் அடிபொறுக்கமாட்டாமல் நகத்தால் அவர்களைக்கீறினேன். அவர்கள் தங்களுடைய நகங்களால் தங்களைத்தாங்களே அதிகமாகக் கீறிவிட்டுக்கொண்டு, "கூ! கூ! எங்களைவந்துகொல்லுகிறாள்." என்றுகூவினார்கள். உடனே என் கணவர் விழித்துக்கொண்டு தீபத்துடன் எங்களிடம் ஓடிவந்தார். என்னைப்பார்த்த உடனே "உன்னுடைய அறையைவிட்டு இங்கே நீ என் வந்தாய்" என்று கேட்டார். நான் உண்மையான காரணத்தைச்சொல்ல வெட்கப்பட்டுக்கொண்டு, கள்ளப் புருஷன் வீட்டுக்குப்போய் அகப்பட்டுக்கொண்டவள்போல விழித்தேன். அந்த நீழலின் இருவரும் அவர்களுடைய காயங்களை என் புருஷனுக்குக்காட்டி என்னைப்பேய் பிடித்திருக்கிறதென்றும், அல்லது பயித்தியமாவது என்னைப்பிடித்திருக்க வேண்டுமென்றும் சாதித்தார்கள். என் கணவரும் அப்படியே அபிப்பிராயப்பட்டு, என்னைத் தள்ளிக்கொண்டுபோய், என்னுடைய அறைக்குள்ளாகவிட்டுக் கதவை இழுத்துச்சாற்றி, வெளிப்பக்கத்தில் நாதாங்கி போட்டு விட்டார். நான் புருஷனைப்பார்க்கப்போய் இப்படி வந்து சம்பவித்ததே என்று நினைத்து, அந்த இராமுழுதும் நான் அழுதகண்ணீர் அறை முழுதும் நிறைந்து விட்டது. மறுநாள் விடிந்த உடனே வைத்தியர்களும், மந்திரவாதிகளும் வந்து கூடிவிட்டார்கள். வைதியர்கள் எல்லாரும் எனக்குப் பைத்தியமென்று சாதித்தார்கள். மந்திரவாதிகள் எல்லாரும் எனக்குப் பேய்பிடித் திருக்கிறதென்று வாதித்தார்கள். அவர்களில் ஒருவன் என்னை நூற்றெட்டுப் பேய்பிடித்திருக்கிறதென்று சொன்னான். அதைக்கேட்ட உடனே என்னை அறியாமலே எனக்குக் கோபம் ஜனித்து அவ்விடத்திற் கிடந்த ஒரு கல்லை எடுத்து அவன் மேலே எறிந்தேன். என்னைப் பேய்ப்பிடித்திருக்கிறதென்பதற்கு இது பிரத்தியட்சமான ருசு ஆகிவிட்டது. உடனே என்னைப்பிடித்துக் கைவிலங்குகால்விலங்கு போட்டுவிட்டு, என் தலையைச்சிரைத்து, வைத்தியர் ஒரு பக்கத்திலும் மந்திரவாதி யொரு பக்கத்திலும் எனக்

குச்செய்த சித்திராக்கினைகளை விவரிக்க என்னுடைய ஒருவாய் போ தாது. நான் அவர்களைப்பார்த்து, "ஒரு உயிருக்கு இத்தனை எமன்கள் வேண்டுமா, எனக்குப்பைத்தியமுமில்லை பேயுமில்லை. என்னை வீணாக ஏன் வாதிக்கிறீர்கள்." என்று அவர்களுக்கு இரக்கமுண்டாகும்படி நான் கற்றவித்தைகளை எல்லாங் காட்டினேன். நான் சொல்வதெல் லாம் எனக்குப்பிரதிகூலமாய் முடிந்ததே தவிர யாதொரு அனுகூ லத்தையுஞ் செய்யவில்லை.

"நான் புருஷனோடு கூடியிருந்தகாலத்தில் எனக்குக் கர்ப்பம் உண்டாகி, அப்போது எனக்குத் தெரியாமலிருந்து, இப்போது சில கர்ப்பசின்னங்கள் தோன்றினபடியால் கருப்பிணியாயிருக்கிற என க்கு மருந்துகள் கொடுப்பது சரியல்ல" வென்றுவைத்தியர்களுக்குத் தெரிவித்தேன். நான்கருப்பிணியென்று தெரிந்தமாத்திரத்தில் என் னுடையமாமியும் நாத்தியும் அவர்களுடைய புருஷர்கள் அன்றைக் குத் தான் இறந்ததுபோற் கரை காணாத துக்கசாகரத்தில் அமிழ்ந்து முன்னையைப் பார்க்கிலும் நூறுமடங்கு அதிகமாக என்னைப் பகைக்க ஆரம்பித்தார்கள். என்னுடைய கர்ப்பம் அழியத்தக்க ஔஷதப்பிர யோகம் செய்ய அவர்கள் யத்தனமாயிருக்கையில், "ராக்ஷதனுக்கும் ஒரேபுரேக்ஷதன் உண்டு" என்பது போல, என்னுடைய மாமி யாரைமயக்கத்தக்க சாமியார் ஒருவர் வந்துசேர்ந்தார். அவர் யாரென் றால் என்னுடைய தகப்பனார்தான். அவர் என்னுடைய அலங் கோலத்தைப் பார்த்த உடனே உள்ளங் கலங்கி என்னைக் கட்டிக் கொண்டு கதறினார். பிற்பாடு எனக்கும் பைத்தியமா அல்லவா வென்று நிச்சயிக்கும் பொருட்டு; என்னைப்பார்த்து பலகேள்விகள் கேட்டார். அவர்களுக்கு நான் தகுதியான மறுமொழி சொன்னதுந் தவிர, நடந்த காரியங்களை எல்லாம் சுருக்கமாக அவருக்குத் தெரி வித்தேன். என்மாமி நாத்திகளின்மேல் அதிகமாக ஒன்றுஞ்சொல்லா மல், சர்மக்கோளாக அவர்கள்செய்த இரண்டொரு காரியங்களை வெ ளிப்படுத்தினேன். எனக்குப் பைத்தியமுமில்லை. பேயுமில்லை என்று என்தகப்பனார் கண்டு பிடித்துக்கொண்டு, என் கைவிலங்கு கால்வி லங்குகளை வெட்டிவிட ஆரம்பித்தார். உடனே என்மாமியார்ஓடிவந்து "அண்ணா, நீங்கள் செய்வதை யோசித்துச் செய்யுங்கள். விலங்கை நிவர்த்திசெய்தால் அவள் யாரையாவது உபத்திரவஞ் செய்வாளே" யென்றாள். இதைக்கேட்டவுடனே என் தகப்பனார் கோபாதிக்கராய் என் மாமியாரை எட்டி உதைத்தார். அவள் எட்டுக்குட்டிக்கரணம் போட்டுக் கொண்டு கீழே விழுந்தாள். நான் உடனே என் தகப்பனா

ருடைய காலைப்பிடித்துக்கொண்டு, "எய்தவனை நோகாமல் அம்பை நோவதுபோல எல்லாங்கடவுள் செயலாயிருக்க என்மாமியாரைக் கோபித்துப் பிரயோசனம் என்ன? நான்ஏதோ துஷ்கிருத்தியஞ் செய்ததற்காகக்கடவுள் என்னைத் தண்டித்தார், என்னுடைய அத்தையை மொத்த வேண்டாம். என்று பிரார்த்தித்தேன். அவர் உடனே என்னைநோக்கி, "அவள் ஆதியில்பெண் கேட்டபோது அவளுடைய துர்க்குணங்களைப்பற்றியே பெண்கொடுக்க நிராகரித்தேன். அவள் மறுபடியும் ஆயிரந்தரம் கெஞ்சிக்கேட்டுக்கொண்டதினாலும், சகோதரபக்ஷத்தினாலும் கிளியைவளர்த்துப் பூனைகையிலே கொடுத்தது போல உன்னைவிவாகம் செய்து கொடுத்தேன். அதற்கு வந்தலாபம் இதுதான்" என்றார். அந்தச்சமயத்தில் என்கணவர்வந்து என் தகப்பனாருக்கு நமஸ்காரஞ்செய்தார். அவரை என் தகப்பனார் பார்த்து, "நீ சௌரியவானென்று பெயர் வைத்துக்கொண்டு,உன் வீட்டுப் பெண்டுகளை அடக்கத்திறமை இல்லாமல் என்னை வரும்படி பலகடிதங்கள் அனுப்பினாய் இரண்டு துர்ப்பலமுள்ள ஸ்திரீகளை அடக்கச்சக்தி இல்லாத நீ, யுத்தரங்கத்தில் உன்னுடைய சத்துருக்களை எப்படிச் செயிப்பாய்" என்று பரிகாசஞ்செய்தார். என் புருஷன் என் தகப்பனாருக்குக்கடிதம் எழுதி வரவழைத்ததாக என் தகப்பனாருடையவார்த்தைகளால் வெளிப்பட்டபடியால், என்புருஷன் மீது எனக்குண்டாயிருந்த மனஸ்தாபங்களெல்லாம் ஒரு நிமிஷத்தில் பறந்து விட்டன. என் தகப்பனாரும் பர்த்தாவும் என் விலங்குகளைத் தறித்து, என் மாமியார் எனக்கு நியமித்திருந்தகாராகிருகத்தினின்று என்னைவிடுதலை செய்தார்கள். உடனே பைத்தியமும் தொலைந்தது. பேயும்பறந்தது. நோயும் பறந்தது. நான் பழையபடி என் பர்த்தாவை அடிக்கடி சந்திக்கவும் அவருடன் சம்பாஷிக்கவும் ஆரம்பித்தேன். இராக்காலங்களில் யென் பர்த்தாவினுடைய பள்ளி அறைக்கு என் மாமியும் நாத்தியும் செய்துவந்த காவலும் ஒழிந்தது. அவர்களிருவரும் என் பிதாவந்ததுமுதல், பெட்டிபாம்புபோல் அடங்கினார்கள். என்னுடைய கர்ப்பம் நாள்தோறும் முதிர்ந்து, பர்த்தாமாதத்தில் பாலசூரியன்போல ஒரு பாலனைப்பெற்று மகிழ்ந்தேன். ஆதலால், மருமகளும், மாமியும், நாத்தியுமாக ஒருகுடும்பத்திலிருந்தால் எல்லாரும் ஒத்துவாழ்வதே நலம். இல்லையானல் குடித்தனங்கெட்டுப் பாழாய்ப் போம்.

## 24.—பதிவிரதையாகிய ஓர் சௌராட்டிரப் பெண்மணி.

நமது தேசத்தின் வடமேற்கேயுள்ள குஜராத்து தேசத்தை யாண்டுவந்த சௌராஷ்டிர வரசருள் ஒருவனாகிய விஜயஸாஹு என்னும் அரசனிடந் தோழமை கொண்டிருந்த வீணனென்பவனொருவனிருந்தான். இவன் கல்வியறிவில்லாதவனானபடியால் காமாந்தகாரத்தில் மூழ்கினவனாயிருக்கும்போது மேற்படி அரசன் மனைவி எழ்நிலை மாடத்தின்மீது நின்றுகொண்டிருந்தாள். இவளைக் கண்ட வீணன் ஓடோடியும் மேல்மாடத்தை யடைந்து சரசகுறிப்பைக் காட்டினன். உடனே அம்மாது சிரோன்மணி அரசகுலத்திற் பிறந்தவளானபடியால் வெகு தந்திரத்துடன் ஐயா புருஷசிரேஷ்டரே! உம்முடைய குறிப்பு எனக்குத் தெரியவந்தது. இன்று வேண்டாம் நாளையாகட்டும் என்றுரைத்து, சரேலென்று கீழேயிரங்கி அந்தப்புறத்தை யடைந்தனள். காமப்பித்தேறிய வீணனோ! வெகு சந்தோஷத்துடன் மறுநாள் எப்போது வருமோ என்று எதிர் பார்த்திருந்தான். அரசன் மனைவியோ இந்தச் சங்கதியை அரசனோடு சொல்லலாமா? சொல்லக்கூடாதா? என்று யோசித்து, ஆமாம் சொல்ல வேண்டியது தான். இல்லாவிடில், "சமயம் வாய்த்தால் களவு செய்வான்" நாம் சொல்லாமலிருக்கக்கூடாது. பழுது வந்து நேர்ந்து விடுமென்று அரசன் அந்தப்புறம் வந்திருக்கும் சமயத்தில் மேல்நடந்த விஷயத்தை யறிவித்தாள். இதைக் கேட்ட அரசனோ, புன்சிரிப்புகொண்டு, அடி மாதரசே! இன்னமொருதரம் இப்படிச் சொல்லாதே! அவன் அப்படிச் செய்யமாட்டான். இது சுத்தப்பொய். நீ, சொன்னால் நான் நம்பவேமாட்டான். ஒரு வேளை அவனைப்போல் இன்னுமெவனாயினும் வேஷம் போட்டுக்கொண்டு வந்தானோ என்னமோ, பயித்தியம் பிடித்தவளே! நீ சொன்ன வார்த்தையானது அவன் காதிற்பட்டால் உயிரை இழந்துவிடுவான், அவன் குணம் எனக்குத் தெரியும், அவன் எனக்கு பால்யசினேகிதன், இதை யொருவரோடுஞ் சொல்லாதே வாயை மூடு, போதும் போதும் என்றான். அரசியோ, அரசனுக்கு நம்பிக்கை யில்லாததைக் கண்முன் காட்டிவிடலாமென்று அரசனை நோக்கி அரசே! "காதாரக்கேட்டால் பொய் கண்ணாரக்கண்டால் மெய்" என்றபடி, உமது கண்முன்னே காட்டுகிறேன்; அப்போதாயினும் உண்மையைத் தெரிந்து கொள்ளுங்களென்னலும், அரசன் கோபாவேசத்துடன், நீ அப்படி காட்டாவிட்டால் உன்னுயிரை என் கைவாளுக்கே இரையாக்குவேன் என்றுரைத்தான். அரசியும் ஒப்புக்கொண்டு, மறுநாள் தோழியரையழைத்து

அவர்களுக்கு ஓர் ஆள் நுழைந்திருக்கத்தக்க ஒரு கெட்டிப் பெட்டியைக் கொண்டுபோய் மேல் உப்பரிகையில் வைக்கும்படி உத்தரவளித்து, அரசனை அவ்வுப்பரிகையின் அருகில் அண்டத்தையளாவி நிற்கும் ஓர் ஆலமரத்தின் மேல் இருக்கச்செய்து தானும் உப்பரிகையின் மீது உலாவிக்கொண்டிருந்தாள். இவ்வரசி எப்பொழுது மேலே வருவாளோவென்று கண்ணோக்கமாயிருந்த வீணன், அரசனுக்கும் இவனுக்குமிருந்த நட்பையும் பின்வரும் தீவினையையும் கவனிக்காதவனாய் மேலே சென்று மிக்க காமாந்தகாரனாய் நகைமுகங்காட்டி சரசஞ்செய்து அரசியின் கையைப்பற்ற அருகே சென்றான். அரசியானவள் வீணனை நோக்கி, ஐயா அவசரப்படவேண்டாம்; அரசன் மேலே வருகிறேனென்று சொல்லியிருக்கிறார்; அவர் வரும் வேளையாய்விட்டது. நீ முன்பின் யோசியாமல் மேலேவரலாமா? சமயத்தை நோக்கியல்லவோ வரவேண்டும். ஆயினும் பெரிதல்ல. இதோயிருக்கும் பெட்டியில் புகுந்திரு அரசன் வந்து போனவுடன் உம்முடைய எண்ணத்தை முடித்துக்கொள்ளும் என்று பெட்டியிற்போட்டு தாளிட்டாள். அரசியின் சொற்படி ஆலமரத்தின்மீதிருந்து பார்த்துங்கேட்டுமிருந்த அரசன் கோபாவேசமுடையவனாய் இரங்கி ஓடிவந்து பெட்டியைத் திறந்து, "துஷ்டனுக்குச் சிஷ்டையுரியது" என்பதைக் கடைப்பிடித்து, இக்கொடியோனுக்குத் தண்டனை செய்வது அவசியந்தானென்று அவ்வீணனிடம் ஒன்றும் பேசாமல் தன் கையிலிருந்த கத்தியால் ஒரே வெட்டுவெட்டினான். அவ்வெட்டானது வீணனது வலது காலிற்பட்டு துண்டாய்விட்டது. இதற்குள் அரசியானவள் பரிதாபப்பட்டு அரசனது கோபத்தைதணியச்செய்து வீணனைப்பார்த்து ஐயா வீணரே! இப்படிப்பட்ட செய்கைக்குட்பட்டு அங்கப்பழுதானதால் உம்மை இனி யொருவரும் நேசிக்கமாட்டார்கள் என்று சொல்லி வேண்டிய திரவியங்களை அவனுக்குக் கொடுத்து ஊரைவிட்டு ஒட்டிவிட்டாள். இவ்வீணனை யொத்த அறிவிலிகள் இக்காலத்துஞ் சிலருளர்.

## 25.—கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா என்ற ஓர் பதிவிரதாசிரோன்மணி.

பூர்வத்தில் கௌசிகன் என்றொரு வேதியன் வேதாப்பியாசஞ்செய்து சன்மார்க்க உபதேசத்தை யடையவேண்டி வசிஷ்டர் ஆச்சிரமத்திற்குச்சென்று நெடுநாள் பாடங்கேட்டு வருகையில், ஒரு நாள்,

வெய்யிலினால் மிகவும் இளைத்து ஓர் மரத்தடியில் நிற்க, அந்த விருக்ஷத்தின் மீதிருந்த ஒரு கொக்கானது எச்சமிடுதலும், அது, இவர் தலையிற்பட்டவுடன் கோபம் பிறந்து கண்களைவிழித்துமேல் நோக்கவே, அந்தக்கொக்கானது வெந்து சாம்பலாய் விட்டது. இந்த வேதியன் தன்னைத்தானே நன்கு மதித்துக்கொண்டு நமக்கு மேலாகிய தவச்சிரேஷ்டர் மூவுலகிலு மில்லையென்று செருக்கடைந்து, அந்த ஊர் அக்கிராரத்துட் புகுந்து, ஒரு வீட்டினிடத்துப்போய் பவதிபிக்ஷாந்தேஹி யென்றிரக்க, அதைக்கேட்ட ஒருத்தமி, அச்சமயத்தில் தன் புருஷனுக்குங் கால்காங்களை மெல்லென வருடிக்கொண்டிருந்து தனது நாயகன் நித்திரை செய்தபிறகு, இந்த வேதியனுக்கு அன்னமெடுத்து வந்தாள். அதைக்கண்ட பிராமணன், கோபங்கொண்டு நான் பிக்ஷைக்கு வந்து கேட்டு எத்தனை நாழிகையாய் விட்டது, இது வரையில் உண்டு இல்லையென்று சொல்லாமல் என்னைக் காக்கவைத்தனையல்லவா. அதிதிக்கு உவசாரம் புரிவதைக் காட்டிலும் புருடனுக்குப் பத்திசெலுத்துவது பெரிதாவென்று கண்களைப் புரட்டிப்பார்க்க அந்த உத்தமி நகைத்துக்கொக்கென்று நினைத்தனையோ குலமுனியே! நீ அறியாதவன், உனக்குத் தருமத்தின் வழிதெரியாது. இன்னம் பக்குவப்படவேண்டியிருக்கிறது; என்னாயகனுடைய பணிவிடைகளில் நானிருக்கும்போது சர்வேச்சுரன் வந்து நின்றாலும் எனக்கு நிமித்தமில்லை. ஆகையால், நீர் கோபங்கொள்ளுவது அழகல்லவென்று சொல்லவே, பிராமணன் திடுக்கிட்டு நம்மிட்டுந் தெரிந்த கொக்கின் செய்தியை இவ்விடத்தில் இருந்து சொன்ன இந்தப்பாக்கியசாலி விரதசீலையாயிருக்கின்றாளென்று, மூன்றுதரம் வலம்வந்து பாதங்களில் வீழ்ந்து தன்னைமன்னிக்கும்படி வேண்டிக்கொண்டு சென்றான்.

## 26.—வேசையைவிட தாசியேபெரியவள், தாசியைவிட மனைவியே பெரியவள்.

ஒருநாள் நள்ளிரவில் ஒருதனிகன் தனக்கினியளான அவிசாரியின் வீட்டுக்குச் சென்றான். வழியில் அவனை ஓர் சந்நியாசிகண்டு, அப்பா! நீபோகுமிடம் எனக்குத்தெரியும் அவளிடம் போவதைவிட ஒரு தாசிவீட்டுக்குப்போ, அதனால் குறையொன்றும் வாராது குடிகெட்டால் உனக்குத் தீமையே விளையுமென்று சொல்லிப்போயினர். இதைக்கேட்ட தனிகன் தான்போகுமவசரத்தால் கவனிக்காதவன்

போற் சென்றான். மறுநாள் சந்நியாசி சொன்னது கவனத்துக்கு வந்தது. உடனே அவனது வேவுக்காரர்களை விட்டுச் சந்நியாசியை யழைத்து வரச்சொல்லி, தாசிக்கும் அவிசாரிக்கும் பேதமென்ன வென்று வினவினான். அதற்கவர் அப்பா! உன் சந்தேகத்தை நாளைக்கொழிக்கிறேன். அது இருக்கட்டும். இன்றிரவு அவுசாரி வீட்டுக்குச் செல்லும்போது கையில் ஒரு வாளேந்திச்சென்று அந்தவாளுக்கு அவளை யிரையாக்குகிறேனென்றுசொல்லி அவளால் பின் நடக்கும் விசேஷத்தையென்னிடம் வந்து சொல்லென்று கூறினார், அவர் வார்த்தைப்படியே அன்றிரவு தனிகன் கையில் வாளேந்திச்சென்று அவளை வெட்டுகிறேனென்று கர்ச்சித்தான் அவனது கர்ச்சனையைக்கண்ட அவள் திடுக்கிட்டு வெளியேசென்று (காமேப்பித்தேறி மூக்கையுமுலையையுமிழந்த சூர்ப்பநகையைப்போற்) பாசாங்குகாட்டி ஊராரை யொன்றுகூட்டி தனிகனை வீட்டைவிட்டோட்டி வேறொருபுருடன்மீதுமனத்தைநாட்டினாள். ஓட்டப்பட்ட தனிகன் அவள் நடத்தியமரியாதையை சந்நியாசியிடங் கூறினான். அவர் சரிசரியென்று அன்றிரவே அவனைப் பத்துப் பொன் கையிலெடுத்துக்கொண்டு அவனுக்குந் தனக்குந்தெரியாத ஒரு தாசி வீட்டையடைந்து பத்துப்பொன்னை அவளிடங்கொடுத்து விபசாரியிடஞ் சொன்னதைப்போற் சொல்லச்சொல்லியனுப்பினார். அவர் சொற்படியே தாசியினிடஞ்சென்று பத்துப்பொன்னை அவளிடங் கொடுத்து கூடிக்கலந்து நல்வார்த்தையாடி, அடீ அமிழ்தினுமினிய இதழமுதந்தந்த அன்னமே! நின் முகத்தழகைக்கண்டு மோகித்துப் பத்து பொன்னால் மனதாற்றிக் கொண்டும் இன்னம் ஓர் குறை என்மனதுட்படிந்து கிடைக்கிறது, அதையொழிக்கத்தக்கவள் நீயேயன்றி வேறொருவருமில்லை, சொல்லுகிறேன் கேள் : என் கையிலிருக்கும் வாளாலுன்னை வெட்ட இச்சை கொண்டிருக்கிறேனென்று வாளையெடுத்தான். அதற்கவள் கலுக்கென்று நகைத்து நாயகா! இவ்வளவு தானா பிரமாதம்! உடலொழியப் போகிறதேயன்றி உயிரழியப் போகின்றதில்லையேஎன்று மகாசந்தோஷத்துடன் அவள் அவன் பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்துக் கொண்டெழுந்து தலைகுனிந்து வெட்டச்சொன்னாள். அவளது குணாதிசயத்தையறிந்தவவன் சந்நியாசியிடம் வந்து சுவாமீ! கணிகைக்கும் அவிசாரிக்குமுள்ள வித்தியாசத்தை உம்மாலின்றறிந்துகொண்டேன் இனி கிருதார்த்தனானே என்று தெண்டனிட்டான். இவனுக்கேன் இந்த விதி! தந்தையையும், தாயையும், சகோதரரையும், உற்றாரையும் சேர்ந்திருக்கும் தன்னுடைய பார்யா யெங்கே போனாள். அவள்,

ஆதியந்தமில்லாச் சருவேச்சுரன் முதற்றெய்வமென்றும், தன்னை மணம் புரிந்தவன் இரண்டாந் தெய்வமென்றும், சிந்தையி லெண்ணியிருக்கின்றவளல்லவா. ஒரு நாள் அவனுடைய பார்யாஅவளுடைய தாய் தந்தையர் ஸ்ரீமந்நாராயணனுக்குத் திருவிழாநடத்தநினைத்து அவளை அழைத்தார்கள். அவள் அவர்களுடன்சென்று திருவிழாதரிசிக்க மனமில்லாதவளாய் அருந்தவமிருந்து என்னைப்பெற்ற அம்மையே! அப்பனே !! நீங்களியற்றுந் திருவிழா வைக்காணவருவதால் எனக்கொரு பிரயோசனத்தையுங் காணேம். எனக்குப் பிரயோசனங் கிடைப்பது என்நாயகனுக்குக் செய்யும் பணிவிடைகளினாலே தான். ஆதலால் அவரை க்ஷணப்பொழுதேனும்பிரிந்திருக்கமாட்டேன். அவரே எனக்குத்தெய்வம், அவர் சிற்றின்பமே எனக்கு மோக்ஷம், அவரோடுரைதலே சாலோக சாமீபம், அவர் கைதீண்டி மதமொடு அடித்தலே சாருபசாயுச்சியம் இப்படிப்பட்ட பெரும்பதவிகளெல்லாம் என்னாயகனிடத் தெனக்கிருக்கின்றது. ஆதலின் திருவிழா எனக்கவசியமில்லையென்று தாய்தந்தையருக்குக்கூறி அவர்களை யனுப்பிவிட்டாள். இவளது நற்சொல்லையுஞ் சிந்தையையுங்கேட்ட அவன் தாசியைக்காட்டிலும் மனையாட்டியே மேலென்று மகிழ்ந்தான். இப்படிப்பட்ட பதிவிரதைகள் இக்காலத்து மில்லாற்போகவில்லை.

---

## 27.—விபசாரத்தின் தீங்குகள்.

கள்ளப்புணர்ச்சியினால் உண்டாகிற இன்பம் அதிக அற்பமாக இருக்கின்றது. அந்தக்கிஞ்சித்து போகத்தினால் உண்டாகிற ஆபத்துகளும், பாவங்களும், பழிகளும் அபாரமாயிருக்கின்றன. ஒருவனை மதங்கொண்டயானை பின்னேதுறத்த, முன்னே புலிவரப்பயந்து ஆற்றிலேகுதிக்க, அவ்வாற்றிலே உள்ளபலமுதலைகள் அவனைப்பிடித்து விழுங்க, இப்படிப்பட்ட ஸ்திதியிலிருக்கிறவன் தாகத்துக்கு ஜலத்தைஅள்ளிக்குடித்துச் சந்தோஷித்தால் எப்படியோ! அப்படியே கள்ளப்புணர்ச்சிசெய்கிறவர்களுடைய நெஞ்சில் ஓயாத பயமும், நடுக்கமும், துன்பமும் குடிகொண்டிருக்குமே. இவ்வளவு அச்சத்தோடு அவர்கள் அடையும் இன்பம், துன்பமேயல்லாமல் வேறல்லவே. இந்த அற்பசுகத்தை விரும்பி மலைபோலப் பாவங்களையும், பழிகளையும், துன்பங்களையும் சம்பாதித்துக் கொள்ளுகிற ஸ்திரீ எவ்வளவு மதிகெட்டவளாக இருக்கவேண்டும்.

ஒருஸ்திரீ பரபுருஷனுக்குப் பெறுகிற பிள்ளைகளை அவள் தன் சொந்தப் புருஷனுடைய ஆஸ்திகளுக்குப் பாத்தியஸ்தர்களாக்குவது எவ்வளவுபெரிய அநியாயம். ஸ்திரீபுருஷர்கள் ஒருவர்க் கொருவர் உதவியாயிருக்கும் பொருட்டும், அவர்கள் பிள்ளைகளைப் பெற்று நன் மார்க்கத்தில் கொண்டுவரும் பொருட்டும், கலியாணத்தைக் கடவுள் நியமித்தருளினர். அந்தவிதிக்கு விரோதமாக உலகத்தில் வியபிசார தோஷங்கள் அதிகரிக்குமானல் புருஷனைப் பெண்சாதி மதியாமலும் பெண்சாதியைப் புருஷன்விரும்பாமலும், பிள்ளைகளைத் தாய்தகப்பன் மார்கள் பராமரிக்காமலும், தாய் தந்தைகளைப் பிள்ளைகள் பேணு மலும், கிரகஸ்தாச்சிரம தர்மங்கள்சரியாக நடவாமலும், உலகத்திற் குள் பெரிய விபரீதம் உண்டாகுமே. ஆகையால் ஸ்திரீகள் கற்புநிலை யைக் கைவிடாது காக்கவேண்டும். இதரயுத்தங்களில் சத்துருவுக்குப் பின்வாங்காமல் எதிர்த்துநிற்பவர்களே ஜெயமடைவார்கள். காமயுத் தத்திலோ வென்றால் எதிர்த்து நில்லாமல் ஓடுகிறவர்களே ஜெயங் கொள்வார்களாகையால், பெண்டுகள் அந்நியபுருஷர்களுடன் பேசா மலும் அவர்களைச் சொப்பனத்திலும் நினையாமலும், காமநூல்களை யும், கெட்டகதைகளையும், படியாமலும், கேளாமலும் நிர்மலமா யிருக்கவேண்டும்.

உலகத்தில் அந்நியஸ்திரீகளைக் கெடுக்க உபாயஞ் செய்கிற புரு ஷர்களும் இருக்கின்றார்களாகையால், ஸ்திரீகள் தகுந்த துணை இல் லாமல் ஒருபோதும் தனிமையாயிருக்கத்தக்கவர்களல்ல. புருஷன் வீட்டில் இல்லாதபோது அவர்கள் நற்குணமுள்ள பெண்டுகளைத் துணைதேடி வைத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் பிராணன் போனு லும் கற்புநிலைதவறுகிறதில்லையே என்கிற வைராக்கியசித்தம் உடை யவர்களாகஇருக்கவேண்டும். ஒரு அரசனுடைய கெட்ட எண்ணத் துக்கு ஒரு உத்தமி இணங்காமல் நிராகரித்தபொழுது, அவன் வாளை உருவிக்கொண்டு என்னை நீ சேராதிருப்பாயானல்உன்னைவெட்டிக் கொல்வேன் என்று கோபத்தோடுமொழிய, அதைக்கேட்ட பதிவிர தை அந்த அரசனை நோக்கி,

நரபதிநீயானலுநண்பர்பாதத்துகட்குன்
சிரமகுடநிகராமோ! சேர்கிலையேற்கொல்வனெனக்
கரவாளையுருவிநின்றாய்கற்பினுக்கோர்குறைவின்றித்
தரமாநீளெனைக்கொல்லிற்றந்தைதாய்குருநீயே.

பதிவிரதையின் மனம்வருந்தச்செய்த ஓ! துஷ்டா! நீ அரசனனாலும் என்துபர்த்தாவினுடைய திருப்பாதத்திலே ஒட்டிய தூசிக்குஉன்னு

டைய தலையிலிருக்கிற கிரீடமும் சமானமாகுமா? உன்னைச் சேரா விட்டாற் கொல்வே னென்று கைவாளை உருவி நின்றாய். என்னுடை கற்புக்குமட்டும் பங்கமின்றி என்னை நீ கொன்று விடுவாயானால் எனக்குத் தாயுந் தந்தையும் குருவும் நீயே என்று பிரதியுத்தரங் கூறினாள். மானத்திற்கு முன் பிராணனைத் திரணமாக எண்ணிக் கற்பைக் காப்பாற்றின அந்த உத்தமியை மற்றஸ்திரீகள் குருபீடமாகக் கொள்ளல்வேண்டும். அந்நியபுருஷனைச்சேருகிற ஸ்திரீக்கும் அந்த அந்நிய புருஷனுக்கும் தோஷம் துல்லியமாயிருந்தாலும் ஸ்திரீக்கு அந்நிய புருஷனால்கர்ப்பந்தரிப்பது முதலான தர்மசங்கடங்கள் சம்பவிக்க இடமிருப்பதால் அவளுடைய குற்றத்தை உலகத்தார் பெரிதாக எண்ணுகிறார்கள். சிலதருணங்களில் நிர்த்தோஷமான ஸ்திரீகளுக்கும் தோஷம்கற்பித்து அவர்கள்வியபிசாரிகளென்று அபாண்டமான பொய்யைக் கட்டிவிடுகிற உலகமானது வாஸ்தவத்தில் கெட்டுப் போனவளுடைய செய்கையை வெளிப்படுத்தாமலிருக்குமா? உதிரங்கள் கலவாத ஸ்திரீகளையும் கலந்ததுபோலப்பெருமையாகப் பொய் பேசுகிற புருஷர்களும் உலகத்தி விருக்கிறார்களே. இப்படிப்பட்ட புருஷர்கள் தங்கள் வாஸ்தவமாகச் சேர்ந்த பெண்களுடைய பழியை ஊரெங்கும் பறைசாற்றாமல் விடுவார்களா? ஆகையால்அந்நிய புருஷர்களுடைய காற்றும் தங்கள் மேல் வீசாமல் ஸ்திரீகள் சுத்தமனோநிர்மலமாக இருக்கவேண்டும் என்பதே பெரியோர் முழுகோரிக்கை.

## 28.—மூடபுருஷனும் அவனது உத்தமப்பெண்சாதியும்.

"ஒரு தனவானும் அவனுடைய பத்தினியும் ஒரு உயிரும் இரண்டு உடலும்போல ஒருவர்கொருவர் அதிக நேசமாகவும், பிரியமாகவும் நடத்து வந்தார்கள். கலியாணமாகிப் பத்துவருஷம் வரைக்கும் இவர்களைப்போல ஸ்திரீ புருஷர்கள் உண்டாவென்று யாவரும் சொல்லும்படியாக அவ்வளவு அந்நியோந்நியமாகவும், மைத்திமாகவும் வாழ்ந்தார்கள். பிற்பாடு சில துஷ்டர்களுடைய சகவாசத்தால் அந்தத் தனவானுடைய புத்திமாறி, ஒரு சோரஸ்திரீயினிடத்தில் ஸ்நேகஞ்செய்ய ஆரம்பித்தான். அவளுடைய ஸ்நேகம் அதிகரிக்க அதிகரிக்க, பத்தினியினிடத்தில் அவனுக்கிருந்த பிரியம் குறையத் தலைபட்டது. அவன் போஜனத்துக்கு மட்டும் வீட்டுக்கு வருகிறதே தவிர, மற்ற நேரமெல்லாம் வைப்பாட்டிவீடே அவனுக்கு வாசஸ்தலமாய் விட்டது, "வேண்டாப் பெண்சாதி கால் பட்டாற் குற்றம் கை

பட்டாற் குற்றம், என்பதுபோல வைப்பாட்டியினுடைய கோளைக் கேட்டுக்கொண்டு, சொந்தப் பெண்சாதியைத் தாறுமாறாக நடத்தவும் ஆரம்பித்தான். அவன் என்ன கொடுமை செய்தாலும் அதையெல்லாம் சகித்துக்கொண்டு அவனுடைய பிரியத்தைப் பொறுமையினாலும் வணக்கத்தினாலும் மறுபடியும் சம்பாதிக்க அவளாற் கூடிய மட்டும் பிரயாசப்பட்டும் அநுகூல சித்தியாகவில்லை. பிற்பாடு அந்த உத்தமி கடவுளே கதியென்று அவரிடத்திலே சகல நம்பிக்கையும் வைத்து, புருஷன் வரும்போது அவனுடைய பணிவிடைகளில் ஒரு குறைவும் இல்லாமல் சர்வ ஜாக்கிரதையாய் நடந்து வந்தாள்.

புருஷனுக்கும் பெண்சாதிக்கும் ஒரு சம்பந்தமு மில்லாமற் செய்துவிடவேண்டுமென்று அவனுடைய வைப்பாட்டி கருதி அவள் மேலே இல்லாத தோஷங்களை யெல்லாம் உண்டுபண்ணிச் சொன்னதுந்தவிர, அந்தப் பதிவிரதையினுடைய கற்புக்கும் பழுதுசொல்ல ஆரம்பித்தாள். அதை அவன் நம்பவில்லையென்று கண்டு அவனுக்கு நம்பிக்கை உண்டாகும்படியாக அந்தச் சோரஸ்திரீ ஒரு அபாண்டமான கற்பனைசெய்யத் தொடுத்தாள். எப்படி யென்றால் அந்த உத்தமி கள்ளப்புருஷர்களுக்குக் கடிதம் எழுதி, அவர்கள் அதற்குப்பதில் எழுதினதுபோல இரண்டு கடிதங்களை உற்பத்திசெய்து அதை அந்த உத்தமியினுடைய வேலைக்காரி கையிற்கொடுத்து, அவளுடைய மேசைக்குள்ளாக வைத்துவிடும்படி ஜாக்கிரதைசெய்தாள். அந்த வேலைக்காரி தன்னுடைய எசமானிக்குத் துரோகஞ் செய்ய மாட்டேனென்று முந்தி ஆக்ஷேபித்தாலும், பின்பு பணப்பிசாசின் ஏவுதலால் அந்தக் கடிதங்களைத் தன்னுடைய தலைவியின் பெட்டியில் ஒருவருக்குந் தெரியாமல் வைத்துவிட்டாள். இது நடந்த பிற்பாடு அந்தச் சோரஸ்திரீ அந்தத் தனவானைப் பார்த்து, "உங்களுடைய பெண்சாதி மேலே தோஷஞ்சொன்னால் நீங்கள் நம்புகிறதில்லை, உங்கள் கௌரவத்துக்குக் குறைவு வரக்கூடாதென்று நான் சொல்லுகிறேனே தவிர, எனக்கு ஏதாவது லாபமுண்டா? உங்கள் பத்தினியும் அவளுடைய சோரநாயகனும் ஒருவர்க்கொருவர் அடிக்கடி கடிதம் எழுதிக்கொள்வதாகவும் கேள்விப்படுகிறேன். அவளுடைய பெட்டி முதலானவைகளைச் சோதித்தால், கடிதங்கள் அகப்பட்டாலும் அகப்படலாம். நீங்கள் எப்படியாவது உண்மையைத் தெரிந்துகொள்ளுங்கள் என்றாள். உடனே அந்தத் தனவான் "நீயார் மூலமாகக் கேள்விப்பட்டாய்" என, அந்தத் துஷ்டை, "நான் அவர்களை இப்போது காட்டிக்கொடுக்கமாட்டேன். நீங்கள் உங்கள் வீட்டைப் பரிசோதித்துப் பாருங்கள்" என்றாள்.

"அவன் இதையும் நம்பாமல், போஜனத்துக்காகத் தன் வீட்டுக்குப்போனான். அவன் போஜனஞ் செய்த பிற்பாடு, அவனுடைய பத்தினிவந்து, உள்ளூரிலிருக்கிற தன்னுடைய தகப்பனார் வியாதியாயிருப்பதாகத் தான் கேள்விப்பட்டதாகவும், அவரைப் போய்ப் பார்த்துக்கொண்டு, உடனே திரும்பி வருவதாகவுஞ் சொல்லி உத்தரவு கேட்டாள். அவன் நிராடங்கமாய் உடனே உத்தரவு கொடுத்தான். அவள் போனபிற்பாடு, அவளுடைய பெட்டியைச் சோதிக்கும்படி வைப்பாட்டி சொன்னது ஞாபகத்துக்கு வந்து அவன் உடனே பெட்டியைத் திறந்து பார்வையிட்டான். அதில் அந்த இரண்டு கற்பனைக் கடிதங்களும் அகப்பட்டன. அவைகளை அவன் படித்துப் பார்த்தவுடனே பெண்சாதி மேலே கோபாக்கினி மூண்டுவிட்டது. அவள் அந்தச் சமயத்தில் இருந்திருப்பாளானால், தப்பாமற் பிராணபாயம் சம்பவித்திருக்கும். அந்தக் கடிதங்களில் ஒன்றில் அன்றைத் தினம் இராத்திரி பத்துமணிக்குக் கள்ளப்புருஷன் தன் பெண்சாதியிடத்துக்குவருவதாக எழுதியிருந்தபடியால், அவனும் வந்த பிற்பாடு இருவரையும் ஒரே முகூர்த்தத்திலே கொன்று விடுகிறதென்று நிர்ணயித்து, தன்னுடைய கோபத்தையும் அடக்கிக்கொண்டிருந்தான். தகப்பனாரைப் பார்க்கப்போயிருந்த அவனுடைய பாரி அஸ்தமிக்கிற சமயத்தில் வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்டாள். அவளை அவன் வாயில்வந்தபடி நிஷ்காரணமாய்த் தூஷித்துக் கொண்டிருந்தான். சில நாளாய்த் தூஷிப்பது அவனுக்கு வழக்கமா யிருந்தபடியால், அவள் எதிர் வார்த்தை ஒன்றுஞ் சொல்லாமல் மௌனமாயிருந்தாள். அவன் இராப்போஜனஞ் செய்த பிற்பாடு வழக்கப்படி வைப்பாட்டி வீட்டுக்குப் போகிறவன்போலப் புறப்பட்டு வெளியேபோய், சற்று நேரங் கண்மறைவாயிருந்து, ஒன்பதுமணி நேரத்துக்கு ஒருவருக்குந் தெரியாமல் தன் வீட்டுத் தோட்டத்துக்குள்ளாக வந்து, படுக்கை அறைப் பலகணி ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த பண்டிக்குள்ளாக நுழைந்து, ஆயுதபாணியாக உட்கார்ந்திருந்தான். அந்த இடம் எந்தப் பாகத்திலிருந்து யார்வந்தாலும் தெரியக்கூடியதாகவும், அறைக்குள்ளாக என்ன நடந்தாலும் பார்க்கக் கூடியதாகவும் இருந்தது. அந்த அறையிலிருந்த கடிகாரம் பத்துமணி அடித்ததை இவன் கேட்டவுடனே, கள்ளப்புருஷன் வருவானென்று நாலுபக்கத்திலும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தான். ஒருவரும் வரவில்லை. அந்தக் கடிகாரம் பதினொருமணியும் அடித்தது. அப்போதும் ஆண்பிள்ளையென்கிற காற்றுக்கூட வீசவில்லை. அவனுடைய பத்தினியோவென்றால்

அவன் வெளியேபோன நிமிஷமுதல் அந்தப் படுக்கை அறைக்குள் அழுதகண்ணும் சிந்திய மூக்குமாய்க் கடவுளை நோக்கி ஜெபித்துக் கொண்டிருந்தாள். அவள் இருந்த கோலத்தைப் பார்த்தால் தெய்வ பக்தி மேலிட்டு, தேகபரவசவாக இருந்தாளே தவிரக் கள்ளப்புருஷனுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவளாகக் காணப்படவில்லை.

"அவள் நெடுநேரம் தியான நிஷ்டையில் இருந்த பின்பு, நித்திரை செய்துக்கொண்டிருந்த தன் பிள்ளையை எழுப்பிச்சாதம் ஊட்ட ஆரம்பித்தாள். அந்தப் பிள்ளை சாப்பிடும்போது, "என், அம்மா அழுகுறீர்கள்?" என்றுகேட்க, அவள் ஒன்றுஞ் சொல்லாமலே சாதம் ஊட்டினாள். அந்தப்பிள்ளை மறுபடியும் சும்மாஇராமல், ஐயாபோய் விட்டார்களென்றோ அழுகிறீர்கள்? அவர்கள் தான் உங்களை அடிக்கடி திட்டுகிறார்களே அவர்கள் போனாற்போகட்டுமே, நம்மை இரக்ஷிக்கிறதற்கு என் பாட்டனாராகிய உங்கள் ஐயா இல்லையா? மாமா இல்லையா? என்றது. அவள் உடனே பிள்ளையைப்பார்த்து, "அப்படி எல்லாம் பேசாதே. உன்னுடைய ஐயா போய்விட்டால் நம்மை ஒருவருந் தாங்கமாட்டார்கள். உன்னுடைய ஐயா ஒரு குறைவுமில்லாமல் க்ஷேமமாயிருக்க வேண்டுமென்று சுவாமியைப் பார்த்துப் பிரார்த்தனை செய், என்றாள். இதைக் கேட்டவுடனே வண்டியிலிருந்தவனுடைய மனம் இளகவும் அவனுடைய கண்ணில் ஜலம் பெருகவும் ஆரம்பித்தன. அந்தப்பிள்ளை சாப்பிட்டு முடிந்தவுடனே, வேலைக்காரி அந்த அறைக்குள்ளாக ஏதோ காரியமாக வந்து நுழைந்தாள். அவளைக் கண்டவுடனே அந்தப்பிள்ளை தன் தாயாரைப் பார்த்து, "இவள் நேற்றைத்தினம் உங்களுடையபெட்டியைத் திறந்தாள். நான் வெளியே இருந்து ஜன்னல் வழியாகப் பார்த்தேன், என்றது, அவன், "நான் பெட்டியைத் திறக்கவேயில்லை என்றாள். உடனே அந்தப்பிள்ளை," நீ பெட்டியைத் திறக்கவில்லையா? ஏதோ சிலகடிதங்களை அந்தப் பெட்டிக்குள் வைக்கவில்லையா? என்றது. இதைக்கேட்டவுடனே அவளுடைய மனோசாட்சியும் குற்றஞ்சாட்ட ஆரம்பித்தபடியால் முன்னுக்குப்பின் விரோதமாக வாயில் வந்தபடி உளறினாள். அவளுடைய தலைவிக்குக் கடிதவிஷயமொன்றுந் தெரியாதானபடியால், காசுதிருடத் திறந்திருப்பாளென்று நினைத்து இனிமேல், நீ பெட்டியைத்திறந்தால் உன்னுடைய வேலையை இழந்துபோவாய், ஜாக்கிறதையாயிரு, என்று கண்டித்தாள். கொலைக்கு ஆயத்தமாகப் பண்டியிலிருந்த தலைவன் இந்தச் சம்பாஷணை

ளெல்லாம் கேட்டவுடனே, அவனுடைய சந்தேகம் ஓடவும் கத்தி உறைக்குள் நுழையவும் ஆரம்பித்தது. ஆயினும் உண்மையை நன்ருக அறியவேண்டுமென்று, அவன் சப்தப்படாமல், பண்டியைவிட்டுக் கீழேகுதித்து, அந்தத்தோட்டத்தில் ஒரு மூலையிலே தனிமையாயிருந்த வேலைக்காரி வீட்டுக்குப்போனன். அவள் அப்போது தான் உள்ளே நுழைந்து அந்தப்பிள்ளையால் வெளியான தன்னுடைய துன்மார்க்கத்தை நினைத்து நினைத்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள். எசமான் அவளைக்கண்டவுடனே கத்தியை உருவிக்கொண்டு, "நீ ஏன் என் பெண்சாதி பெட்டியைத்திறந்தாய்? உண்மையைச் சொல்லாவிட்டால் இந்தக்கத்திக்கு இரையாகுவாய்?" என்று பயமுறுத்தினன். அவள் உடனே கீழேவிழுந்து, அவனுடைய இரண்டு கடிதங்களைக் கொடுத்ததாகவும் ஒப்புக்கொண்டாள். இதைக் கேட்டவுடனே அவனுடைய சந்தேகம் நிவாரணமாகி, பத்தினியிடம்போய், அவளைக்கட்டித் தழுவிக்கொண்டு நடந்த காரியங்களையும், தான் அவளைக்கொல்ல நினைத்ததையும் சொன்னன். உடனே ஸ்திரீ புருஷர்கள் சமாதானமாகி முன்னிருந்ததைக் காட்டிலும் அதிகப்பிரீதியாய் வாழ்ந்தார்கள். அன்றுமுதல் அந்தத் தனவான் சோரநாயகியினுடைய ஸ்நேகத்தை விட்டுவிட்டான். அந்தப் பதிவிரதா சிரோமணியைப்போல நற்குணங்களாலும் தெய்வபக்தியினுலும் புருஷனுடைய பிரியத்தைச் சம்பாதிக்கப் பிரயாசப்படுவதே உத்தமம்.

## 29.—உலக்கைப் பூஜைசெய்த உண்ணுமுலையம்மாள்.

நீர்வளம் நிலவளம்பொருந்திய மல்லிகார்ச்சுனபுரம் என்ருெரு நகரமுண்டு. அந்நகரில் செல்வமிகுந்த தருமநந்தன செட்டியார் என்பவர்ஒருவர் இருந்தார். அச்செட்டியார் அதிகசிவபக்தர். அவர் தினந்தோறும் ஒருபண்டாரத்துக்கு அன்னம் கொடுத்துப்பிறகு தான் உண்பதுவழக்கம். அவருக்கோ மக்களில்லை. கொண்டமனைவியோவென்ருல் நித்தமும்பண்டாரங்களுக்குச் சோறு ஆக்குவதிலும், கறி சமைப்பதிலும், பரிமாறுவதிலும், வெகு வருத்தம் உண்டாவதினுல் புருஷன் செய்கிறது அவ்வுத்தமியாகிய உண்ணுமுலையம்மாளுக்குப் பொருந்தவில்லை. ஆயினும் இதைக்குறித்துப் புருடனுடன் சொன்னுல் யாதானும் தீங்கு உண்டாகும் எனக்கருதி ஓர் உபாயம் எடுத்தாள். அதாவது:—ஒருநாள் அந்தத் தருமநந்தனசெட்டியார் கடையிலிருந்து அவ்விடத்தில் வரக்கண்ட பண்டாரத்தை அழைத்து, என்

த்திலே மதனபிராம மகாராஜனென்னப்பட்ட ஓர் மண்டலேஸ்வரரி ருந்தார். இந்த இராஜன் மனைவியாகிய மந்தாரமாலை யென்பவள் வயி ற்றிலே யாமினி பூரண திலகையென்றொரு பெண்குழந்தை பிறந் தது. அக்குழந்தைக்குச் சகல கல்விகளையும் பயிற்றுவித்து, சாஹித் திய வித்தையையும் அப்பெண்ணுக்குக் கற்பிக்குமாறு வில்லணக வியை யழைத்து பயிற்பித்தார்; இந்த பெண்ணினுடைய கவிசாது ரியத்தையும் ரூபலாவண்ணியத்தையுங் கண்ட வில்ஹணன் என்னப் பட்ட பிராமணோத்தமன் இவளையே விவாகம் புரிந்து சுகஜீவியாய் வாழ்ந்திருந்தான். இப்பெண்ணின் கவிசாதுரியத்தையும் கல்விவிசே ஷத்தையும் வில்லண சரித்திரத்திலே காணலாம். இப்படியெல்லாம் இத்தேசத்துப் பெண்கள் படித்து பாண்டியத்திய மடைந்திருக்க, பெண்களைப் படிப்பிப்பது சாம்பிரதாயம் அல்லவென்று எப்படிச் சொல்லலாம்.

## 31.—திருடன் மூக்கிழந்த கதை.

ஒருநாள் இரவில் ஒரு தையற்காரன் அவனுடைய மேல்வேஷ் டியில் ஒரு ரூபாயை முடிந்துதோளிற் போட்டுக்கொண்டு தெருவீதி வழியாகப்போனான். அதைநிலா வெளிச்சத்தில் ஒரு திருடன் கண்டு அந்தத் தையற்காரனைப் பின்தொடர்ந்து சென்றான். திருடன்தொ டர்ந்துவருவதைத் தையற்காரன் கடைக்கண்ணாற்கண்டும் காணாதது போல் நடந்தான். திருடன் அரவஞ்செய்யாமற் கிட்டநெருங்கி அந் தமுடிச்சைக் கத்தரிக்கோலினாற் கத்தரித்தான். உடனே தையற்கா ரன் திரும்பி, அவன் கையிலிருந்த கத்தரியினால் திருடன் காதைக் கத்தரித்துவிட்டான். அந்த உபத்திரவம் பொருக்கமாட்டாமல் திரு டன் "கூகூ கொலை,கொலை" என்றான் உடனே தையற்காரன், கூகூ கொள்ளை, கொள்ளை, என்றான். பிறகு கள்ளன் தையற்கார னைப்பார்த்து "இந்தா உன்பணம்" என்று அவன் முன்பாக விட்டெ றிந்தான். தையற்காரனும் இந்தா உன்காதென்றுகொடுத்தான். திரு டன் வீட்டுக்குத்திரும்பி தன்பெண்டாட்டியிடம் மூக்கைக்காட்டி திருடப்போன என்கதி இப்படி ஆச்சுதே இனிநான் வெளியிற்போ னால் ஜனங்கள் பரிகாசஞ்செய்வார்களே என்றசப்தமிட்டழுதான். அதற்கு அவன் பெண்சாதி சொல்லவேண்டிய சமாதானவார்த்தைக ளெல்லாஞ்சொல்லி, "திருடன் பெண்டாட்டி கைம்பெண்டாட்டி." யென்பார்கள். அதைப்போல் தாங்கள் என்னைக்கைம்பெண்ணாக்கா மல் உம்முடைய உயிரைமாத்திரங்கொண்டு வந்தீரே! அதுவேபோது மானது. கடவுள்கிருபை அவ்வளவாவது நம்மீது படர்ந்திருக்கின் றதே. போனதுபோகட்டும். இனித்திருட்டுத்தொழிலை விட்டுவிட்டு நாட்டில்பிச்சையேற்றுண்பதே நலமாயிருக்குமென்று கூறினாள். அவனும் அவள்வார்த்தைக்கிசைத்து சிலநாள் பிச்சையெடுத்து காலட் சேபஞ் செய்துவந்தான். ஒருநாள் ஊரார் எல்லாம் ஒன்றாய்க்கூடி

அவனை மூக்கரையன்என்று பரிகாசஞ்செய்ய ஆரம்பஞ்செய்தார்கள். அவனுக்கோ வெட்கமதிகரித்தது. ஆனால் வெட்கப்படாதவன்போல் நின்று ஆகாயத்தை அண்ணாந்துபார்த்து ஸ்ரீமந்நாராயணா! ஜகத்ரக்ஷகா!! இந்தப்பாவியாகிய எனக்கேன் உம்முடைய சுயரூபத்தைக்காட்டுகின்றீர். இதோ இருக்கும் இந்தப்புண்ணியாத்மாக்களுக்குக் காட்டக்கூடாதா என்று பலமுறை தன்தலைமேல் இருகாங்களையுங் கூப்பி தோத்திரஞ்செய்து அவனைச்சூழ்ந்திருந்த ஊராரையெல்லாம்பார்த்து ஐயா ஐயமாரே! இதோகடவுள் தரிசனங்கொடுக்கின்றார். வந்து தரிசித்து ஆனந்தக்கடலில்மூழ்கி பரிசுத்தமடையுங்கள்! இந்நாள் போனால் வேறுநாள் சித்திக்காதே என்று மிகவருந்தின முகத்தையுடையவனாய் அவர்களை அழைத்தான். அவர்களெல்லாம் என்றைக்குஞ் சொல்லாதஇவன் இன்றைக்குச்சொல்லுவது மெய்யாகத்தானிருக்குமென்றுநம்பி எதோ கடவுளைக்காட்டென்றார்கள். இதோபாருங்கள் பகவான் கருடவாகனருடராய் நிற்கின்றார் என்றான். அவர்கள் எங்கட்குத்தெரியவில்லையே என்றார்கள். ஓ, ஓ, நீங்களெல்லாம் பாவிகள். அதனால் தெரியவில்லைபோலும் நீங்களெல்லாம் என்னைப்போல் மூக்கைஅறுத்துக்கொண்டீர்களானால் பரமபதநாதன்தரிசனங் கிடைக்குமென்று அவன்சொல்லு முந்தியே அவர்களெல்லாம் ஒருவர் மூக்கை ஒருவர்கடித்துப்போட்டுவிட்டு எதோ கடவுள் காட்டென்றார்கள். அப்போது அவனுக்குச்சிரிப்பு அதிகரித்தும் வெளியே வரவொட்டாமல் அடக்கி, நீங்கள்செய்த இந்ததப்பிதத்துக்கு கடவுள் தரிசனமகப்படுமோ? நான் உங்களை மூக்கை அறுத்துக்கொள்ளச்சொன்னேனே யொழிய, ஒருவர்மூக்கை யொருவர்கடித்துக்கொள்ளவாச் சொன்னேன்? மூக்கை அறுத்துக்கொண்டால்தான் கடவுள் கண்ணுக்குத்தோற்றுவார் என்றான். அவர்களோ தங்களுக்கிருக்கும் மூக்கின் உபத்திரவத்தைப் பொறுத்துக்கொண்டு மறுபடியும் கத்தியைக் கொண்டு கொஞ்ச நஞ்சம் ஒட்டியிருந்த மூக்கின் தண்டையும் அறுத்துப்போட்டு இதோ அறுத்துக்கொண்டோம். காட்டு என்றார்கள். அவனோ, ஐயமாரே! என்மேல் தப்பிதமில்லை. நான் சொன்னபோதே மூக்கை அறுத்துக்கொண்டால் கடவுளைப்பார்த்திருக்கலாம். எடுத்தபோதே நீங்கள் மூக்கை வாயால்கடித்து எச்சலாக்கிவிட்டீர்கள். எச்சலென்பது மனிதர்க்கே உதவாதே? கடவுள்மாத்திரம் எப்படி ஏற்றுக்கொள்வார்? உங்களுக்கெல்லாந் தெரியாதா? இனி நீங்களெல்லாம் முக்கரணம் போட்டாலும் கடவுள் அகப்படமாட்டார் என்று சிரித்தான். அவன்சிரித்ததைக்கண்ட அவர்கள் என்ன அப்பா! எங்கள்கதி உனக்குப்பரிகாசமாயிருக்கிறதா என்று கேட்டார்கள். அவன் என் ஒருவன் மூக்கைக்கண்டநீங்களெல்லாஞ் சற்றுமுன்என்னைப்பரிகாசஞ்செய்ததுமாத்திரம் ஞாயமாஎன்றுஎதிர்த்துக்கேட்டான். அவர்களெல்லாம் அவமானப்பட்டு வீட்டுக்குச்சென்றார்கள்.

முற்றிற்று.

# நூதனபுத்தகவிளம்பரம்

இதனால் சகலமானவர்கட்கும் தெரிவிப்பது யாதெனில் சென்னை பெரம்பூர் போஸ்டு சிவகாமி விலாச அச்சுக்கூடத்தில் தமிழ் புஸ்தகங்களும், இங்கிலீஷ் பாடசாலை புத்தகங்களும், ஆயுள்வேத அவுஷதங்களும், அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

| | ரூ. | அ. | [illegible] |
|---|---|---|---|
| உலகஉற்பத்தி யென்னும் பிரபஞ்ச உற்பத்தி | 2 | 0 | 0 |
| சிவவாக்கியம் 1000-பாடல் உயர்ந்தபதிப்பு | 0 | 8 | 0 |
| வேமன்ன யோகிஸ்வரர் பத்தியம் 1000 பாடலுக்கு மூலமும் உரையும் | 1 | 0 | 0 |
| | 0 | 8 | 0 |
| வன்னியநாடகம் | 0 | 8 | 0 |
| உலக விசித்திரக் கதை | 1 | 0 | 0 |
| பதிவிரதைகள் (44) சரித்திரம் | 0 | 12 | 0 |
| விஷவயித்திய சிந்தாமணி | 0 | 12 | 0 |
| இராஜவம்ச பரம்பரை | 0 | 10 | [illegible] |
| சரீர சாஸ்திரம் | 0 | 8 | 0 |
| நஷ்ட-ஜாதக கெனிதம் | 0 | 8 | 0 |
| நவகண்டஆரூடம் | 0 | 8 | 0 |
| உயிரெழுத்து மூலிகைமர்மம் | 0 | 8 | 0 |
| கண்கட்டு வித்தை | 0 | 6 | 0 |
| சகாதேவர் சோதிடநாடி | 0 | 6 | 0 |
| திருநேத்திர சிந்தாமணி | 0 | 5 | 0 |
| மதிகெட்டான் நாடகம் | 0 | 4 | 0 |
| ருது ஜெனன ஜாதகம் | 0 | 4 | 0 |
| சர்வ கனவின்பலன் | 0 | 4 | 0 |
| வாந்திபேதி நிவாரணி | 0 | 4 | 0 |
| சத்தகராதி | 0 | 4 | 0 |
| சர்வபிரயாண சகுன சாஸ்திரம். | 0 | 4 | 0 |
| சுருக்கு பஞ்சபட்சி | 0 | 2 | 0 |

இப்படிக்கு,

சிறுமணவூர்-முனிசாமி முதலியார்,

பிரம்பூர் போஸ்டு, மதராஸ்.